# தேர்ந்த கட்டுரைகள்

கூடுதலான படைவீரர்களைக் கொண்டிருப்பது ஒரு சிறந்த இராணுவக் கட்டமைப்பாகாது.

103804

3162

தமிழீழ விடுதலைப் புலிகளின் படைத்துறைத் திறமையும், குறிக்கோளும்

JPL
C3162

வெளியீட்டுப் பிரிவு
அரசியற்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
மே 1994

வெளியீடு - 24

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# தேர்ந்த கட்டுரைகள்



அதிக படைவீரர்களைக்
கொண்டு இருப்பது
சிறந்த கட்டமைப்பாகாது

103804



எப்பொழுதும் எனது
உயிருக்கு ஆபத்து
இருக்கிறது.



சினிமாவில் உச்சம்
அரசியலில் தோல்வி

103804 C.C

# வாசகர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 23 ஆவது வெளியீடாகும்.

இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் சில சரியானவை அல்ல. கட்டுரைகளை வாசித்து அதில் வரும் தகவல்கள், கருத்துக்களிலுள்ள சரியானவற்றையும், தவறானவற்றையும் பகுத்தறிய வேண்டிய கடமை வாசகர்களாகிய உங்களின் திறமையிலேயே அடங்கியுள்ளது.

பல்வேறுபட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்தும் இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

320.5712

KOHA
JPL

# உள்ளே


| விடயம் | பக்கம் |
|---|---|
| 01. மலை நாட்டுத் தமிழர்களின் பிரச்சினை | 01 — 10 |
| 02. எலும்புக் கூடுகளின் வெறும் ஓடுகளிடையே எழுதப் பட்ட கம்பூச்சியாவின் சோக முடிவு | 11 — 16 |
| 03. எப்பொழுதும் எனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது | 17 — 24 |
| 04. இனவெறிக்கு உதாரணம் | 25 — 28 |
| 05. திரைப்பட உலகில் வெற்றிக்கொடி நாட்டிய சிவாஜிகணேசன் அவர்கள் அரசியலில் தோல்வியையே சந்தித்துள்ளார் | 29 — 34 |
| 06. அரசசார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட புதிய சட்டங்களை அடிப்படை உரிமைகள் இயக்கம் ஆட்சேபித்துள்ளன | 35 — 37 |
| 07. "புத்ததர்மப் போதனை" என்னும் புத்தகத்தை எதிர்க்காவிடின் எதிர்காலப் பரம்பரையின் நிமித்தம் கண்ணீர் விட நேரிடும் | 38 — |
| 08. அதிகார ஆசை பிடித்த அரசியலின் முடிவு யுத்தமே | 45 — 50 |
| 09. கூடுதலான படை வீரர்களைக் கொண்டிருப்பது ஒரு சிறந்த இராணுவக் கட்டமைப்பாகாது | 51 — 57 |
| 10. மேதினத்தின் பின்னணி | 58 — 59 |

11. அமெரிக்க சனாதிபதி மாற்றுக் கட்சியினருடன் உடன்பாட்டை எய்த விழைகின்றார் 60 — 61

12. நிலநடுக்கம் ஏற்படுவதை மிருகங்கள் முன் கூட்டியே தெரியப்படுத்துகின்றன 62 — 64

13. மனிதர்களின் ஆளுமையை அறிய உமிழ்நீர் வாங்கும் நிபுணர் 65 — 69

14. தமிழீழ விடுதலைப் புலிகளின் படைத்துறைத் திறமையும் குறிக்கோளும் 70 — 76

15. பாதுகாப்பை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் இராணுவக் கல்லூரியில் போராளிகள் பயிற்றப்படுகிறார்கள் 77 — 86

16. இடி அமீன் 87 — 93

17. உலக சாதனை படைத்தவர் 94 — 104

# மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினை

—தாரகி

(த ஐலண்ட் : 5-12-1993)

பெருந்தோட்டங்கள் சம்பந்தமாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் கடைப்பிடிக்கும் கொள்கையைத் தொடர்ந்து திரு. தொண்டமான் அவர்கள் காட்டிய அதிருப்தியின் காரணமாக எழுந்த அரசியல் அமைதியின்மையால், மலைநாட்டுத் தமிழரின் முக்கிய பிரச்சினைகள் மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்டத் துறையைத் தனியார் மயப்படுத்தும் திட்டமே அநேகமாக இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமாகவிருக்கின்றது. தோட்டங்களைத் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சனாதிபதி ரணசிங்கா பிரேமதாசாவின் அரசு முதன் முதலாக நடவடிக்கையை மேற்கொண்டபோது திரு. தொண்டமான் அவர்களும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினரும் அதை ஆதரித்து மலைநாட்டுத் தமிழர்களுக்கிடையே பிரச்சாரம் செய்தனர்.

மக்கள் தங்களிடையே கொண்டிருந்த பொதுவான அபிப்பிராயத்திற்கு முற்றிலும் எதிர்மாறாகத் தோட்டங்களைத் தனியார் மயப்படுத்துவதால் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் எனவும், அவர்களின் வாழ்வு மேம்படும் எனவும், தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களைப் பொதுவாகவும், தனது அங்கத்தவர்களைக் குறிப்பாகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு அந்தப் பிரச்சாரத்தின்போது நம்பவைத்தது. அன்றிலிருந்து அரசாங்கத்துடன் ஏற்பட்ட உடன்பாட்டுக்கமைய கீழ்க்காணும் விடயங்களுடன் தனியார் மயப்படுத்துவதும் அமுல் செய்யப்படுமென திரு. தொண்டமான் அவர்கள் வாக்குறுதி அளித்ததன் காரணமாகவே தோட்டத்திலுள்ள பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டனர்.

உடன்பாடு எட்டப்பட்ட விடயங்களாவன

அ) நில உரிமை.

ஆ) வீடமைப்புத் திட்டம் தோட்டத் தொழிலாளர்களின் தற்போதைய லயன். (அறைகளுக்குப் பதிலாக கிராமங்களை அபிவிருத்தி செய்யும்போது கட்டப்படுவது போன்ற வீடுகள்)

இ) இந்தச் சமூகத்தின் கல்வி மேம்பாட்டிற்காக அதிக வசதிகளை ஏற்படுத்துதல்.

ஈ) தொழிலாளர்களுக்குக் கூடிய வசதிகளும், கூடியநேர வேலைக்கேற்ப ஊதிய உயர்வும் வழங்குதல்.

வேலைசெய்யும் தோட்டங்களிலேயே தொழிலாளர்களின் வசிப்பிடங்களை அமைத்திருக்கும் முறை தற்கால நவீன முறையான உற்பத்தி மற்றும் தொழிலாளரைப் பயன்படுத்தும் முறை ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் பொருத்தமற்றதாகவும் முரண்பாடான ஒன்றாக இருப்பதாகவும் பொருளாதார ஆய்வாளர்கள் நீண்டகாலமாகக் கூறிவருகின்றனர். மறு புறத்தில் இதைக் கூறுவதாகில், தோட்டத்துறையின் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் போது தோட்டங்களில் வதிவிடங்களைக் கொண்ட தொழிலாளர் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தைப் பெருக்கும் துறையாக இதை மாற்ற வேண்டும். பொருளாதாரத்தைப் பெருக்க மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை காரணமாக இந்தத் துறையில் பணியாற்றும் பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களின் சேவை அவசியமற்றதாகிவிடும் என்பதையே இது குறிக்கின்றது. ஆகவே தனியார் மயப்படுத்துவதற்குத் தடையாக அல்லது குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய இந்தத் திட்டத்திலுள்ள பக்க விளைவுகள் இதைத் தடைசெய்யாதவாறு பார்த்துக்கொள்வது அவசியமாகும். ஒருநாடு தன் பொருளாதார மேம்பாட்டுக்காகப் பெரிதும் தங்கியிருக்கும் துறை ஒன்றைத் தனியுரிமைப்படுத்துவதன் காரணமாக எழும் விளைவுகளை எதிர்த்து நின்று சமாளிக்க வேண்டும் என்பதை, கட்டமைப்பின் மாற்றம் மேற்கொள்ளும் திட்டம் பற்றிய தங்கள் விதிமுறைகளைச் சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் அங்கீகரித்துள்ளன.

ஆகவே திரு. தொண்டமான் அவர்களின் கோரிக்கையான நில உரிமை, வதிவிட மற்றும் கல்விவசதிகள் ஆகியன தோட்டத்துறையை தனியார் மயப்படுத்துவதற்கு மாற்றத்தை மேற்கொள்ள அடிப்படையாக அமைகின்றன. தொழில்புரியும் தோட்டத்தில் வதிவிடத்தைக் கொண்ட முறையைக் கைவிடுவதால் தேவையற்றவர்களாக்கப்படும் தொழிலாளர்களை சந்ததைப்பயிர்ச்

செய்கை மற்றும் மேய்ச்சல் ஆகியவற்றிற்கு நிலம் இருப்பின், அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த, அந்த இடங்களில் குடியமர்த்தலாம். தனியார் உரிமையாக இருப்பதன் மூலமும், கிராம அபிவிருத்தித்திட்டம் போன்று அபிவிருத்தி அடையச் செய்யும் திட்டம்மூலமும் தோட்ட நிர்வாகத்தில் தங்கியிராது தொழிற்கல்வியை வழங்கக் கல்வி வசதிகளையும் வதிவிட வசதிகளையும் ஏற்படுத்தும் இடங்களிலும் இவர்களைக் குடியமர்த்தலாம்.

தனியார் மயப்படுத்தும் திட்டத்தை விரைவாகச் செயற்படுத்தவும் திரு. தொண்டமான் அவர்களின் ஆதரவை அதற்குப் பெறவும் அரசாங்கம் கொள்கை அளவிலேனும் இந்த விடயங்கள்பற்றி அந்த வேளையில் தீவிர கவனம் செலுத்தவேண்டியிருந்தது. தனியார் துறையின்கீழ் உற்பத்தியைப் பெருக்குவதையும், தொழிலாளர்களைப் பயன்படுத்துவதையும் கொண்டு வருவதால் எழக்கூடிய நெருக்கடிகளை அரசியல் ரீதியாகவும் சமூகரீதியாகவும் சமாளிக்க அரசாங்கம் அந்தவேளையில் கூடிய கவனத்தைச் செலுத்தியிருந்தது. ஏற்கெனவே தொல்லைகொடுக்கும் விடயமாகவுள்ள மேய்ச்சல்நிலம் மற்றும்பெரும் இலாபத்தைத்தரக்கூடிய உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய நிலத்திற்கான தோட்டத் தொழிலாளரின் கோரிக்கையும், உட்பகைகளும், தோட்டங்களில் வதிவிடங்களைக் கொண்ட முறையை மாற்றி தனியார் மயப்படுத்துவதன் விளைவாகத் தோட்டங்களைவிட்டு பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களை வெளியேறச் செய்வதால் தற்பொழுது வெளிப்படையாகத் தோன்றும் அரசியல் மற்றும் இனப்பூசல்களை அது மலைநாட்டில் தூண்டி அதிகரிக்கச் செய்து விடும். அத்துடன் கிராம அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளவை போன்று வீடுகளை அமைப்பது தோட்டத் தொழிலாளர்களின் வதிவிடங்களாக உள்ள லயன் அறைகளை இல்லாது செய்ய உதவும். தோட்டங்களிலேயே வதிவிடங்களைக் கொண்ட பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களைப் பராமரிக்கத் தேவையான கட்டமைப்புகளையும் லயன் அறைகளையும் செப்பனிட்டுப் பேணப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடவேண்டியிருப்பதால், நிர்வாக முறையையும் உற்பத்திப் பெருக்கத்தையும் நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான தொழிலநுட்ப வசதிகளையும், முதலீட்டையும் பெறமுடியாதிருக்கின்றது. ஆகவே பொருளாதார ரீதியாக நோக்குகையில், அபிவிருத்தி செய்வதற்குகந்த நிலவசதியுடன் கூடிய வீடமைப்புத்திட்டமே பொருத்தமான மாற்றுநடவடிக்கையாகும். தனியார் மயப்படுத்துவதற்கு ஆதரவு நல்க இதை ஒரு நிபந்தனையாக இலங்கைத்தொழிலா

ளர் காங்கிரசு முன்வைக்காவிடினும் பொருளாதாரத்தைத் தரும் மற்றைய துறைகளில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளருடன் இணைக்கமுடியாத இளைஞர்களுக்கு பல வாய்ப்பை அளிப்பதற்காகக் கல்வியில் அதிகவாய்ப்பை ஏற்படுத்துவது அவசியமானதாகும்.

மலைநாட்டில் தனது அரசியல் வலுவைப் பேணிக்காக்க விரும்புவதாலும், தனியார் மயப்படுத்தவிருக்கும் தோட்டங்களில் இந்திய நிறுவனங்கள் முக்கியமானபங்கை வகிக்க இருப்பதாலும் தனியார்மயப்படுத்துவதை விரைவாக நடைமுறைக்குக்கொண்டுவர விரும்பும் திரு. தொண்டமான் அவர்கள் இந்த விடயங்களில் கொள்கை அளவிலேனும் அரசாங்கத்துடன் உடன்பாட்டை எய்த ஆவலாகவுள்ளார். இந்திய நிறுவனங்களுக்காகவே திரு. தொண்டமான் ஆதரவைத் திரட்டினார் இதில் அவருக்கு மிகுந்த அக்கறை இருந்தது. வீடமைப்பு விடயம் சம்பந்தமாக உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டது. காணி பற்றிய விடயத்தில் திரு. பிரேமதாசா அவர்களுடன் ஆரம்ப கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த திரு. தொண்டமான் அவர்கள் எந்த அடிப்படையில் இதை முன்னெடுத்துச் செல்லலாம் என அறிய பின்வரும் கடிதத்தை அவருக்கு அனுப்பியிருந்தார்

11- மார்ச் 1991
மாண்புமிக்க ஆர். பிரேமதாசா அவர்கள்
சனாதிபதி,
இலங்கை சனநாயக சமதர்ம குடியரசு,
கொழும்பு.

மாண்புமிக்க சனாதிபதி அவர்களே,

இந்திய வம்சாவழியினருக்குக் காணி வழங்குதல்

15. 11. 1990இல் நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) குறிப்பிட்டது போல் இந்திய வம்சாவழியினருக்குக் குடியுரிமையுடன் கூடிய பிரசாவுரிமை வழங்கப்பட்டமையால் அவர்கள் இலங்கையைத் தாயகமாகக் கொண்ட மற்ற மக்களின் ஓர் அங்கமாக ஆகியுள்ளனர். தேசிய நீரோட்டத்தில் அவர்களை இணைத்துக் கொள்ள நீங்கள் காட்டிய ஆர்வத்தை நான் மிகவும் மதிக்கின்றேன் அவர்களுடைய அபிலாசைகளை நன்கு அறிந்தவனாகையால் அவர்களுடைய கோரிக்கைகளை முன்வைக்கின்றேன். நிலம் மற்றும் சொத்துரிமை ஆகிய அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்பது இவற்றுள் ஒன்றாகும். இந்த உரிமையை மதித்து நிலவுரிமையை வழங்

கும் கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு. தேசிய நில வளங்களை உபயோகித்தல் மற்றும் பகிர்ந்து அளித்தல் ஆகியவற்றிற்காக சனாதிபதியால் உருவாக்கப்பட்ட செயற் திட்டக் குழு இப்படியான ஒரு தேவையைப் பூர்த்தி செய்தற்காகவே அமைக்கப்பட்டது. நிலவுடமையை மாற்றுவதற்காக இந்தக்குழு சில செயற் திட்டங்களை வகுத்துள்ளது. இவற்றில் இந்திய வம்சாவழியினரின் நான்கு நிபந்தனைகள் சம்பந்தப்பட்டவையாகவுள்ளன. அந்த நான்கு செயற்திட்டங்களும் கீழே தரப்படுகின்றன.

1. பெருந்தோட்ட நிலப்பகுதி.
2. நிலச் சீர்திருத்த ஆணைக்குள் வரும் நிலப்பகுதி.
3. அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலப்பகுதி.
4. மகாவலி மேட்டு நிலப்பகுதி.

ஐந்தாவது விடயமாகவுள்ள மகாவலி நீர்ப்பாசன நிலம் சம்பந்தமான விடயத்திற்கு இப்போது அவ்வளவு முக்கியத்துவத்தைக் கொடுக்கா விடினும், கிழக்குப்பகுதியில் சமாதானத்தை ஏற்படுத்திய பின் நீர்ப்பாசன நிலங்களைப் பகிர்ந்து அளிக்கும் போது அதைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். முதல் நான்கு திட்டங்களுமே இப்பொழுது உடனடியாகக் கவனத்திற்கு எடுக்கப்படவேண்டியவையாகவுள்ளன.

பத்து இலட்சம் பேர்களாகவுள்ள இந்திய வம்சாவழியினரின் எட்டு இலட்சம் பேர் மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களில் வசிக்கின்றனர். 160,000 குடும்பங்களைக் கொண்ட இவர்களில், 98 விகிதத்தினருக்குச் சொந்த நிலம் அல்லது வீட்டு வசதியில்லை. உரிமையை இழந்த இம் மக்களின் குறைபாட்டைத் தீர்த்து வைப்பது மாண்புமிக்க தங்களதும், அனைத்து மக்களதும் கடமையாகும். நில உரிமை மாற்றத்தில் இம் மக்களுக்கு இருந்த ஆர்வம் நிலவுரிமையை அவர்கள் பெறாதகால் குன்றியுள்ளது. பழங்காலத்திலிருந்து வரும் இந்தச் சமநிலையற்ற நிலைமையைச் சீர்செய்யப் பின்வரும் நடவடிக்கையை மேற்கொள்ளும்படி நான் தங்களை வேண்டுகின்றேன்.

இந்திய வம்சாவழியினரின் நில உரிமையை அங்கீகரிப்பதை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் சமூக நலன்களை இந்த நாட்டு மக்கள் போல் அவர்கள் இருக்கும் தோட்டங்களிலுள்ள நிலங்களின் உரிமையை நிலமில்லாத படித்த வாலிபர்களுக்கு மாற்றிக்கொடுக்க வேண்டும். கிராம சேவகர் பிரிவு ஒன்

றில் நீண்ட காலம் வசித்தமையை அடிப்படையாகக் கொண்டே அப்பிரிவிலிருந்து ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மத்திய, ஊவா, மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களிலுள்ள தோட்டங்கள் அனைத்திலும் இந்த முறையையே கடைப்பிடிக்க வேண்டும். இப்படி உரிமை மாற்றிக் கொடுக்கவிருக்கும் தோட்ட நிலம் இந்த மூன்று மாகாணங்களிலும் 1280 ஹெக்டேயர் மாத்திரம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த நிலப்பரப்பு 7000 சிறு கூறுகளாக மாத்திரம் பிரிக்கப் போதுமானது.

மூன்று மாகாணங்களிலும் நிலச்சீர் திருத்த ஆணைக்குழுவிற்குள் வரும் நிலப்பரப்பு 2606 ஹெக்டேயர் ஆகும். இதை 10,000 சிறுகூறுகளாகப் பிரிக்கலாம். மகாவலி உயர் நிலத்தின் உரிமை மாற்றக்கூடிய நிலப்பரப்பு 802 ஹெக்டேயர் ஆகும் இதை 2000 பேருக்கு பகிர்ந்து அளிக்கலாம்.

ஆகவே மேற்கூறிய நான்கு திட்டங்களுள் மூன்று திட்டங்களில் 19,000 சிறுகூறுகளாகப் பிரிக்கக்கூடிய 4,788 ஹெக்டேயர் நிலப்பரப்பு மாத்திரம் உண்டு. இங்குள்ள முழு நிலப்பரப்பையும் வழங்கும்படி கேட்கவில்லை. நிலத்தை வழங்க ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்கள் தலைமுறை தலைமுறையாக அந்த இடங்களில் வாழ்ந்து வருகின்றார்களா என்பதையும் அவர்கள் சமூக நலனையும் கருத்தில் கொள்ளவேண்டும். மேற்கூறிய மூன்று திட்டங்களுக்கு அமைய நேர்மையாகவும் சரிசமமாகவும் இந்திய வம்சாவழியினருக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்தாலும், அவர்களில் சிறிய எண்ணிக்கையினரே அதனால் பயனடைவர்.

மூன்று மாகாணங்களிலுமுள்ள இன்னும் பகிர்ந்தளிக்கக் கூடியதாகவுள்ளதும் நான்கு திட்டங்களிலுள்ளதுமான 63,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக 58,214 ஹெக்டேயர் நிலப்பரப்பு உள்ளது. இந்தத் திட்டத்தில் தங்களுக்கும் நியாயமான பங்கு வழங்கப்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்ப்பது நியாயமானதே. சமமான காணிப் பங்கீட்டின் மூலம் ஏற்படுத்தும் நம்பிக்கை வேறு எந்தக் கொள்கையையும் விட தேசிய ஒருங்கிணைப்பை வலுப்படுத்துகின்றது.

காணி சம்பந்தமாக இந்திய வம்சாவழியினர் கொண்டுள்ள உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து ஆவன செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

உங்கள் விசுவாசமான,<br>
எஸ். தொண்டமான், பா. உ.,<br>
உல்லாசப் பயண, கிராமிய<br>
கைத்தொழில் அபிவிருத்தி மந்திரி.

சனாதிபதி பிரேமதாசா அவர்களால் அப்போதைய பிரதம மந்திரியான டி.பி. விஜேதுங்கா அவர்களிடம் இந்த விடயம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து மலைநாட்டு காணி விடயமாகத் திரு. தொண்டமான் அவர்களுடன் கலந்து ஆலோசிப்பதற்கு 16.7.91இல் விஜேதுங்கா கூட்டம் ஒன்றை நடாத்தினார். திரு. பாஸ்கரலிங்கம் அவர்களும், காணி நீர்ப்பாசனம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. ஏ. ஏ. விஜேதுங்கா ஆகியோரும் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அக் கூட்டத்தின் போது அரசாங்கத்துடன் எட்டப்பட்ட புரிந்துணர்வை அடிப்படையாகக் கொண்டு காணிப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என திரு. தொண்டமான் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தார்.

அத்துடன் கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் ஜேர்மன் அரசாங்கத்தின் உதவியுடன் கொட்டகலைக்கண்மையிலுள்ள 'பத்தனை'யில் அமைக்கப்பட்ட போதனாக்கல்லூரித் தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் எனவும், தோட்டத் தொழிலாளர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யப் போதிய எண்ணிக்கையிலான ஆசிரியர்களை தோட்டத் தொழிலாளர்களுக்கிடையே ஆண்டு தோறும் உருவாக்கும் எனவும் கருதப்பட்டது. இக் கல்லூரிக்கு முதன் முதலாக 1991இல் சேர்க்கப்பட்டவர்களில் 75 வீதமானோர் தோட்டத் தமிழர்களாகவும் ஏனையோர் சிங்களவராகவும் இருந்தனர்.

காணி, வீடு மற்றும் கல்வி வசதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாகவேனும் பெற்றுக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு அரசியல் ரீதியாக உணர்ச்சியைக் கிளறக் கூடியதாக மாறிவிட்ட இந்த விடயங்கள் தனியார் நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களிலுள்ள பூசல்களை நேர்முகமாக அல்லது மறைமுகமாக அதிகரிக்கச் செய்து, பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது தனது தலைமைத்துவத்தின் நம்பகத் தன்மையைப் பாதுகாத்துக்கொள்ளவும் மலைநாட்டுத் தமிழர்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் நோக்கமாகக் கொண்ட திரு. தொண்டமான் அவர்கள், 300 நாட்கள் கட்டாய வேலை என்ற பிரச்சினையை முன் வைக்கின்றார். எத்தனை நாட்கள் வேலை என்ற விடயத்தைவிட மேலும் பல முக்கியமான விடயங்கள் உண்டு என்பதை அவர் நன்கு அறிவார்.

தனியார் நிர்வாகத்தின் கீழ் தோட்டங்களில் வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கவும் பராமரிப்பதற்கும் குழுக்களை

பொது நூலகம்

அமைப்பதென 1991 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட உடன் பாட்டுக்கு அமைய இன்றுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த விடயங்களைக் கையாள்வதாகச் சொல்லப்பட்ட குழுக்களுக்கு சில தோட்டங்களிலிருந்து சில பெயர்கள் மாத்திரம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு அனுப்பிவைத்திருந்தது.

காணி சம்பந்தமாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நன்மைகளையும் தோட்டத் தொழிலாளர் காங்கிரசால் இதுவரை செய்ய முடியவில்லை. அத்துடன் தனியார்நிறுவனங்கள் சிலதோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பேற்றபின் அவருக்கு மிகுந்த ஆதரவை நல்கிவரும் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களை அவைவெளியேற்றிவிட்டு அவர்கள் வாழ்ந்த இடங்களைத் தோட்டத் தொழிலாளர் அல்லாதவர்களுக்கு வழங்கியது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு பெரும் எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

தோட்டத்தில் வாழும் தமிழர்களுக்குவழங்குவதற்கு ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை பத்தனையிலுள்ள போதனாக் கல்லூரிக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. சரஸ்வதி பூசை அன்று தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட சம்பவமும், கல்லூரிக்குப் பெயர் சூட்டும் விடயமும் பகைமையை வளர்ப்பதற்கு இந்தக் கல்லூரியைப் பற்றிக் குறைகூறவும் காரணமாக இருந்தது. இந்தப் பிரச்சினையும் இதைவிட முக்கியமான பிரச்சினையான கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான ஒதுக்கீடும் இரண்டாவது தொகுதியான மாணவர்களைக் கல்லூரியில் சேர்ப்பதற்குத் தடையாகவிருந்தது.

இந்த விடயங்களிலும் குறிப்பாகத் திரு. பிரேமதாசா அவர்களின் அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட காணி மற்றும் வீடமைப்பு போன்ற விடயங்களிலும் டீ பி விஜேதுங்க சனாதிபதியாகப் பதவியேற்ற பின் அக்கறைகாட்டாது புறக்கணித்துவிட்டார் என்பதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் மனக்குறையாகும்.

மந்திரி சபையாலும், ஐக்கிய தேசியக் கட்சியாலும் டீ. பி. விஜேதுங்கா சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதால், திரு பிரேமதாசா அவர்களின் ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்திற்கும் திரு தொண்டமான் அவர்களுக்கும் இடையே எட்டப்பட்ட உடன்பாட்டிற்குக் கட்டுப்பட்டு நடக்காமலிருக்கிறார் என்பதும்,

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் திரு. தொண்டமான் அவர்களுக்கும் இடையே எட்டப்பட்ட உடன்பாட்டை மக்களால் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதியாக இருந்தால் விஜேதுங்காவால் புறக்கணிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது என்பதுமே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிலைப்பாடாகும். காணி சம்பந்தமாகத் திரு. தொண்டமான் அவர்கள் சனாதிபதி பிரேம தாசாவுக்கு எழுதிய கடிதம் தொடர்பாக திரு. டீ. பி. விஜே துங்கா, திரு. தொண்டமானுடன் கலந்தாலோசிக்கக் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தியிருந்தாலும் அக்கூட்டத்தில் எட்டப் பட்ட உடன்பாட்டுக்கு அவர் பங்குதாரியாயிருந்தாலும் அவர் தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு வற்புறுத்துகின்றது.

தோட்டத்தில் வாழும் தமிழர்களின் நில உரிமையைப் பற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குள்ள அக்கறையை திரு.டீ. பி. விஜேதுங்கா இன்று புறக்கணித்துள்ளதுடன் தான் எந்தெந்த விடயங்களில் அக்கறையாகவுள்ளார் என்பதையும் தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

தனியார் மயப்படுத்தத் திரு. தொண்டமான் அவர்கள் வழங்கிய ஆதரவு இன்று அவருக்கே பாதகமாக அமைந்துவிட் டது. அத்துடன் அதிக இலாபத்தைப் பெற முயலும் தனியார் நிர்வாகம் அடிக்கடி அரசியல் சிக்கலை உருவாக்கும் மேலதிக மான தொழிலாளருக்கு மாற்றுத் தொழிலை வழங்க முன் வராததால் தனியார் நிறுவனங்களுக்கும் தொழிலாளர்களுக்கு மிடையே அடிக்கடி ஏற்படும் பிணக்குகள் திரு. தொண்டமான் அவர்களுடைய பிரச்சினைகளை மேலும் அதிகரித்துள்ளது.

ஆகவே தொழிலாளர்களுக்கிடையேயுள்ள மனக்குறையைப் போக்க திரு. தொண்டமான் அவர்கள் ஒன்றில் அரசியல் ரீதியாக நடவடிக்கையை மேற்கொண்டே ஆகவேண்டும். அல்லது தோட் டத்திலுள்ள தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனது பொறுப்பை இழக்கவேண்டி நேரிடும்.

தோட்டங்களிலுள்ள தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலை மைத்துவம் ஒரு கல்லில் இரு பறவைகளை வீழ்த்தப் பார்க்கிறது. பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசுக்கு ஒரு மாதகாலம் கொடுக்கவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தேசியசபை தீர்மானத்தைக் கொண்டுவந்த அடுத்த நாளே தோட்டங்களின் நிர்வாகத்தை இந்திய நிறுவனங்களிடம் ஒப் படைக்கவேண்டும் என்று செல்லச்சாமி யோசனை தெரிவித் திருந்தார்.

தனது மக்களின் நலனை மாத்திரம் பேண தன்னுடைய அரசியல் செல்வாக்கையும், வளங்களையும் உபயோகிக்காவிடில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு மாபெரும் தவறையே இழைக்கின்றது. தற்போது சிறை வைக்கப்பட்டிருக்கும் திரு இரா. சிவலிங்கம் அவர்களும், அவரின் சீடரான திரு. சந்திரசேகரம் அவர்களும் தன்மேல் அதிருப்தி அடைந்துள்ள தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கக்கூடியவர்களாக இருப்பதையும், தனது மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு உழைப்பதாக அம்மக்களை நம்பவைக்காவிடில் தனது தலைமைத்துவம் கேள்விக்குரியதாகிவிடும் என்பதும் திரு. தொண்டமான் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

# மோர்க்கார்டன் யுத்தம்
## (Battle of Mercarden)
(15 நவம்பர் 1315)

ஒஸ்றிய ஹப்ஸ்பேர்க்கினருக்கெதிரான போராட்டத்தின்போது இடம் பெற்ற மோர்க்கார்டன் யுத்தத்திற்தான் சுவிஸ் கூட்டரசு பெரியதொரு இராணுவ வெற்றியினை முதன்முதலில் ஈட்டிக்கொண்டது. 1314 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சுவிஸ் கூட்டரசில் அங்கம்வகித்த நாடுகளுள் ஒன்றான ஸ்க்ஸ்வைஸைச் சார்ந்தோர் அண்டையிலுள்ள ஐன்சிடெல்ன் (Einsideln) மண்டபத்தை (Abbey) முற்றுகையிட்டனர். இதைக்கண்ட ஹப்ஸ்பேர்க் கோமகன் ஒஸ்றியாவைச் சார்ந்த முதலாம் லியோபோல்ட் குறிப்பிட்ட அந்தப் பகுதி தனது ஆளுமைக்குட்பட்ட பிரதேசமெனக் கோரினார். எகெரி (Egerie), அகறிஸ் (Agerisee) ஏரியருகேயுள்ள மோர்க்கார்டன் கணவாயூடாக ஷக் (Zug) கிலிருந்து ஸ்க்ஸ்வைஸ்மீது ஆக்கிரமிப்பொன்றினை மேற்கொள்ளும் எண்ணத்துடன் உயர்குல குதிரைப்படை வீரர்களடங்கிய படையொன்றினை இவர் திரட்டியிருந்தார். ஆயினும், ஒஸ்றியப்படை கணவாயைத் தாண்ட முன்னரே ஸ்க்ஸ்வைஸைச் சார்ந்தோரும், ஊறி (Uri) யிலிருந்து புறப்பட்ட கூட்டரசுப் படையினர் ஒரு சிலருமாக ஒஸ்றியப்படைகளை மடக்கிப் பிடித்துக்கொண்டதுமல்லாது அவர்களுக்குள் 1500க்கும் மேற்பட்டோரை உடனடியாகத் தீர்த்துக்கட்டியதுடன் மற்றும் சிலரை ஏரிக்குள் தள்ளியும்விட்டு, எஞ்சியவர்களைச் சிதறியோடவுஞ்செய்திருந்தனர் இந்த யுத்தத்தில் அவர்கள் ஈட்டியவெற்றி கூட்டரசு பிளவுறாமலிருக்க உதவியது.

# எலும்புக்கூடுகளின் வெறும் ஓடுகளிடையே எழுதப்பட்ட கம்பூச்சியாவின் சோகமுடிவு

(லங்காதிப - 16.01.1994)

அது 1979ம் ஆண்டு. பொல்பொட் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டு, ஆகஸ்ட் மாதத்தில் மரணதண்டனையும் நிச்சயிக்கப்பட்டது. இதற்குக்காரணம் இலட்சக்கணக்கான மக்களை இரகசியமாகக் கொன்று புதைகுழிகளிற் போடப்பட்ட செயல் சாட்சிகளுடன் நிரூபிக்கப்பட்டமை ஆகும். அன்று பிணக்குழிகளிலிருந்து வெளியில் எடுத்த எலும்புக்கூடுகள், இளைஞர், யுவதிகள், முதியவர்களுடையது மட்டுமல்ல. பாடசாலை மாணவ மாணவிகள் ஆகியோருடையதுமாகும். பொல்பொட் என்பவர் உயிருடன் மனிதர்களைக் குழிகளிற் போட்ட, உலகத்தின் கொடூர ஆட்சியாளர்களில் ஒருவராவார். பொல்பொட்டின் எரியும் பிணக்குழிகளிலிருந்து எடுத்த எலும்புக்கூடுகளின் தன்மை பற்றிய கவலை தரும் கதையே இது.

*அன்று 1979 ஆகஸ்ட்மாதம் 19ஆம் திகதி கம்பூச்சியாவின் தலைநகரான நாம்பெனில் அமைந்த ஆலோசனை மண்டபத்தினுள் கம்பூச்சிய வரலாற்றில் மிக முக்கியமான தீர்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது. மக்கள் புரட்சிச் சபை மூலம் எடுக்கப்பட்ட அந்தத்தீர்மானம் அன்று முற்பகல் சரியாக 10.00 மணிக்கு அறிவிக்கப்பட்டது.*

*கம்பூச்சிய அரசாங்கத்தின் முன்னைய பிரதமமந்திரியான "பொல்பொட்" அல்லது "சலோக்சார்" அந்த அரசாங்கத்தின் பதிற் பிரதமமந்திரியாக இருந்த "ஜெங்சாரி" ஆகிய இருவரையும் கொன்றுவிடவும் அவர்களுடைய எல்லா உடைமைகளையும் அரசுடைமை ஆக்கவும் மக்கள் புரட்சி சபை ஏகமனதாகத் தீர்மானித்திருந்தது. அந்த வரலாற்று வழக்குத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.*

மண்டபத்திற் கூடியிருந்த எந்தத் தனிமனிசனுக்கும் வழக்குத் தீர்ப்புப்பற்றிச் சந்தேகமேயில்லை. அது மிகக் குறைந்த தண்டனை என்பதே அதிகமானோர் கருத்து. 1975 ஏப்பிரல் மாதம் 17ஆம் திகதியிலிருந்து 1979 ஜனவரி 7ஆம் திகதிவரையான குறுகிய காலப்பகுதியினுள் கம்பூச்சியாவில் நிர்வாக அதிகாரத்தைச் செலுத்திய பொல்பொட், ஜென்க்சார் ஆகியோரது படைப் பிரிவுகளாற் கொல்லப்பட்டவர்களது தொகை 30 இலட்சத்தைக் கிட்டியது: இது கம்பூச்சிய சனத்தொகையில் சரியாக அரைப் பங்கினருக்குச் சமம். மிகவும் மனிதத் தன்மையற்ற மிலேச்சத்தனமாகச் செய்யப்பட்ட அந்த மனிதக் கொலை பற்றிப் 10 இலட்சம் மக்கள் விசாரணைநீதிபதிகள் முன் சாட்சியம் சொல்ல ஆயத்தமாக இருந்தும் 40 பேர் மாத்திரமே சாட்சியம் சொல்ல அழைக்கப்பட்டவர்கள். அவர்களால் வெளியிடப்பட்ட தகவல்கள் பயங்கர துப்பறியும் மர்ம நாவலை விடப் பயங்கரமானவை. இந்தச் சாட்சி கூறுதலும், பார்த்துக் கண்டுபிடிக்க உதவிய பிணக்குழிகளும் பெருந்தொகையான பிணக்குழிகளிலிருந்து வெளியில் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளும் உலகுக்குக் கூறியது என்ன? வருடக்கணக்காகப் புனிதமான புத்தமதத்தின்படி தன் பண்பாட்டை வளர்த்த சிரேஷ்ட ஆசியநாடு மிலேச்சத்தனமான இரத்ததாகம் அல்லது இரத்தவெறிகொண்டவர்களது கைக்குட்பட்டதால் அடைந்த பெரும் அவலச் செய்திகளை கூறியது. மனிதர்களாக உள்ள, மனிதமிருகங்களின் கூட்டத்தினர் கையில், நாட்டின் அரசியல் அதிகாரம் செல்லும்போது, நிகழும் பேரழிவுக்கு, அண்மையில் எடுத்துக்காட்டக் கூடிய ஓர் நல்ல உதாரணம் கம்பூச்சியாவாகும்.

1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி பொல்பொட் ஜென்க்சாரி ஆகியோரது படைகளைப் பலாத்காரமாகத் துரத்தித் தேசியவிடுதலைக்காக கம்பூச்சிய ஐக்கிய முன்னணி நாட்டு நிர்வாகத்தைத் தன் கையில் எடுத்தது. அந்நாளிலிருந்து கண்ணீர்க்கதை எழுதப்பட்டது. மனித எலும்புக்கூடுகள் இலட்சக் கணக்காகக் கண்டெடுக்கப்பட்டன. இது பற்றிய செய்திகள் மயிர்க்கூச்செறியும் செய்திகளில் ஒன்றாகும். 1979 பெப்ரவரி மாத ஆரம்பநாட்களில் இது போன்ற எலும்புக்கூடுகள் நிறைந்த பிணக்குழிகளின் செய்திகளைக் கம்பூச்சியச் செய்திச் சேவைகள் அறிவித்தன.

இப்பிணக்குழிகள் மிகப்பிரபல்யமான றப்பர் தோட்டம் அமைந்த மாவட்டத்தில் இருந்தன. அது ''இட்பொங்க்'' என்னும் மாவட்டமாகும். பொல்பொட்டுக்கு கடும் எதிர்ப்புக்காட்டிய

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

இந்த மாவட்டத்துள் இருந்த மக்களை கொல்லும்படி பொல் பொட் இட்ட உத்தரவின்படி வேறு மாவட்டங்களிலிருந்து படை வீரர்கள் அங்கு சென்றனர்.

கம்பூச்சிய செய்திச்சேவைக்குக் கிடைத்த தகவல்களின்படி செய்தி அறிக்கையாளர் ஒருவரே (செய்தி நிருபர்) முதலில் இப் பிரதேசத்தைச் சோதனையிடச் சென்றார். அவர் முதலிற் "சூப்" என்னும் றப்பர் தோட்டத்துக்கே சென்றார். கொலை காரப் பொல்பொட்டிடமிருந்து உயிரைக் காப்பாற்றிக்கொண்ட கொஞ்சப் பேர் அவருக்கு வழிகாட்டினர். முதல் இடம் பாதையிலிருந்து 1100 மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது. அந்தக் கிராமம் "கிறேசிம்" என்பதாகும். மூன்று ஹெக்டேயர் அளவு பரப்புள்ள அந்தக்கிராமத்தில் 5 மீற்றர் விட்டமும், 10 மீற்றர் ஆழமும்உள்ள 30 குழிகள்கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வெல்லாக் குழிகளிலும் நடுவில் இருந்து 30 சென்றிமீற்றர் கனமான மண் தட்டுக்களை அகற்றியபோது மனித எலும்புக்கூடுகள் தெரிந்தன. அவை எண்ணற்றவை. அவை பெண்கள், குழந்தைகளது எலும்புக் கூடுகளாகும். அந்த வேளையில் பாதைகாட்டியவருடன் வந்த 21 வயதுப் பெண்ணான சாம்சாவுன் அந்தப் பிணங்கள் பற்றிக் கண்ணாற் கண்டதை விபரித்தாள். அவ்விபரம் பின்வருமாறு அவளது குடும்பஉறுப்பினர்கள் தொகை எட்டு. பொல்பொட்டின் பாதுகாப்புப்படைகள் முதலாம் நாள் இரவு அவர்களுடைய வீட்டுக்குவந்த மூத்தசகோதரனான "சாம்கோ ஆன்" இளைய சகோதரனான "சாம்கிரான்", "சாம்சிறான்" ஆகியோரைக் கொன்றுபோட்டனர். அவர்களில் எஞ்சியிருந்தவர் தாய் தந்தை சகோதரிமார் மூவரும் மட்டுமே. முழுக்கிராமமும் போர் வீரர்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தன. ஒழித்திருக்க இடமிருக்கவில்லை. எஞ்சியோர் மூச்சுவிடும் சத்தம் கூடக் கேட்டு விடும் என்ற பயத்துடன் சத்தமிடாது படுத்திருந்தனர். அடுத்த நாள் இரவு வந்த போர்வீரர்கள் அவர்களுடைய தந்தையான "சயமஸ்" சையும் கர்ப்பிணியாயிருந்த தாயையும் கூட்டிக் கொண்டு சென்றனர். அவர்களைக் கொல்லவே கூட்டிச் செல்லுகின்றனர் என நிச்சயமாக உணர்ந்த சகோதரிகள் மூவரும் குளறி அழுதனர். கறுப்புடை அணிந்திருந்த போர்ப்படையினர் அவர்களை அடித்துக்கொன்றதே அதற்குப் பதிலானது. தன் குடும்ப உறுப்பினர்களை எங்கே குழியிலிட்டனர் என அறிய முடியவில்லை.

அந்தக் கிராமத்தில் அதிகளவு குழிகள். அவற்றில் இரண்டைக் கிளறியபோது சிறியபாடசாலைப் பிள்ளைகளின தொப்பி உடுப்பு, செருப்பு ஆகியன தொகையாக வெளிவந்தன. அக்குழிகள் கம்பூச்சியாவுக்கு அமெரிக்கா குண்டு போட்டபோது ஏற்பட்ட

குழிகள். ஆதலால், இலகுவாகத் தோண்டமுடிந்தன. பாடசாலைப் பிள்ளைகளைக் கூட்டி வந்து, கைகளைப் பின்புறம் கட்டி கொன்றுபோட்ட விதத்தை எஞ்சியிருந்த கிராமவாசிகள் விபரித்தனர்.

அவ்விடத்திலிருந்து மேலும் பல மீற்றர் சென்றபோது 'பியங்வெங்க்' என்னும் வனம் வந்தது. அந்த இடத்தில் காயப்பட்ட பாதுகாப்புப் படைவீரர்களுடைய முகாம் வந்தது. அவ்விடத்திலிருந்த 12 குழிகளைத்தோண்டியபோது 3000 எலும்புக்கூடுகள் வெளிவந்தன. பொல்பொட் படைப்பிரிவின் கட்டளைப்படி இரண்டு 'புல்டோசர்களும்' அப்பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டது. தோண்டும் இயந்திரம் மூலமும் 3மீற்றர் அகலமும், 6மீற்றர் நீளமும், 2 மீற்றர் ஆழமுமுடைய பல குழிகள் வெட்டப்பட்டன. அயல் கிராமங்களிலிருந்து கூட்டிவரப்பட்டகிராமவாசிகளை அக்குழிகளின் கிட்ட நிறுத்தி, குழிகளில்விழும் வண்ணம் அவர்களுடைய பின்புறத்தலையில் மண்வெட்டியாலோ, பொல்லாலோ அடித்து வீழ்த்தப்பட்டனர்.

அதிக தொகையினரைக் கொல்ல வேண்டியிருந்தபோது அவர்களை உருக்குக் கம்பிகளால் கட்டி, அக்கம்பிகளுக்கு மின்சாரத்தை மின்சார உற்பத்தி இயந்திரம் (ஜெனரேற்றர்) மூலம் ஓடவிட்டுக் கொன்றனர். நினைவின்றி இருந்தவர்களும் குழிகளிற் போடப்பட்டு மண்ணால் மூடப்பட்டனர். அத்தனிநபர்களுடைய எலும்புக் கூடுகள், கால்களும், முடிச்சுப்போடப்பட்ட கைகளும், புல்டோசர்கள் மூலம் நசுக்கியதால் உடைந்தன என்பதை வெளிப்படுத்தின.

பொல்பொட்டினது படைவீரர்கள் தங்களாற் கொல்லப்பட்டவர்களது பிணங்களைக் குடிநீர்க்கிணறுகளுள்ளும் போட்டனர். பின் அவற்றைக் கற்களால் மூடினர். "தோனோட்தோடுங்கே, இச்லேகொட்யோங்க், லொக்தாஸ் பிரான், வெறெய்கோசுப்க்ராவு, ட்ராப் எறார்க், கிறாவுகோ ஆகிய கிராமங்களில் இருந்த கிணறுகள் எல்லாவற்றையும் பிணங்களினால் நிரப்பி மூடிவிட்டனர். பின் அக்கிணற்று நீர் கறுப்பு நிறமாக மாறியது.

கம்பூச்சிய மக்கள் புரட்சிச் சபைக்குக் கிடைத்த செய்திகள் யாவும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட விதத்தைக் கூறின "கன்தால்" என்னும் பிரதேசத்தில் மாத்திரம் 1400 பிணக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றிலிருந்து 25 ஆயிரத்துக்கும் கூடிய எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. "ச்வேறிங்க்" பிரதேசத்திற் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் தொகை 40 ஆயிரத்தைக் கடந்தன.

பொல்பொட்டின் படைப்பிரிவிலிருந்தபடைவீரர்களில் அதிக மானோர் தாம் செய்த மனிதக் கொலைகள் பற்றிய விபரங்களை வெளியிட்டனர். முதலில் பெரிய பாடசாலையாக இருந்து பின் படை மத்திய நிலையமாக மாற்றப்பட்ட இடத்திற் சேவை ஆற்றிய படைவீரன் ஒருவன் மக்கள் புரட்சிச் சபைமுன் பின் வருமாறு சாட்சி கூறினான்.

1976 ஆகஸ்ட் 21ஆம் திகதி இரவு நாம் 191 பேரைக்கொன் றோம். ஆகஸ்ட் 31 ஆந்திகதி இரவு 92 பேரையும் நவம்பர் 11ஆம் திகதி இரவு 100 பேரையும் கொன்றோம். பொல்பொட்டின் கட்டளைப்படியே இவை செய்யப்பட்டன. அந்தப்பாதுகாப்புப் படைவீரனே பின் பாவத்தை ஒத்துக்கொள்ளும் விதத்தில் கூறி னான். அவர்கள் கைகளைப் பின்புறத்திற் கட்டித் தலையில் இரும்புக்கம்பியால் அடித்துக் கொல்லப்பட்டனர். வெடிவைத் தால் சத்தம் கேட்கும் என்பதால் வெடிவைக்க வேண்டாம் என கட்டளையிடப்பட்டது.

பொல்பொட் படியாத ஒருவர். இதனாலேயே புத்திசாலிகள் அவரது துவேசத்தாலும் குரோதத்தாலும் கொல்லப்பட்டனர், பழிவாங்கப்பட்டனர். பொல்பொட்டின் போதனைப்படி கொல் லப்பட்டோர் எண்ணிக்கை 27 லட்சத்துக்கும் அதிகம். இவர் களில் 19 இலட்சத்து 25 ஆயிரம் பேர் கிராமவாசிகள், இவர் களில் 25168 பேர் குருமார். 8359 பேர் சிறுபான்மை இன மக்கள் 2 இலட்சம் பேர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டோர். பத்திரி கையாளர்கள் 100 பேர் இருந்தனர் காணாமற் போனவர்கள் தொகை 5 லட்சத்து 68 ஆயிரத்திலும் அதிகம். இவர்கள் காடு களில் இறப்புக்குட்பட்டோ குழியிலிடப்பட்டோ இருப்பர். 33 இலட்சத்து 74 ஆயிரம் பேர் பொல்லுகளால் அடித்தோ உயி ருடன் எரித்தோ குழியிலிட்டுக் கொல்லப்பட்டனர். இல்லை யெனில் கரும்பு இலைகளால் தொண்டையை வெட்டிவதைத் தும், மின்சாரம் பாச்சியும், நகங்களைக் கழற்றியும் உயிருடன் உறுப்புக்களைச் சிதைத்தும் கொல்லப்பட்டனர்.

மேலும் சிலர் 'ரைக்ரர்களின்' கீழ் போடப்பட்டுக் கொல் லப்பட்டனர் அங்கவீனமானோர் தொகை 1 இலடசத்து 41 ஆயி ரத்துக்கும் அதிகம் ஆகும்.

இன்னும் தூர இடங்களிலிருந்து கிடைத்த தகவல்களின்படி அதிகமான பிணக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைவெளத்த நட்டிலுள்ள மந்தபுத்தியுள்ள நிருவாகிகளால் செய்யப்பட்ட கவலைக்குரிய செயலாகும். வெளியில் எடுக்கப்பட்டவற்றைவிட

மேலும் நிலத்தினுள் இருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஒரு கம்பூச்சியக் குடியானவன் கூற்றுப்படி "பொல்பொட்டின் பைத்தியக்காரக் கொலைச்செயல் பற்றிய உண்மையைப் பூரணமாக அறியவேண்டுமெனில் நிலம் முழுவதும் ஒரு எல்லையிலிருந்து மறு எல்லை வரை தோண்டநேரும். நாட்டின் எல்லா மணற்தரையிலும் இலகுவாக எலும்புக்கூடுகள் பெறப்பட்டன. முழு விண்வெளியும் மரணவாடையால் பழுதடைந்துள்ளது. அவர்களது மரண ஓலம்கேட்கும் நிலையற்றது. ஆனால் இந்தச் சாபத்திலிருந்து விடுபட பொல்பொட்டாலோ, அவரைப் பின்பற்றுபவராலோ முடியாது மாட்டின் பின் செல்லும் வண்டிபோல அந்தச்சாபம் அவர்களை நோக்கி வந்துள்ளது. அந்தச் சாபத்தால் அவர்கள் என்றோ ஒருநாள் சிதைந்து அழிவர்."

## சோம்மின் முதலாவது யுத்தம் (First Battle of Somme)

இந்த யுத்தம் 1916 - ம் ஆண்டு ஜுலை 01 தொடக்கம் நவம்பர் 13 வரை நடைபெற்றது. முதலாம் உலக யுத்த காலத்தில் நேசப்படைகளினால் மேற்கொள்ளப்பட்ட பெருஞ்செலவிலான, பெருமளவு வெற்றியளிக்காத எதிர்த் தாக்குதல் நடவடிக்கை இதுவாகும்.

பிரான்ஸ் நாட்டு சோம் ஆற்றின் வடகரையிலுள்ள 34 கி. மீ. நீண்டபோர் முனையில், ஜேர்மனியர் பாதுகாப்பான அகழிகளை அமைத்து இராணுவ கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடத்தில் உறுதியாக நிலைகொண்டிருந்தபோது, பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் தமது ஒன்றிணைந்த முன்னிலைத் தாக்குதலை ஆரம்பித்தனர். பலத்த பீரங்கித் தாக்குதல், விமானக்குண்டுவீச்சுக்களின் பாதுகாப்புடன் முதல்நாட் தாக்குதலின்போது பிரித்தானியப் படையில் 20,000பேர் இறந்ததுடன், 60,000பேர் காயமடைந்தனர். உயிர்ச்சேதங்கள் மற்றும் காயமுற்றோரின் எண்ணிக்கையானது பெரிதும் விவாதத்திற்குரியதாக இருந்தபோதிலும் சோம்மின் முதலாவது யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்பு உத்தேசமாக 6,50,000 ஜேர்மனியர், 1,95,000 பிரெஞ்சுக்காரர், 4,20 000 பிரித்தானியருமாவர் நேசப்படைகள் முன்னேறிச்சென்று தாக்கியதனால் பிரான்ஸிலுள்ள வேர்டன் (Verdun) மீதான ஜேர்மனியரின் பிடியை விடுவித்துக்கொண்டனர் அத்துடன் ஜேர்மனியரின் பிரதான படையணியை அதன் மேற்குப் போர் முனையில் நிலைகொண்டிருக்கவுஞ் செய்தனர். பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்த இப்போருக்கான திட்டத்தைத் தீட்டிய யொப்பிரே பதவியிலிருந்து ஓய்வெடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்.

103804

# எப்பொழுதும் எனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது

## மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவுடனான நேர்காணல்

— கண்டவர்: பிரபாத் சகாபந்து
த ஐலண்ட் 20-03-94

கேள்வி: தென்மாகாணத்தில் தங்கள் உயிருக்கு ஆபத்துகள் உள்ளதா?



பதில்:- எப்பொழுதும் எனது உயிருக்கு ஆபத்துக்கள் இருக்கின்றன. தமது எதிரிகளை கொலை செய்வதிலோ அல்லது ஆபத்துக்களை விளைவிப்பதிலோ தயக்கம் காட்டாத ஒரு அரசாங்கத்தின் கீழ் தென்மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களுக்கு தலைமை தாங்குகின்றேன். அப்படிப்பட்ட அரசாங்கத்தினால் எனது உயிருக்கு ஆபத்தான நிலை தான் உள்ளது. குறிப்பாக சொல்வதென்றால் எனக்கும் எமது கட்சித் தலைவர்களுக்கும் ஆபத்துகள் விளைவிப்பதற்காக மக்கள் கூட்டம் ஒன்று தென்மாகாணம் வந்துள்ளதாக பல பயமுறுத்தல்கள் தொலைபேசி மூலம் ஆதாரபூர்வமாக எனக்குக் கிடைத்துள்ளன. கடந்த கிழமை நான் கொலைசெய்யப்பட்டுவிட்டேன் என்ற ஒரு வதந்தி கூட முடுக்கிவிடப்பட்டது. ஒவ்வொருநாளும ஏதோ ஒரு வதந்தி பரப்பப்பட்ட வண்ணமே இருக்

கின்றது. சில தினங்களுக்குமுன்பு பாதுகாப்புச் செய லருக்கு கட்சித்தலைவியான எனது தாயாரால் எமது பிரத்தியேக பாதுகாப்பு விடயமாக விடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. மந்திரிகளுக்காக கிடைக்கவேண்டிய சாதாரண பாதுகாப்புகள் கூட எனக்குக் கிடைப்பதில்லை. கடந்த 9 மாதங்களாக ஜனாதிபதிக்கும், 4 தடவைகள் பாதுகாப்புச் செய லருக்கும் நான் இதுபற்றி எழுதியுள்ளேன். எதுவித மான பதிலும் இன்றி கடந்த வாரம் தான் தகுந்த பாதுகாப்புக்காக 8 பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கப் பட்டிருக்கிறார்கள் என்ற பதில் எனக்குக்கிடைத்தது. ஆனால் மந்திரிகளாக இருப்பவர்களுக்கோ பாதுகாப்பு அதிகாரிகளாக 35-40 பேர் கடமைபுரிகிறார்கள்.

கேள்வி:- தென்பகுதிக்கான தங்கள் திட்டங்கள் என்ன?

பதில் :- எமது முதல் அமைச்சர் வேட்பாளரான திரு. சொடங் கொட திட்டங்கள் பற்றிய விபரங்களை வெளியிட்டி ருக்கிறார். பொதுவாகச் சொல்வதென்றால் முக்கிய விடயங்களில் ஒன்றான மேல் மாகாணத்தில் செயல் படும் கல்வித்திட்டங்களைப் போல் இங்கும் அதை மேம்படுத்துவதாகும். கிராமங்களில் உள்ள பாடசா லைகளுக்கான வசதிகளை வழங்குதலும் றோயல் மற் றும் விசாகா போன்ற தரத்திலான கல்லூரிகளையும் கிராமங்களில் அமைப்போம். தற்பொழுது கிடைக்காத மருத்துவ சிகிச்சைகள், மருந்து வகைகள் முதலா னவை வைத்தியசாலைகளை மேம்படுத்துவதன் மூலம் நோயாளர்களுக்குகிடைக்கும்படியான வழிவகைகளைச் செய்தல். தென்பகுதி அநேகமாக ஒரு விவசாயப் பகுதியாகவே இருக்கின்றது. கடந்த 12-15 வருட காலங்களாக நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ஏக்கர் நெல் செய்கையும் நட்ட நிலையிலே இருந்தது. 5-10 ஏக்கர் உள்ள விவசாயிகள் இதற்கு விதிவிலக் கானவர்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலங் களில் 15 மடங்காக விவசாய உற்பத்திச் செலவுகள் மேல் உயர்ந்ததே இதற்கான காரணமாகின்றது. இத்திட்டம் மாகாணசபைத் திட்டமாக இல்லாமல் தேசிய திட்டமாகவே அமைகிறது. உரம் போன்ற மானியங்களை விவசாயஉற்பத்திக்கு நாங்கள் வழங்கு கிறோம் இவை விபரமாக கட்சியின் தேசியத்திட்டத் தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. காலி, மாத்தறை

மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஒரு மோசமான விடயமாகிறது. அரசாங்கம் இப்பிரச்சினையை பிழையான முறையில் கையாளுகிறது. மின்கங்கை, நில்வளகங்கை வெள்ளப்பெருக்குகளை கட்டுப்படுத்துவதற்கான ஒரு மாற்றுத்திட்டத்தை நாம் வைத்திருக்கிறோம். கடந்த 15 ஆண்டுகளாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நீர்ப்பாசன ஒதுக்கீடு ஒரு முழுமையாகக் கைவிடப்பட்ட விடயமாகிறது. துரிதமான விவசாய உற்பத்தி முன்னேற்றத்துக்கும் வர்த்தக சம்பந்தமான பயிர்ச் செய்கைக்குமான திட்டமொன்றும் இருக்கின்றது. இது பொதுவாக தேசிய ரீதியிலும் சிறிதாக மாகாண ரீதியிலும் தொடங்க வேண்டியவையாகும். நாட்டின் வேறு பகுதிகளில் காணப்படும் ஜனநாயகமின்மை தென்பகுதியையும் தாக்கியுள்ளது. தெற்கில் அனேகமான இளைஞர்கள் கொல்லப்பட்டோ அல்லது காணாமலோ போயிருக்கிறார்கள். மீண்டும் ஜனநாயகம் அங்கு தழைக்கும்படியான வழிவகைகளைச் செய்வோம்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கான பிரத்தியேக விடயங்களை புகுத்துவதன் மூலம அவர்களுக்கு ஜனநாயகத்தின் தன்மைகளைப் புரியவைத்தல். வெவ்வேறு இனங்களிடையே உள்ள நாற்பண்புகள் கொண்ட விடயங்களை பரிமாற்றம் செய்தல் மனித உரிமைகளைப் பேணுதல் போன்றவற்றை எல்லாம் செயல்படுத்தலாம்.

கேள்வி:- மக்கள் கூட்டணி ஆட்சிக்கு வரும்பட்சத்தில் அவர்கள் ஜனசவிய திட்டத்தில் அடங்கிய 200 ஆடை ஆலைகளை மூடிவிடுவார்கள் என ஐக்கிய தேசியக்கட்சி பறைசாற்றிவருகிறது. அவைகள் அப்படி மூடப்படமாட்டாது அல்லது அப்படி மூடப்பட்டால் கூட அத்திட்டத்திற்குப் பதிலாக வேறு திட்டங்கள் அமையும் என்பதற்கு உங்கள் உத்தரவாதம் என்ன?

பதில் :- ஜனசவியத்திட்டம் ஒரு சிரிப்புக்கிடமான திட்டமாக இருப்பதால் நாங்கள் அதை அகற்றுவோம். பஞ்சத்தினால் கஷ்டப்படும் நாட்டுமக்களின் எந்தப்பிரச்சினைகளுக்கும் இத்திட்டமூலத்தினால் தீர்வு காணப்படவில்லை. இத்திட்டத்தில் பணத்தை

விருயம் செய்வதிலும் பார்க்க நாட்டின் உற்பத்தி களைக்கட்டி எழுப்புவதே சிறந்ததாகும். இவ்வடிப் படையில் விவசாயம், கைத்தொழில், சிறிய புதுமை கள் அடங்கிய கைத்தொழில்கள் முன்னேற்றமடையில் கிராமப்புற விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் மற்றும் சிறு புதுமைக் கைத்தொழிலாளர்கள் ஊக்கு விப்பு அடைகிறார்கள். நாட்டுமக்களுக்குப் பிச்சை போடுவது போல் இல்லாமல் அவர்களை ஊக்குவிக் கக்கூடிய மானியங்கள் வழங்குதல், மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைகள், இலகுமுறை வங்கிக் கடன் கள் போன்றவைகளால் மக்கள் உற்பத்தியாளர்களாக உயர்ந்து தன்மானத்துடன் வாழும் வழி கிடைக்கின் றது. சமுதாயங்களில் மிக மோசமான பாதிப்புகளால்- முன்னேற்ற நிலையில் பின்தங்கியவர்களுக்கு வேறு விதமான முறைகளில் உதவிகள் வழங்கப்படவேண் டும். மேல் மாகாணத்தில் உள்ள பின்தங்கிய பாட சாலைகளில் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்துள் ளோம், இத்திட்டத்தை வருங்காலகட்டத்தில் சகல பாடசாலைகளில் உள்ள மாணவர்களும் பெறக்கூடிய வகையில் அமுல் செய்யப்படும். ஜனசவிய திட்டத்திற் குப் பதிலாக இவைபோன்றதிட்டங்கள் அமைகின்றன.

கேள்வி:- ஆடைத் தொழிற்சாலைகள் பற்றி என்ன சொல்கி றீர்கள்?

பதில்:- அவைகள் சில மாற்றங்களுடன் செயல்படும். அங்கு கடமையாற்றும்தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை யும், தக்க ஊதியத்தையும் பெறுவார்கள். கடந்த 17 ஆண்டுகளாக இவ்வரசாங்கம் ஆடைத் தொழிற்சாலை கள் தவிர்ந்து நாட்டில் வேறு எந்தவொரு தொழிற் சாலையையும் தொடங்கவில்லை. நாங்கள் நாட்டில் பெரும் அளவில் உள்ள தொழிற்சாலைகளை ஆரம் பிக்க உத்தேசித்துள்ளோம். எமது ஆட்சிக்காலத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட கிட்டத்தட்ட 40 தொழிற் சாலைகளும், தொழில்வாய்ப்புக்களும் இவ்வரசாங்கத் தினால் மூடப்பட்டுவிட்டன. மக்கள் மயமாக்குதல் என்ற போர்வையின் கீழ் இவைகளை முதலாளிகளிடம் ஒப்படைத்து எல்லோரையும் அடிமட்டத்தில் தள்ளி விட்டார்கள். றுகணு சிமெந்து,பூகொடைமில், ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனம் மற்றும் வெரகர டிப்போ

ஆகியனவற்றிற்கு நடந்ததைச் சற்று கவனியுங்கள். பல்வேறு முதல ளிகளிடம் இவற்றைக் கையளித்தல் என்ற போர்வையில் இவையெல்லாம் கீழ் தள்ளப்பட்டன. இங்குள்ள யந்திரங்கள் அ ற்றப்பட்டும், விற்கப்பட்டும் பலதொழிலாளர்கள்வேலையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டும், அங்கு தற்போதும் கடமையில் உள்ளவர்களுக்கான சம்பளம் முதலானவைகூட உரியகாலங்களில் வழங்கப்படாமல் இருக்கின்றன. எனவே நாங்கள் ஆடைத்தொழிற்சாலைகளை ஒரு பக்கம் தவிர்த்து மிக முக்கிய திட்டங்கள் அடங்கிய தொழில முன்னேற்றங்களை கவனத்தில் கொண்டுள்ளோம். 1960-ம் ஆண்டில் (S. L. F. P) எஸ். எல். எவ். பீ அரசாங்கத்தினால்நிறுவப்பட்டு இவ்வரசாங்கத்தினால் முற்றாகச் சேதப்படுத்தப்பட்ட பல தொழிற்சாலைகளை நாங்கள் மீண்டும் மறுசீரமைப்புச் செய்யவேண்டியவர்களாகி உள்ளோம். ஆடைத் தொழிற்சாலைகளை நோக்குமிடத்து அவைகளுக்கான உதிரிப்பாகங்கள் எல்லாம் இறக்குமதி செய்யப்பட்டு இங்கு பொருத்தப்படுகிறது. இப்படியான தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் உதிரிகள் போன்றவற்றை இயன்றவரை நாங்களே உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம். தற்பொழுது ஆடைத்தொழிற்சாலை பொருத்துதல் நடக்கும் ஆலைகளாக இயங்குகின்றன.

கேள்வி:- தென்மாகாணசபைத் தேர்தலில் தாங்கள் என்ன முக்கியத்துவத்தைச் சேர்த்துக் கொள்ளுகிறீர்கள்?

பதில்:- திரு. பிரேமதாசாவின் கொலைக்குப்பின் நாட்டில் சர்வாதிகாரம் தளர்ந்துள்ள நிலையில் தேர்தல் போக்குகளிலும் சில முக்கிய திருப்பங்கள் தென்படுவதாகத் தெரிகிறது. நாட்டில் உள்ள இளைஞர்கள் ஆயுதங்களை கீழே போட்டு ஜனநாயகத்தில் மீண்டும் நம்பிக்கை அடைவதாகத் தெரிகிறது. எப்படியிருந்தும் பிரான்சிஸ்கு கடத்தல் சம்பந்தப்பட்ட விடயங்கள் இருக்குமிடத்து ஜனாதிபதி விஜேதுங்கா அரசாங்கத்தால் நாட்டில் நிலவும் ஜனநாயகமின்மை அவர்களை நம்பிக்கை இழக்கச் செய்கிறது. எமது நாடு மீண்டும் ஒரு ஜனநாயகப் பாதையில் செல்லக்கூடியதான ஒரு தீர்க்கமான தேர்தலாக அமையுமென இளைஞர்கள் நம்புகிறார்கள். இத்தேர்தலில்

ஜனநாயகத்துக்கு மாறாக ஏதாவது நடைபெற்றால் அது ஒரு முக்கிய பின்னடைவாகக் கருதப்பட்டு தற்பொழுது மக்களின் ஆதரவு குறைந்த அளவில் உள்ள அரசாங்கத்தை இளைஞர்கள் மாற்றுவழிகள் கொண்டு கவிழ்ப்பார்கள். இவ்வாண்டு ஒரு தேர்தலாண்டாக இருப்பதனால் எதிர்வரும் தேர்தல் ஒரு முக்கியத்துவம் உள்ளதாகும்.

கேள்வி:- கிழக்கில் நடைபெற்ற உள்ளூர் ஆட்சித்தேர்தல்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில் :- கிழக்கில் எதிர்க்கட்சிகளின் பலமற்ற அமைப்புகளே தேர்தல் முடிவுகளுக்குக் காரணமாகின. இதை முன் கூட்டியே நான் அறிவேன். எனவே தான் நாங்கள் தென்பகுதிக்கான தேர்தலில் முக்கிய அக்கறை காட்டுகிறோம் தென்பகுதியில் நாங்கள் நிச்சயமாக வெற்றியீட்டுவோம் என்ற நம்பிக்கை உண்டு கிழக்கில் தான் 3 மாவட்டங்களுள் 2ல் எமது அமைபுக்கள் இல்லை. அம்பாறையில் ஏதோ ஒரு அளவில் ஒரு அமைப்பு இருக்கிறது. எங்கள் கட்சியில் அங்குள்ள ஒரு அங்கத்தவரால் எல்லாவற்றையும் கவனிப்பது. கஷ்டமாக இருந்தது. அங்கு எமது மக்கள் முன்னணி முழுப் பலத்தையும் காட்டமுடியாமையினால் நாங்கள் தென்மாகாண சபைத்தேர்தலில் முழுமையாக ஈடுபட்டுள்ளோம். எனவே இத்தேர்தல் முடிவுகள் (Centralised policy) (நடுநிலைக்கொள்கை) தவிர்க்க முடியாதனவாக அமைந்தது. மேலும் திருகோணமலை டிகமடுல்ல ஆகிய இரு மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினர் வாக்குச்சீட்டுக்ளை வாக்குப்பெட்டிகளில் நிரப்பினார்கள். இது பற்றிய தகவலை நான் தேர்தலுக்கு 10 நாட்களுக்குமுன்பே அறிந்திருக்கிறேன். சிறிலங்கா முஸ்லீம்கொங்கிறஸ் கட்சித்தலைவரின் பேச்சின்மூலம் இதன் உண்மை புலனாகிறது. தகுந்த பாதுகாப்புக்கள் அற்றநிலையில் ஒரு எதிர்க்கட்சி எப்படி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடலாம்? ஒரு தகுந்த ஆயுதப்படையின் பின் உள்ள அரசாங்கம் தேர்தலில் வெற்றியீட்டும் என்பது ஒரு தீர்மானமான முடிவாகும். ஆனால் தெற்கில் அப்படியல்ல. அங்கு எமது தேர்தல் வெற்றிக்கான தேவைகள் எல்லாம் அமைந்திருந்தது. தென்மாகாண சபைத்தேர்தலில் நாங்கள் மிகவும் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டுவோம்.

கேள்வி:- வடக்கு கிழக்கு பிரச்சினை பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன? ஜனாதிபதி கூறியது போல இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினையா அல்லது இது ஒரு இனப் பிரச்சினைத் தன்மையானதா? அப்பிரச்சினையை தீர்க்கத்தக்க உங்கள் திட்டங்கள் என்ன?

பதில் :- அங்கு நிலவுவது ஒரு பயங்கரவாத பிரச்சினை தான் என்பது ஒரு (முட்டாள்தனமான) குப்பைப் பேச்சாகும். அங்கு உண்மையில் ஒரு இனப்பிரச்சினையே உள்ளது. தமிழ் மக்களால் கோரப்படும் விடயங்களுக்கு அரசியல் தீர்வுகாணும் வழிவகைகள் அடங்கிய முக்கிய திட்டங்களை ஆட்சியில் உள்ள அரசாங்கம் முன்வைத்து இப் பிரச்சினைக்குத்தீர்வு காணவேண்டும். அத்திட்டங்களுள் ஈழம் என்பது உள்ளடங்காது நாங்கள் அதற்கு எதிரானவர்கள். அகக்கோரிக்கை பல ஆண்டுகளாக இந்நாட்டில் நிலைகொண்டுள்ளது. இனப்பிரச்சினை ஒன்றுதான் தற்பொழுது பயங்கரவாதப் பிரச்சினையாக உருக்கொண்டுள்ளது. இனப் பிரச்சினைக்குத் தகுந்த ஒரு தீர்வு காணுமிடத்து பயங்கரவாதப் பிரச்சினைக்கு இடமில்லை ஏனென்றால் பயங்கரவாதம் தானாகவே உருபெற்ற ஒரு பிரச்சினையாகாது. பல்வேறு காரணங்களுக்காக தமிழ் மக்கள் அரசாங்கத்தில் நம்பிக்கையற்றவர்களாகிவிட்டனர். நாங்கள ஒரு அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் அந்த நம்பிக்கையை தோற்றுவிக்குமிடத்து திட்டங்களை அமுல்படுத்துவோம். இதிலே அதிகாரப் பரவலாக்கல் மிக முக்கியமாக அமைகிறது. இது மாகாணசபை போல் அல்லாமல் வேறுபட்டதாக அமையவேண்டும். ஏனென்றால் மாகாணசபைகளில் பல குறைபாடுகள் உள்ளன தமிழ்மக்கள் தங்கள் மரியாதையுடன் வாழும் வகை அமைவதாக அதிகாரப் பரவலாக்கல் வகுக்கப்படவேண்டும். வடக்குக்கிழக்கில் உள்ள பெரும்பாலான தமிழ்மக்களும், ஏனைய பகுதிகளில் உள்ள தமிழர்களும் ஈழம் என்பதை விரும்புகிறவர்கள் அல்ல என்பதை நான் நன்கு உணர்வேன். வேறு வழிவகைகள் அற்ற நிலையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்கள் பயங்கரவாதத்தை ஆதரிக்கின்றனர். ஒருபக்கம் தமிழ் தீவிரவாதிகளும் மறுபக்கத்தில் அதிலும்விட மோசமான அரச பாதுகாப்புப் படைகளும் உள்ளன. நாங்கள் அவர்களுக்கு நல்லதொரு

அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்போமானால் வடக்குக் கிழக்கில் உள்ள பெரும்பான்மை தமிழ்மக்களை நாங்கள் ஒரு நல்ல ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம் என்ற திடநம்பிக்கை எனக்கு உண்டு. நாங்கள் ஆட்சிக்கு வரும்பொழுது இவற்றைச் செய்வதாக எண்ணியுள்ளோம்.

கேள்வி:- சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நடுநிலைக்கொள்கைகளை இடது சார்பு பக்கமாக இழுத்துச்செல்வதாக உங்கள் எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். இதற்கான உங்கள் கருத்துக்கள் என்ன?

பதில்:- முதலாவதாக நான் பொய்மைகளுக்கு எதிராக வாதாட முடியாது. அப்படிப் பேசுபவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் அத்தகைய கேள்விகளைக் கேட்கட்டும். அப்பொழுது நான் அவர்களுக்குப் பதில் அளிக்கின்றேன்.

கேள்வி:- தென்மாகாணத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசியல் பிரச்சாரங்களில் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்கள் யாது?

பதில்:- எங்கள் கட்சிக்கும் கட்சி வேட்பாளர்களுக்கும் மக்கள் அமோக ஆதரவும், உற்சாகமும் கொடுப்பது புலனாகிறது. இரண்டாவதாக தேர்தல் காலங்களில் மட்டும் எமது கட்சியில் தோன்றும் தொற்றுநோய்த் தன்மையடைய சில விடயங்கள் மற்றக்காலங்களில் அத்தகைய தன்மைகள் இல்லை ஸ்ரீமாவோ - அனுரா சார்புடைய எமது எஸ். எல். எவ். பி ஆதாவாளர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பிளவு ன் இன்றி செயல்படுகிறார்கள். ஒரு சிலர் மட்டும ஒத்துழைப்புக் கொடுப்பதாக இல்லை. அவர்களைப்பற்றி கவலையடைய வேண்டியதில்லை அரசினால் எங்கள் மேல் காட்டப்படும் கொலைமுயற்சிகள் அடங்கிய பயங்கரம் எனக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. மக்கள் வாக்களிப்பதை தடைசெய்யவும், தேர்தல் நாளன்று முயற்சிக்கலாம். இப்படியான செயல்களை ஒழுங்கு செய்து ஈடுபடுவதற்குத் தகுந்தபலம் அரசிடம் இல்லை. அங்கொன்று இங்கொன்றாக சில அசம்பாவிதங்கள் நடக்கக்கூடும். உலக நாடுகள் முழுவதும், பிரத்தியேக உதவிவழங்கும் நாடுகள் மிக உன்னிப்பாக இத்தேர்தலை கவனித்துக்கொண்டிருக்கின்றன. என்பதை அரசு அறியும். ஆகவே அரசு பயந்தநிலையில் உள்ளது. தேர்தல்களை குழப்புவதற்கான செயல்களில் ஈடுபடுவதற்காக தக்கபலம் அரசிடம் இல்லை. என்றே நம்புகின்றேன்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# இனவெறிக்கு உதாரணம்

— ஜினதாச பீரிஸ்
(1993 . 12 . 21, திவயின)

இலங்கையில் எல்லாவிதத்திலும் பலமற்ற அரசியல் தலைவர்களும், வழிநடத்தப்படும் சிங்கள தமிழ மக்களும் கொடூர பாசிசவாத விடுதலைப் புலிகள் இயக்கத்தால் ஏமாற்றப்படுகின்ற தமிழ் இளைஞர்களும் பொருத்த மான அரசியற் தலைமைத்துவமும் வழிகாட்டலும் இல் லாத இராணுவமும், மக்கள் கிளர்ச்சிகளும் அதனிடை தோன்றும் இனவாதக் கற்பனைகளான சதுப்பு நிலத்தில் கட்டிய வேலியும் இருக்கும்போது, 21 ஆம் நூற்றாண்டை நோக்கி வளரும் உலகம் எவ்வளவு புத்திசாலித்தனமாகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு தேடும் என்பதற்கான உதார ணங்கள் (மேலும் சில) கடந்த கிழமை தென்பட்டது.

அயல் நாடான இந்தியாவில் காஷ்மீர் பிரதேசத்தில் ''கர்ஸ்ட்பால் என்னும் முஸ்லீம் பள்ளிவாசலில் தங்கியிருந்த போர் வீரர்களை இந்திய அதிகாரிகள் ஒருதுளி இரத்தமும் சிந்தாது வெளியில் கொண்டுவந்தனர். மேலும் காஷ்மீர் பிரச் சனை பற்றி அங்குள்ள பிரிவினைவாதிகளுடனும், அயல் நாடான பாகிஸ்தானுடனும் இந்தியா பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாகியுள்ளது.

ஐ. ஆர். ஏ. அமைப்பால் ஒதுக்கப்பட்ட வட அயர்லாந்தில் கதோலிக்க புரொட்டஸ்சாந்து கலவரத்துக்குச் சமாதான அரசியல் தீர்வுதேடும் பொருட்டுப் பேச்சுவார்த்தைக்கு வரும் படி பிரித்தானிய பிரதம மந்திரி ஜோன் மேஜர் அவர்கள் சில தினங்களுக்கு முன் திரும்பவும் போராளிகளுக்கு அழைப்பு விடுத் துள்ளார்.

பத்து வருடங்களாக நிகழ்ந்த தென்னாபிரிக்க நிறவேற் றுமை (கறுப்பு, வெள்ளை) நிருவாகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அங்கு பன்முகப்பட்ட சனநாயக ஆட்சியை அடிப்படை யாகக் கொண்ட புதிய ஆட்சிமுறையை அமைப்பதற்கான அர சியல் யாப்புக்கு நாட்டின் எல்லா அரசியற் தலைவர்களும் சென்ற வியாழககிழமை கைச்சாத்திட்டுள்ளார்கள். வெள்ளை

யின மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொண்டு கறுப்பு மக்களிடம் அதிகாரத்தை மாற்றும் தற்காலிக நிகழ்வு அங்கு இப்பொழுது நிகழ்ந்துள்ளது.

கூடுதலான கருத்துவேறுபாட்டை ஊக்குவிக்கும் (Nafta) "நவ்ரா" என்று சுருக்கெழுத்தில் அழைக்கப்படும் வட அமெரிக்கச் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அந்நாட்டுக் கொங்கிரஸ் உறுப்பினர்களும், அனுபவமுள்ள அரசியற் தலைவர்களும் செயல்படும்விதம் சிறுபான்மை இனத்தவர்களுடையதும் பலவீன அரசியற் தலைவர்களதும் கண்களைத் திறப்பிக்க நல்ல உதாரணமாகக் காட்டலாம்.

"நவ்ரா" (Nafta) என்பது அமெரிக்க ஐக்கியக்குடியரசு, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகள் ஒன்றுபட்டுக் கைச்சாத்திட்டுள்ள வியாபார ஒப்பந்தமாகும். "நவ்ரா" என்பது (North American Free trade Agreement) வட அமெரிக்கச் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்னும் கருத்துடையது. இது ஐரோப்பியப் பொருளாதாரப் பங்குச் சபையைவிட உலகில் அகன்ற விசாலமான சுதந்திர வர்த்தகவலயமாகும். இதற்குரிய நுகர்வோர் தொகையில் 35 பிரிவுகள் உள்ளது. அடுத்துவரும் 15 வருடங்களுள் இந்நாடுகளிடையே ஏற்றுமதி இறக்குமதி வரியை நீக்க வேண்டுமென்பதே இவ்வொப்பந்தத்தின் சிறப்பம்சமாகும். ஒப்பந்தத்துக்குரிய மூன்று நாடுகளில் எந்த நாட்டிலும் பணத்தை மிக இலகுவாக முதலிட முடியும். வியாபாரிகளும் தொழில் வழங்குவோரும் இந்த நாடுகளில் சென்று தம் கடமைகளை ஆரம்பிக்கலாம். இந்நாடுகள் மூன்றிலுமுள்ளசாதாரண சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்தல் மேலும் ஒரு நிபந்தனை ஆகும்.

இவ்வொப்பந்தத்துக்கு மாறாக உள்ள அமெரிக்கர்களின் கருத்துப்படி இதனால் மெக்சிக்கோவுக்கே கூடிய இலாபம் கிடைக்கும் என்பதாகும். இலகுவான தளர்ந்த தொழிலாளர் சட்டவிதிகள், குறைந்த சம்பளம், அவ்வளவு கடுமையற்றசூழல் ஒழுங்குவிதிகள் ஆகியன காரணமாக முதலீட்டாளர் அமெரிக்காவை விட மெக்சிக்கோவிற்கே அதிகமாகச் செல்கின்றனர் என அவர்கள் கூறுகின்றனர். இதனால் அமெரிக்காவில் தொழில் தாராளமாவதற்குப் பதிலாக மேலும் கடுமையாகியுள்ளது என அவர்கள் வாதிக்கின்றனர். ஆயினும் ஒப்பந்தத்துக்குச் சார்பானவர்களும் உளர். அவர்கள் நாடவடல்லை, தீர்வைப்பணத்தடை என்பன கடந்த வர்த்தக ஒப்பந்தத்திலேயே அமெரிக்க எதிர்காலம் தங்கியிருக்கின்றது என்கின்றனர். இதனால் அமெரிக்கா

வில் தொழில்வாய்ப்புத் தாராளமாகுமென சனாதிபதி பில் கிளிங்ரன் காரணங்களைக் காட்டியுள்ளார். ஆனாலும் ஒப்பந் தத்துக்கு கடும் எதிர்ப்பு உள்ளது.

தொழிற்சங்கமும் சூழல் பாதுகாப்பு அமைப்பும் அந்த எதிர்ப் பியக்கத்தை முன்னெடுத்துள்ளன. மறுபக்கத்தில் முன்னைய சனாதிபதிகளான றோராட் போட், ஜிம்மி காட்டர், றேகன், நிக்ஸன், ஜோர்ஜ் புஷ் ஆகியோர் ஒப்பந்தத்தின்பின் கிளிங்ரனு டன் சேர்ந்துள்ளனர். பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற் றவர்களதும், சிறப்பறிஞர்களதும் உதவியை கிளிங்ரன் பெற் றுள்ளார்.

தேசிய பிரச்சனையில் அமெரிக்கத் தலைவர்கள் அறிஞர்கள் தம் குறுகிய பாசிச எல்லையைக் கடந்து செயற்படும் பண்பு இங்கு முற்பட்டுத்தெரிகிறது. கிளிங்ரன் அவர்களுடைய சன நாயகக்கட்சியின் முக்கியபாராளுமன்ற உறுப்பினர்களே ஒப்பந்தத் துக்குக்கடும் எதிர்ப்பாக உள்ளனர். ஆனாலும் தனிய இச் சந் தர்ப்பத்தில் பயன்பெறும் கிளிங்ரன் அவர்களுக்குப் பாடம்படிப் பிக்கும் நோக்கில் ஒப்பந்தத்துக்கு மாறாக அமெரிக்க குடியரசுக் கட்சியும் எதிர்க்கட்சியுப் முன்வரவில்லை. ஒப்பந்தத்துக்கு திட்ட மிட்ட விதத்தில் குடியரசுக்கட்சியின் முக்கிய பகுதியினர் கிளிங் ரனுடைய சனநாயகக் கட்சியுடன் தேர்தலில் வாக்களித்தனர். அப்படியே நிர்வாகத்திலுள்ள சனநாயகக்கட்சியிலும், மேலும் ஒரு பகுதியினர் ஒப்பந்ததுக்கு மாறாக வாக்களித்தனர். கட்சி ஒழுங்குப் பாட்டின் நிமித்தம் மனவிருப்பின்படியே இருபிரிவின ராகப் பாராளுமன்ற உறுப்பினர் பிரிந்தனர். ஒப்பந்தத்துக்குச் சார்பாக 234 வாக்குகளும் மாறாக 200 வாக்குகளும் கிடைத் தன. கொங்கிரசினால் அது அனுமதிக்கப்பட்டது,

"நவ்ரா' ஒப்பந்தத்துடன் தொடர்பான அரசியற் செயற் பாடுகளிலிருந்து நாம் பெறக்கூடிய முன்னுதாரணங்கள் பல வாகும். குறுகிய தேசிய எல்லைப் பிரதேச எல்லைகளைக் கடந்து உலகநாடுகள் முன்செல்ல ஆயத்தமாகும் விதம் முதல் எடுத்துக் காட்டாகும். தனிய நாட்டெல்லையைப் பிரித்து வேறு படுத்தும் பொருட்டு இரத்தம் சிந்துவதைவிட்டு நாட்டெல்லையை யும், மதிலையும் உடைத்து வீழ்த்தும் காலம் தோன்றியுள்ளது.

சர்வதேச சுதந்திர வர்த்தக ஒழுங்கில் நன்மையைப் போல தீமையும் உண்டு. ஆனால் அது வேறு பிரச்சினையாகும். சுதந் திர வர்த்தகம் என்று கருத்தை பரப்பி அபிவிருத்தியை உண் டாக்கும் மிகப்புத்திசாலித்தனமான சர்வதேச உணர்வும், மனோ

நிலையும், தனியாக வழமையான பணத்தொகையுடன் புதிய ஐரோப்பாவைத் தோற்றுவித்தாலும் இதுவே நிகழும்.

"நவ்ரா" ஒப்பந்தம் பற்றி வாக்கெடுப்பு ஆராய்வின்போது அமெரிக்க உறுப்பினரின் பங்களிக்கும் வீதம் எங்களுக்கு இரண்டாவது எடுத்துக்காட்டாக உள்ளது. சரியோ பிழையோ தேசியப்பிரச்சினைகளில் குறுகிய அரசியல் இலாபம் பார்க்காது வாக்களிப்பது வழமையாகும் இனவாதவெறியால் மனத்தைப் பக்கப் சாராமல் நடுநிலையோடு நியாயமான தீர்வுக்காக மனத்தைச் சரிப்படுத்தும் பண்பு எங்கள் அரசியலாளருக்கும் ஏற்பட முடியும்.

எங்களுடைய பிரச்சினைகளுக்குச் சமமான பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கும் ஏனைய நாடுகள் எப்படி அவற்றுக்குத் தீர்வு காணுகின்றன? என்பது இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டியது இதுபோன்ற பிரச்சினைகளில் தற்காலச் சர்வதேச நிலையில் எவ்விதமான தீர்வு காணப்படவேண்டும் என்பது பற்றி விளக்கம் பெறுதலே முக்கியமானதாகும்.

---

# பெற்றோலிய அரசியல்

உலகில் முதன்முதலாக 1859 ஆம் ஆண்டு பென்சில்வேனியாவில் ரிற்ரஸ்பிஸ் (Titusfills) என்ற இடத்தில் பெற்றோலியம் கண்டறியப்பட்டது. செவ்விந்தியர்கள் பெற்றோலியத்தைத் தலையிடிக்கு மருந்தாக நெற்றியில் தடவிக்கொண்டார்கள். இன்று மத்திய கிழக்கு நாடுகளும், முன்னைய சோவியத் சமவுடமைக் குடியரசு, ஐக்கிய அமெரிக்கா, வெனிசுலா, நைஜீரியா, கனடா, இந்தியா, இந்தோனேசியா என்பன முக்கியபெற்றோலிய உற்பத்திநாடுகளாகும் நவீன உலகின் சக்தி மூலவளம் பெற்றோலியமாக மாறி விட்டதால் வல்லரசுகள் மத்தியகிழக்கில் உள்ள பெற்றோலிய வளத்தைத் தமது ஆதிக்கத்திற் பெற்றுவிட முயல்கின்றன. குறிப்பாக அமெரிக்கா தனது பொருளாதார அபிவிருத்தி குன்றிவிடாதிருக்க, மத்தியகிழக்கு நாடுகளுக்கிடையில் பேதங்களை உருவாக்கி அணிசேர்த்துவருகின்றது.

அண்மைய ஈராக் - குவைத் யுத்தம் ஏற்படுத்திய சீரழிவு, பெற்றோலியவளம் ஏற்படுத்திய பேரழிவுதான், பெற்றோலியத்தால் பெரும் செல்வந்த நாடுகளாக மாறிவரும் குவைத், கட்டார், சவூதி அரேபியா, ஈரான், ஈராக் என்பவற்றினை வளரவிடாமற் பார்த்துக்கொள்வதிலும், அவர்களுக்கு யுத்த ஆயுதங்களையும் கருவிகளையும் மிக அதிக விலையில ஏற்றுமதி (சப்ளை) செய்து 'எரியும் நிலையில்' வைத்திருப்பதிலும் அமெரிக்கா மிகப் பிடிவாதமான கவனத்தைச் செலுத்துகிறது.

# திரைப்பட உலகில் வெற்றிக்கொடி நாட்டிய சிவாஜி கணேசன் அவர்கள் அரசியலில் தோல்வியையே சந்தித்துள்ளார்

— சஜீவ்மத்தியூ
(த ஐலண்ட் (07 12. 1993)

தமிழ்த் திரைப்பட உலகில் சிம்மக்குரலோன் எனப் புகழ்பெற்று வெற்றி வாகை சூடிய சிவாஜிகணேசன் அவர்கள் தற்போது தன்னை ஒரு களைத்துப்போன குதிரையாகக் கருதுகின்றார். ஜனதாக் கட்சியின் ஆரம்ப உறுப்பினர் பதவியிலிருந்தும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அண்மையில் விலயகிமை திரும்பவும் அவரின் அரசியல் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.



அரசியல் தனக்கு உகந்த பாதையல்ல என்ற ஞானம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு தோன்றியுள்ளதா எனத் தற்போது கூறமுடியாவிட்டாலும் அரசியல் ரீதியில அவர் ஒரு முன்னேற்றத்தையும் காண முடியாதவராகவிளங்குகின்றார் என்பதை மறுக்கமுடியாது அவருடைய சம காலத்தவர்களான திரு. எம். ஜி. இராமச்சந்திரன், செல்வி. ஜெயலலிதா ஜெயராமன். ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர்களாக விளங்கினர். ஆனால் திரு. சிவாஜி கணேசன் இராஜ்ய சபாவில் ஒரு உறுப்பினராக நியமனம் பெற்றிருந்ததுதான் அவர் அரசியல் அதிகாரத்தை அண்மித்த ஒரே ஒரு தருணமாகும்.

திரைப்பட உலகிலிருந்து சிவாஜி கணேசன் அவர்கள் நிரந்தரமாக விலகிப்போவதை அவரின் விசிறிகள் விரும்பாததால், அல்லது சிவாஜி கணேசன் அவர்களின் மனப்பாங்கு அரசியலுக்கு உகந்ததாக இல்லை எனக்கருதப்பட்டதால் இந்த நிலை தோன்றியிருக்கக் கூடும். காரணம் எதுவாக இருந்தாலும், கொந்தளிப்பை ஏற்படுத்தும் அரசியல் சூதாட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தனிமனிதனாகவே அவர் விளங்குகின்றார்.

தனது வளர்ச்சியின் ஆரம்பகட்டத்தில் அவர் மேற்கொண்ட சில தவறான நடவடிக்கைகளே அவர் அரசியல் வாதியாக வர முடியாமைக்கான முக்கிய காரணமாகும். காலம் சென்ற சி. என் அண்ணாத்துரை அவர்களின் உன்னத தலைமையின் கீழ் வலுப்பெற்று வளர்ச்சியுற்றுவந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது அவருடன் தோன்றிய வேறுபாடு காரணமாக அதிலிருந்து வெளியேறிய சிவாஜி கணேசன் அவர்கள் வெற்றி பெறும் கட்சியான கொங்கிரசுக் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டார்.

கே. காம்ராஜ் அவர்களின் மறைவுக்கு பின்னர் கொங்கிரஸ்கட்சியில் தான் தனிமைப்படுத்தப்பட்ட, துணையற்ற அனாதைபோல ஆக்கப்பட்டுள்ளார் என்பதைப் பேராற்றல் மிகுந்த இந்த நடிகர் உணர்ந்துகொண்டார். சிவாஜி கணேசன் கொங்கிரசுக்கட்சியின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை என்பதாலும், கால மாறுதலால் கொங்கிரசுக் கட்சியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இசைவாகத் தன்னை மாற்றமுடியவில்லை என்பதனாலும் ரஜீவ் காந்தி அவர்களின் ஆட்சிக்காலத்தில் கொங்கிரசுக்கட்சியிலிருந்து விலகினார். பின்னர் அவர் இணைந்துகொண்ட ஜனதாதள் கட்சியும் அவருக்கு ஒவ்வாத ஒன்றாகவே தோன்றியதுடன் அக்கட்சியிலும் அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

காலஞ்சென்ற சத்தியஜித்ரே அவர்கள் (Satyajitray) ஒருமுறை இவரைப்பற்றிக் குறிப்பிடும் போது 'சிவாஜி கணேசன் அவர்கள் இந்தியாவில் பிறந்தமையே அவரின் சாபக்கேடு'' எனக்குறிப்பிட்டுள்ளார். சிவாஜி கணேசன் அவர்களுக்கு திறமைக்குரிய மதிப்பு அளிக்கப்படவில்லை என அந்தப் புகழ்பூத்த இயக்குனர் ஒருவேளை எண்ணியிருக்கக்கூடும்.

திரு. திலிப் குமார், திரு சத்திய ஜித்ரே, திரு. கமலஹாசன் மற்றும் திருமதி லக்சுமி போன்ற புகழ்பூத்தவர்களால் "நடிப்

புக்கு அவருக்கு நிகர் அவரே'' எனவும் ''நடிப்புத்துறையின் பல்கலைக்கழகமாகத்திகழ்ந்தார்'' எனவும் மெச்சப்பட்ட ஒருவர், நாலு தசாப்தங்களாக இத்துறையில் ஈடுபட்டிருந்த போதும் 'பாரத்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவில்லை என்பது கவலை தரும் விடயமாகும்.

1987ஆம் ஆண்டின் சிறந்த திரைப்பட நடிகரைத் தேர்ந் தெடுப்பதற்கான குழுவில் விருது வழங்குவதைத் தீர்மானிக்கும் சபையின் டெல் உறுப்பினர் ஒருவர் சசி கபூர் அவர் களுக்கே அந்த விருது வழங்கப்படவேண்டும் என வலியுறுத்திய தால் 'முதல் மரியாதை' என்ற திரைப்படத்திற்காக சிவாஜி கணேசன் அவர்கள் பெற இருந்த வெற்றிவாய்ப்பு ஒரு வாக்கினால் இல்லாமல் போனது துர் அதிர்ஷ்டமான சம்பவ மாகும். சிவாஜி கணேசன் அவர்கள் இந்த விருதைப் பெறத் தவறியதற்காக அந்த மத்தியஸ்தர்கள் குழுவின் தலை வராக இருந்த மறைந்த பிரேம் நசீர் அவர்கள் தனது கவலையைத் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அகில உலகத் திரைப்பட விழா 1961ஆம் ஆண்டு கெய்ரோ (Cairo) வில் நடாத்தப்பட்டபோது, வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற திரைப்படத்தில் திறமையாக நடித்த தற்காக சனாதிபதி நாசர் அவர்களிடமிருந்து விருதைப்பெற்ற சிவாஜி கணேசன் அவர்கள், பெருமதிப்பையும், புகழையும் பெறுவதற்கு 1993ஆம் ஆண்டுவரை காத்திருக்கவேண்டிவந்தது தேவர்மகன் என்ற அவரின் திரைப்படம் தேசிய விசேட விரு தைப் பெற்றமையாவது அவர் எதிர்பார்த்திருந்த கௌரவம் அவருக்கு கிடைப்பதற்கு வாய்ப்பாக இருந்தது.

மராட்டியர்களின் மாபெரும் தலைவராக விளங்கிய சத்திரபதி சிவாஜி அவர்களின் பண்புகளை தனது நடிப்புத் திறமையால் அழியாது நிலைபெறச் செய்ததனால் விலுப்புரம் சின்னையாபிள்ளை கணேசன் அவர்கள் 'சிவாஜி' என்ற புனை பெயரைப் பெற்றார்.

அவர் நடித்துள்ள முதலாவது திரைப்படமான பராசக்தி 1952 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதிலிருந்து சிவாஜி கணேசன் அவர்கள் நடிப்பதில் ஒரு தயக்கமும் காட்டவில்லை. 40 ஆண்டுகளுக்கு கூடுதலாகவுள்ள அவரது திரைப்படவாழ்வில் வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட 400க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து, அக் கதாபாத்திரங்கள் உண்மை யானவைதானோ எனக் கருதும் வகையில் அவற்றிற்கு உயிரூட் டித் தத்ரூபமாக நடித்துள்ளார்.

அரசியல் மற்றும் திரை உலகம் ஆகிய இரு துறைகளிலும் எம். ஜி. ஆர். அவர்கள்மீது சிவாஜி கணேசன் அவர்கள் கசப்புணர்ச்சி கொண்டிருந்தார். தனக்கு வழங்கப்படும் எந்த ஒரு கதாபாத்திரத்தையும் ஏற்று நடிப்பதற்கு சிவாஜி கணேசன் அவர்கள் முனைந்த அதே வேளையில் தெரிவு செய்த கதாபாத்திரத்திலேயே எம். ஜி. ஆர். அவர்கள் நடித்து வந்தார். உதாரணமாக வெறுக்கத்தக்க கதாபாத்திரத்தை ஏற்று நடிப்பதற்கு எம். ஜி. ஆர். அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. எனினும் திரு சிவாஜி கணேசனைப் பொறுத்த மட்டில் அப்படியான மனப்பான்மை அவரிடம் இல்லை.

எப்படியாக இருந்தபோதிலும் மிகைப்பட நடிப்பதற்கான நாட்டத்தைக் கொண்ட மனோநிலை சிவாஜி கணேசன் அவர்களிடம் காணப்படுவது அவருடைய பெரும் குறைபாடாகும். ஆனால் ஐம்பதாம், அறுபதாம் ஆண்டுகளிலிருந்த சாதாரண திரைப்பட ரசிகர்கள் பின்னணி இசையுடன் கூடிய பாடல்கள் மற்றும் உணர்ச்சிவசமான கட்டங்கள் கவர்ச்சிகரமாகவும் அதிர வைக்கக்கூடிய உரத்த குரலிலும் இருக்கவேண்டும் என விரும்பினர்.

மாறிவரும் காலத்திற்கு ஏற்ப சிவாஜி கணேசன் அவர்கள் தன்னை மாற்றிக்கொண்டார் என்ற உண்மையை நாம் அறிந்துகொள்ளலாம். சிவாஜி கணேசன் அவர்களின் பேச்சுப்பாணி மறைந்துவிட்டது என்றாலும் சத்துருக்கன் சின்ஹா அவர்களும் மலையாள நடிகரான சுகுமாரன் அவர்களும் அவரின் பாணியைப் பின்பற்றுகிறார்கள். அவருடைய ஆகப் பிந்திய தயாரிப்பான தேவர்மகன் என்ற திரைப்படத்தில் அவருடைய மகனாக நடித்த கமலகாசன் அவர்களின் திறமையால் கவரப்பட்டு திருப்தியுற்றபோது "நன்றாகச் செய்திருக்கிறாய்" எனக்கூறி அவரின் முதுகில் தடவியமை, அவர் மனக்கிளர்ச்சியை அடக்கி கட்டுப்படுத்தி தனது உணர்ச்சியை முகபாவம் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதைக் காட்டுகின்றது.

உரத்த தொனியில் அல்லாது குறைந்த தொனியில் பேசி நடிக்கும் வழக்கத்தை முன்னெப்போதும் சிவாஜி கணேசன் அவர்கள் கொண்டிருக்கவில்லை. காவல்துறை அதிகாரி சௌத்திரி (Inspector Soutri) என்ற திரைப்படத்தில் இறந்த தனது மகனின் உடலைக் கையிலேந்தி நிற்கும் உச்சக்கட்டக் காட்சியில ஒன்றும் பேசாது அழுதுகொண்டிருந்ததை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். தன்னுடைய உணர்ச்சிகளை தனது கண்கள் மூலம் மட்டுமே அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தனது மனக்கிளர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான விசேட மான தனி ஆற்றலை அவர் கொண்டுள்ளார் என அவரைப் பற்றி மதிப்புரை எழுதும் விமர்சகர்கள் கூறுகின்றனர். வியட் நாம் வீடு என்ற திரைப்படத்தில், குடும்பத்தின் உழைப்பாளிப் பாத்திரத்தை ஏற்று நடித்த சிவாஜி கணேசன் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்று வீடுதிரும்பியதும் தனிமையினால் ஏற்படும் உணர்ச்சியை வெளிக்காட்டிய முறை அவரின் திறமை யான நடிப்பின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

திரைப்பட நடிகை திருமதி இலக்சுமி இவரைப் பற்றி ஒரு முறை கூறும்போது ''நடிப்புத்துறையில் தான் யாரையும் பின்பற்றியிருந்தால் அது சிவாஜிகணேசன் அவர்களை மட்டுமல் லாது வேறுயாரையுமில்லை'' எனக்கூறியுள்ளார். அடையாறி லுள்ள திரைப்படத்துறைப் பயிற்சிப் பள்ளிக்கூடத்திலுள்ள மாண வர்களுக்கு, அவர் நடித்துள்ள திரைப்படங்களின் வீடியோ நாடாக்களைக் காண்பித்தே நடிப்பு கற்பிக்கப்படுகிறது என்பது திரு. சிவாஜிகணேசனின் நடிப்பின் பெருந்திறமைக்குச் சான்றா கும்.

மலையாள மொழியில் பாரன் அவர்களால் இயக்கப்பட்ட தும் திரும்பவும் அவராலேயே தமிழ்மொழியில் இயக்கப்பட்டு வெளியிடப்பட்டதுமான ''ஒரு மின்னா மினுங்கின்றை நுருங்கு வேதம்'' (Oru Minna Minunginte Nurungu Vetam – ஒரு மின் மினிப்பூச்சியின் சிறிய ஒளி) என்ற திரைப்படத்தில் பிள்ளையில் லாத ஒரு பாடசாலை ஆசிரியராகவரும் திரு. சிவாஜிகணேசனின் கதாபாத்திரம் கவனத்தில் எடுக்கவேண்டிய இன்னுமொரு கட்ட மாகும்.

திரு. கமலகாசன் இவரைப்பற்றி கூறும்போது ''நடிப்புக் கலையில் சிவாஜி கணேசன் அவர்கள் ஒரு பல்கலைக் கழகம் நாம் எல்லோரும் அதன் மாணாக்கர்களே'' என ஒருமுறை கூறி யுள்ளார். காலஞ்சென்ற அண்ணாத்துரை அவர்கள் ''திரு. சிவாஜிகணேசன் மறைந்திருக்கும் ஒரு தங்கச்சுரங்கம். அது நெடுநாளைககு வெளியேவராமல் மறைந்திருக்கமுடியாது'' எனக் கூறியதன் மூலம் அதே மாதிரியான கருத்தைப்பிரதிபலித்துள் ளார். ஆனால் சிவாஜி கணேசன் அவர்கள் தனது கடந்த கால புகழைப்பற்றி சதாகாலமும் சிந்தித்துக்கொண்டிருப்பதில்லை. களைத்துப்போயிருக்கும் குதிரைக்கு தன்னை ஒப்பிட்டுக்கூறிய சிவாஜி கணேசன் அவர்கள் திரைப்பட உலகிலிருந்து வெளி யேறுவதற்கு முன்னதாக, தன்னுடைய வாழ்வில் தான் சந்தித்த வற்றை உருவகப்படுத்தி நடிப்பதற்குக் கூடுதலாக விரும்புகின்றார்.

தன்னுடைய மகன் பிரபு அவர்கள் தனது அடிச்சுவடுகளைப் பின்பற்றிவருவதுடன் தமிழ்த் திரைப்பட உலகிலுள்ள பெயர் பெற்ற இளம் நடிகர்களின் மதிப்புக்கு ஈடுசெய்யக்கூடிய பெயரை ஏற்கனவே பெற்றுள்ளார் என்பது சிவாஜி கணேசன் அவர்களுக்கு ஆறுதலை அளிப்பதாகவுள்ளது.

அரசியல் வாதியாவதற்கான வாய்ப்புக்கள் சிவாஜி கணேசன் அவர்களுக்கு இனி இல்லை எனப்பலர் கருதியபோதிலும் அவருடைய நடிப்புத்திறமையில் அபார திடநம்பிக்கை கொண்டிருக்கும் அம்மக்கள், வெள்ளித்திரையில் கூடுதலான கதாபாத்திரங்களில் தோன்றி அப்பாத்திரங்களை அவர் அழியாப் பாத்திரங்களாக ஆக்குவார் எனக்கருதுகின்றனர்.

# இருட்டறையில் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது ஏன்?

தொலைக்காட்சி பார்க்கும்போது சிலர் அறைக்கதவுகளையும் ஜன்னல்களையும்மூடி, விளக்குகளையும் அணைத்து விடுகின்றார்கள். இருட்டான சூழ்நிலையிற்தான் தொலைக் காட்சியில் படங்கள் தெளிவாகத்தெரியும் என்று இவர்கள் நினைக்கின்றாாகள். ஆனால் இக்கருத்துச் சரியானதல்ல உண்மையில் வெண்மையான ஒழியிற்தான் நமது கண்கள் எப்பொருளையும் நன்றாகக்காண்கினறன. ஆகவே மெல்லிய வெண்ணொளியின் பின்னணிச் சூழலில் தொலைக்காட்சி பார்ப்பதுநல்லது. அதாவது விளக்கொளி நேராகத்தொலைக் காட்சியின் திரைமீது படியாமற் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம். ஏனெனில், சில ஒளிக்கதிர்கள் எதிரொளித்துப் படத்தைக் கெடுத்துவிடக்கூடும்,

இருட்டறையில் தொலைக்காட்சி பார்ப்பதால் கண்களின் நலம் இருவகையில் பாதிக்கப்படும். முதலில், தொலைக் காட்சித் திரையிலிருந்துவரும் ஒளிக்கிரணங்கள் கண்ணுக்கு இதமாக இருப்பதில்லை. இக்கதிர்கள் கண்களைக் கூசச்செய்வதுடன் கண்களின் உள்ளே எதிரொளிர்வுஞ் செய்கின்றன. இதனால் கண்களின்விழித்திரை பாதிக்கப்படுகின்றது. இரண்டாவதாக இருட்டறையில் தொலைக்காட்சித் திரைமீது ஒளியின் ஏற்ற இறக்கம் அதிகமாகிக் கண்களில் அதிர்ச்சியும் சோர்வும் ஏற்படுகின்றது. எனவே இருட்டறையில் தொலைக்காட்சி பார்ப்பது நல்லதல்ல.

103804

# அரசசார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட புதிய சட்டங்களை அடிப்படை உரிமைகள் இயக்கம் ஆட்சேபிக்கின்றது

(லங்கா காடியன் - 01. 01. 1994)

**ஆண்டுதோறும் 50,000ரூபாவுக்கு மேலானநிதியுதவியைப் பெற்றுவரும் சகல அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசாங்கத்தில் தங்களைப்பதிவுசெய்து கொள்ளவேண்டும் என கட்டாயப்படுத்தும் புதிய அவசரகாலச்சட்டம் ஒன்றை செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி அறிமுகப்படுத்தியதற்கு எதிராக பொதுமக்களின் உரிமைகளைக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் இயக்கம் (The Civil Rights Movement) தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தபோது, ஆண்டவனின் கிருபையையும் வேண்டிநின்றது.**

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக சனாதிபதி பிரேமதாசா அவர்களால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையைத் தொடர்ந்தே இந்தச்சட்டம் உருவாக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி இராஜா வனசுந்தரா அவர்கள் இந்த ஆணைக்குழுவின் தலைவராகக் கடமைபுரிந்தார்.

ஆண்டுதோறும் 50,000ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான நிதி,பொருட்கள், மற்றும் சேவைகள் முதலியவற்றைப் பெறும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்தில் தங்களைக்கட்டாயம் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்னும் சட்டம் அவசரகாலச் சட்டங்களின் கீழ் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆண்டுதோறும் 100,000 ரூபாவுக்கு மேலான பெறுமதியுள்ள நிதி, பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றைப் பெற்றுவரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வருமானங்களையும், செல

வீனங்களையும் கண்காணிப்பதற்கான அதிகாரத்தையும் கூட இந்த அவசரகாலச் சட்டம் வழங்குகின்றது என அரசிற்குச் சொந்தமான டெயிலிநியூஸ் பத்திரிகை கூறுகின்றது.

குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மோசடியிலும் ஒழுங்கீனமான செயல்களிலும் ஈடுபட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டிப் பொதுமக்கள் பல முறைப்பாடுகளைச் செய்தனர். அதனைத் தொடர்ந்து அரசசார்பற்ற நிறுவனங்களைப்பற்றி விசாரணையை மேற்கொள்வதற்காக சனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அவர்களால் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணைக்குழுவின் இரு முக்கிய சிபார்சுகளை செயல்படுத்துவதற்காக, அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப்படுவதோடு அவர்களுடைய செயற்பாடுகள் கண்காணிக்கப்படவேண்டும், என்ற விதிகளையும் அவசரகாலச்சட்டங்களின் கீழ் அரசாங்கம் பிரகடனப்படுத்தியது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பற்றி விசாரணை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவை நியமனம் செய்யும்போது அந்த ஆணைப்பத்திரத்தில் முன்னாள் சனாதிபதி அவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெற்றுவரும் நிதிகளின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கான சட்டம் தற்போது இல்லையெனவும், அவற்றின் நிதி விசேடமாக வெளிநாடுகளிலிருந்து பெறப்படுவது மோசடி செய்யப்படுகின்றது அல்லது இன, மத மற்றும் சமூக இயல் நிலைக்குப் பங்கம் ஏற்படுத்துவதற்காகவும், தேசியபாதுகாப்பு மற்றும் பொது மக்களுக்கிடையிலுள்ள ஒழுங்கமைதி, நாட்டின் பொருண்மிய ரீதியிலான நலன்கள் ஆகியவற்றிற்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆணைக்குழு பரிந்துரை செய்த சிபார்சுகள் பலவற்றுள் கட்டாயமாக அமுல் செய்யப்படவேண்டும் எனக் கூறும் சட்டங்களைப் பாதுகாப்பதற்கானசட்டங்கள் உருவாக்கல், வெளிநாட்டிலிருந்து பெறப்படும் நிதியைக் கண்காணிப்பதற்கான சட்டங்கள் உருவாக்கல், இதற்கென ஒரு ஆணையாளரை நியமித்தல், செயலகம் ஒன்றை அமைத்தல் இவற்றுக்கான நிதியை ஏற்படுத்தல் அரசாங்கத்தின் பலமட்டத்திலும் இந்த நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கு வேண்டிய அமைப்புமுறைகளை ஏற்படுத்தல் ஆகியவைகளும் அடங்கும்.

இவற்றிற்கான சட்ட மூலங்களை தயாரிப்பதற்கு நெடுநாட்கள் செல்லும் என்பதால் இந்த நிறுவனங்களைப் பதிவு செய்தல், வருமானம் மற்றும் செலவீனங்களைக் கண்காணித்தல் ஆகிய இரு பிரதான அம்சங்களை உள்ளடக்கும் சட்டங்கள் அவசரகாலச் சட்டங்களின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டன என அரசாங்க வட்டாரங்கள் கூறின.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளரிடத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் வரவுகளையும், செலவுகளையும் கண்காணிக்கும்அதிகாரி யாக அவரே விளங்குவார்.

"அனைத்து நடவடிக்கைகளும் அவதானிக்கப்படவேண்டும். சில பெரிய நாடுகள் கொண்டுள்ள பிற்போக்கான கொள்கையே "இப்படியானன சி தனை அலை" உருவாகுவதற்கு காரணம் என பொது மக்களின் உரிமையைக்காப்பதற்காக உருவாக்க 'பட்ட இயக்கம் கூறியுள்ளது 1971ஆம் ஆண்டிலிருந்து மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த அரசாங்கங்களுக்கு எதிராக நடைபெற்ற,, கிளர்ச்சிகள், வேலைநிறுத்தங்கள் மற்றும் படுகொலைகள் பொதுமக்களுக்கிடையிலான பூசல்கள், பயங்கரவாதிகளின்வன் செயல்கள் பெரும் எண்ணிக்கையிலான மனிதர்களின் திடீர்மறைவு சட்டத் ற்கு அப்பாற்பட்ட கொலைகள் ஆகியவை நடைபெற்ற காலங்களில் தாங்கள் இயங்கி வந்ததை பொதுமக்களுக்கு அவர்கள் நினைவூட்டினர், இந்தக்காலகட்டத்தில் மிகக்கொடிய விட்டுக்கொடுக்காத அவசரகாலச் சட்டங்கள் பலவற்றையும் அவர்கள் கண்டுள்ளனர்,எனினும் சுதந்திரமாக இயங்கும் நிறுவ னங்களின் கட்டுப்பாடற்ற செயல்பாடுகளில் தலையிடுவதற்கு இப்படியான முயற்சி ஒன்றும் அப்போது மேற்கொள்ளப் படவில்லை

## குமிழ்முனைப் பேனா எவ்வாறு எழுதுகிறது?

குமிழ்முனைப்பேனாவில் 'ரீ பில்' என்று நாம் அழைக் கும் நீண்டமெல்லிய குழாயின் ஒருமுனை சிறிய உருண்டை போன்ற அமைப்பைக்கொண்டது' இதனாற்தான் போல் பொயின்ட் என்று இதற்குப்பெயர். இந்தச் சிறிய உருண்டை சுழலுந்தன்மை கொண்டது.

எழுதுவதற்காகப் பேனாவின்முனைக்குத் கீழ்ப்புறமாக நாம் சரிக்கிறோம். அப்போது புவியீர்ப்புத்தன்மையால் மை பேனாவின்முனைக்குத் தள்ளப்படுகிறது. இப்பொழுது நாம் எழுதும்போது சிறிய உருண்டை சுழல்கிறது. மைதடவப்பட்ட சிறிய உருண்டையின் பகுதி வெளியேவருகிறது. இதனால் மை தாளின்மீது படிகின்றது. இந்தச்சிறிய உருண்டைபோன்ற அமைப்பைக் குமிழ்முனை என்று சொல்கின்றோம். குமிழ் சுழல்வதன் காரணமாக மையினால் நிரப்பட்ட முனைப் பகுதி உள்ளிருந்து வெளியேவருகிறது. இது தொடர்ந்து நடப்பதால் பேனா தொடர்ந்து தடையின்றி எழுதுகிறது. நாம் பயன்படுத்தாதபோது குமிழிலுள்ள முனை உருளுவ தில்லை. இதனால் மை உலர்ந்து போகாமற் பாதுகாக்கப் படுகிறது.

பொதுசன நூலகம்

## "புத்ததர்மப் போதனை' என்னும் புத்தகத்தை எதிர்க்காவிடில் எதிர்காலப் பரம்பரையின் நிமித்தம் கண்ணீர்விட நேரிடும்

### ஈழவாதிகளுக்குப் பதில்தரும் கருத்தரங்கில் மதுளுவாவி தேரர் கூறுகிறார்

(திவயின - 08.12.1993)

**"புத்ததர்மப் போதனை'' என்னும் நூலை வெளியிட்டமையைச் சிறிய விடயமாகக் கொள்ளக்கூடாது. இதற்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து எடுக்கவேண்டும். இல்லையெனில் இனத்திற்காகவும் புத்தசமயத்திற்காகவும் நாட்டுக்காகவும் மட்டுமின்றி எதிர்காலப் பரம்பரைக்காகவும் நாம் கண்ணீர்விடநேரும்.**

பேராசிரியர் எஸ். ஜே. தம்பையா அவர்களால் எழுதப்பட்ட புத்தசமயப் போதனை என்னும் நூலைப் பற்றிய விடயங்களை வெளிப்படுத்தவும், ஈழம் வாதிகளில் கற்றவர்களுக்குப் பதில்கொடுக்கவும் கொழும்பு இளைஞர் பௌத்தசங்க மண்டபத்தில் நிகழ்ந்த கருத்தரங்கில் கோட்டை சிறிநாகவிகாராதிபதியான மதுளுவாவி ஜோகித்த தேரர் இவ்வாறு கூறினார்.

பேராசிரியர் கும்புறுப்பிட்டி ஆரியரத்தின தேரர் அவர்களின் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடந்தது. நாட்டுப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி (தேசபிறேமி), மகாபோதிச்சங்கம், கொழும்பு பௌத்த இளைஞர்சங்கம், சிங்களச் சட்ட வல்லுனர் சங்கம் ஆகியன இக்கருத்தரங்கை ஒழுங்குசெய்திருந்தன. இல்லறத்தினரும் துறவறத்தினருமாகப் பெருந்தொகையினர் இக்கூட்டத்திற் பங்குபற்றினர்.

இங்கு மேலும் பேசிய ஜோகித்த தேரர் பின்வருமாறு கூறினார்.

எங்கள் இனத்தின் வரலாற்றைத் திரித்தும் பிக்குகளுடைய உண்மையான உருவத்தைச் சிதைத்தும் பேராசிரியர் தம்பையா அவர்கள் எழுதிய நூலைப்பற்றி நன்கு விளங்கிக்கொள்வதுடன் மேலும் பல விடயங்களை மனதில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவர் பின்னிருந்து ஈழம்வாதத்துக்கு தூபம் இடுகின்றார். என்பது எங்களுக்கு விளங்குகின்றது. உங்களுடைய நிழற்படம் புத்தகத்தின் மேலட்டையில் உங்களது அனுமதியின்றிப் போடப் பட்டது. என்று தம்பையா எனக்கு ஒரு கடிதம் அனுப்பியுள் ளார். மன்னிப்பும் கேட்டுள்ளார். உண்மையில் அவர் புதிதாக வந்தவரா என எங்களுக்குச் சந்தேகமாக உள்ளது.

தம்பையா அவர்கள் உலகத்தவர்களின் கண்களை மறைத்து ஈழம் குதிரையை முன்னோடச் செய்துள்ளார். சிங்கள பௌத்த பிக்குகளைப் பயன்படுத்தியே இவ்வாறு செய்துள்ளார். எவ்வளவு நன்றாக அவர் உலகத்தைத் தவறான வழியில் செலுத்தியுள் ளார் என்று இப்புத்தகத்தின்மூலம் தெரிகிறது. ஓல்கொட் அவர்கள் சிங்கள பௌத்தர்களைத் தமிழர்களுக் கெதிராகத் தூண்டினார் என்று அவர் காட்டுகிறார். சிங்கள மறு மலர்ச்சியைத் திரித்துக்காட்டுகின்றார். தமிழரது மறுமலர்ச்சி, முஸ்லீம்களது மறுமலர்ச்சிபற்றி இவர் ஒன்றும்சொல்லவில்லை. வேண்டுமென்றே அப்பிரிவுகளை மறைத்திருக்கிறார்.

## குளங்களும் விகாரைகளும்

குளங்களும், விகாரைகளும் என்னும் எண்ணக்கருவைத் தவறான எண்ணக்கருவாக அறிமுகப்படுத்துகின்றார். ஆசிரியர் லால் ஜெயவர்த்தனா அவர்களும் இந்தக்கருத்தையே ஏற்றுக் கொள்வது தெரிகிறது. பயங்கரவாதிகள் செய்யும் ஒரு மிலேச் சச் செயல்கூட இதில் இடம்பெறவில்லை. மக்களைக் கடும் கோபம் கொள்ளச் செய்து கொலைகளை ஊக்குவிக்கும் கூட் டத்தினராகப் பிக்குகளைக் காட்டுகிறார். இந்தச் செயலுக்கு எதிர்ப்பைக் காட்டுவதற்குப் பகிரங்கமான வெளிப்பாட்டை அரசின் மூலம் செய்யவேண்டும். நாம் எல்லோரினதும் கண் கண்களைத் திறப்பதில் வெற்றிபெறும் சந்தர்ப்பத்தைத் தம்பையா அவர்கள் தம்புத்தகம் மூலம் உண்டாக்கியுள்ளார். இச் சந்தர்ப்பத்தில் நாம் சுறுசுறுப்புடன் ஒன்றுசேர்ந்து கடும் நடவடிக்கைகள் எடுத்து எங்கள் பலத்தைக்காட்டவேண்டும். இல்லையெனில் நாம் எதிர்காலத்திற் பெரும் கழிவிரக்கம் கொள்ளநேரும்.

## ஆசிரியர் பெல்லன்வில விமலரத்தின தேரர்

சிங்கள இனத்தை அழிப்பதற்கும், ஈழம் வாதத்துக்கு பல்லாண்டு கூறவும் உலகம் முழுக்க அமைப்புரீதியான கூட்டம் ஒன்று உண்டு. ஆசிரியர் தம்பையா அவர்களுக்குச் சார்பான கூட்டத்தினருடைய வெளிப்பாட்டின் மூலமும் இந்தச்செய்தியே சொல்லப்படுகிறது. பௌத்தர்களை வேறுசமயத்துக்கு மாற்றுவதை எதிர்த்து எங்கள் நுகேகொட கூட்டத்தை நடத்தினோம். இந்தக்கூட்டத்தைப்பற்றி இந்தியாவின் 'ரைம்ஸ்' என்னும் பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்தக் கூட்டத்தைப் பற்றி முற்றிலும் எதிரான கதையே அதில் சொல்லப்படுகிறது. இந்தக்கூட்டம் ஆழ்ந்த சிந்தனையின் மூலமே ஒழுங்கு செய்யப்பட்டது என அவர் கூறுகிறார். இந்தக்கூட்டதை இலங்கைப் பௌத்த மகாசபையே கூட்டியது. நாட்டினுள் சமயபூசை ஆரம்பிக்க ஆயத்தமாவதை இக்கூட்டம் எடுத்துக்காட்டியது என்றும் அதில் குறிக்கப்படுகிறது. ஆசிரியர் நளின் த. சில்வா, ஜே. வீ. பி காரராக அதன்மூலமே அறிமுகப்படுத்தப்படுகிறார்.

இவற்றின் மூலம் எங்கள் நடவடிக்கைகளைச் சிக்கல்படுத்தியுள்ளார்.

பேராசிரியர் மங்கல இலங்கசிங்க அவர்கள் ',புடிசம் பிட்ரேட்'' என்னும் புத்தகத்தை சாஸ்திர ரீதியற்ற பக்கச்சார்பான புத்தகம் என்கிறார். பக்கச்சார்பான விடயங்களை மறைத்துக் கருத்தை வெளிப்படுத்தல் நல்லதல்ல பௌத்த பிக்குகளை இப் புத்தகத்தின் மூலம் அபகீர்த்திப்படுத்தியுள்ளார். சிங்கள பௌத்தர்கள் தமிழரிடத்து அனுதாபம் அற்ற பண்பற்ற கூட்டத்தினர் என இப்புத்தகத்தை வாசிக்கும் எவரும் விளங்குவர். இயக்கர் இராச்சதர்களிடத்து நம்பிக்கைவைக்கும் கூட்டத்தினராகையால் சிங்கள பௌத்தர்கள் அப்படியுள்ளனர் எனக்காட்ட முயற்சி செய்கிறார்.

## பண்டிதரும் பாமரரும்

இலங்கையிலுள்ள பௌத்த பிக்குகளும் பௌத்தர்களும் இப் புத்தகத்துக்கு எதிர்ப்பைக் காட்டவேண்டும். தமிழர்களைக் கொல்லும்படி தூண்டும் சிங்கள பௌத்தர்கள் ஒரு கொலைக் கூட்டத்தினர் எனவும் பிக்குகள் அதற்கு ஊக்கமளித்துத் தூண்டுபவர்கள் எனவும் காட்டமுனைகின்றார்.

வித்தியோதய வித்தியாலங்காரப் பிரிவெனாக்கள் தோற்றுவிக்கப்பட்டது தமிழர் விரோத செயற்பாட்டுக்கே எனக்காட்ட

முயற்சிக்கிறார். சிங்களம் மட்டும் என்றுகூறிய கோரிக்கையாளரை பகுப்பாய்வு செய்துவிட்டு ஐம்பதுக்கு ஐம்பது என்னும் கோரிக்கைகளை முன்வைத்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களைப் பற்றிப் பகுப்பாய்வு செய்யாமை அவரது பக்கச்சார்பைக் காட்டுகிறது.

**டாக்டர் குகதாஸ அமலசேகர அவர்கள்**

தம்பையா அவர்களுடைய இந்தப் புத்தகத்தைத் தடைசெய்யும்படி நாம் கோரவில்லை. புத்தகத்தைத் தடைசெய்தல் கலாச்சார இலக்கணமும் அல்ல. இப்புத்தகத்தில் இனத்தை விற்று வெளியிடப்பட்ட கருத்துக்களை சிலர் ஊக்கமுடன் வாசிப்பதாக நாம் கேள்விப்படுகின்றோம.

**உள்ளடக்கம்**

இப்புத்தகத்தின் உள்ளடக்கம் சூழ்ச்சியானது என உணருவதால் நாம் இப்புத்தகத்தை எதிர்க்கிறோம். இது ஈழம்வாதத்துக்குச் சாதகமான வேலைத்திட்டம் என்பது நன்கு விளங்குகின்றது.

இந்நாட்டுக்குள் பேராதரவுவாதிகளை ஈர்ப்பதற்கு முதலில் சிங்கள பௌத்தர்களுடைய குரலை அடக்கவேண்டும் என அவர்கள் அறிந்துள்ளனர். சமயங்களை மாற்றுவதும் ஒரு காரணமாகும். இதுபற்றி கூடுதலாக தாமதித்துவிட்டோம். இப்புத்தகத்துக்குச் சார்பானவர்களில் சிலர் ஊழல் நிறைந்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்களும் உண்டு. இதுபற்றி ஆராய கமிஷன் நியமிக்கவேண்டும் என அரசாங்கத்திற்கு நாம் ஆலோசனை கூறவேண்டும்.

**பாராளுமன்றப் பிரதிநிதி சட்டத்தரணி**
**எஸ். எல். குணசேகரா அவர்கள்**

நான் பௌத்தன் அல்ல. நான் கூறும் விடயங்கள் எதுவும் சமயவாதத்துக்குரியதல்ல. எந்தச் சமயமும் இம்சையைப் போதிக்கவில்லை. ஆனால் தம்பையா அவர்களுடைய புத்தகத்தைப் போன்ற ஒரு புத்தகத்தை நான் இதுவரை கேள்விப்படவில்லை.

இலங்கையில் ஈழம்வாதத்துக்கு இத்தகைய புத்தகத்தால் ''உணர்வு'' வழங்குவது ஏன்? பயங்கரவாதப் போர் செய்வது தமிழர்களது உரிமைகளைப் பாதுகாக்கவா? புலிகளின் கருத்

துக்குக் கட்டுப்படாத ஆயிரக்கணக்கான ஏனைய தமிழர்களைப் புலிகள் கொன்றது ஏன்? இந்தக்கேள்விகளுக்கு அரசியற் தீர்வு தேவையெனில் இந்தநாட்டில் எந்த மாகாணத்திலும் பிறந்தவர் வேறு எந்தமாகாணத்திலும் வசிக்கும் உரிமை இருக்கவேண்டும்.

### வரலாற்றைத் திரித்தல்
### பேராசிரியர் மென்டிஸ் ரோகணதீர அவர்கள்

புத்தபெருமானால் உண்டாக்கப்பட்ட சிங்கள பரம்பரை அவரது விருப்பின் பேரிலேயே 2500 ஆண்டுகளுக்குக் கூடுதலாகத் தன் செயற்பாடுகளை அமுலாக்கிவந்துள்ளது. புத்த சமயத்துக்கு மாறான செயற்பாடுகள் தோன்றிய சந்தர்ப்பங்களிலிருந்து புத்தசமயத்தை பாதுகாக்க பெரும் புனிதச் செயல் புரிந்தார். 1956 ஆம் ஆண்டு குழப்பம் செய்தவர்களும் சிங்களவர்களே ஆனாலும் அவர்கள் இவ்வளவு கீழ் இறங்கியது ஏன்?

இந்தப் புத்தகம் வரலாற்றைத் திரித்துள்ளது. அவர்கூறும் எந்தவிடயத்தையும் ஏற்றுக்கொள்ளமுடியாது. சிங்களவன் வரலாற்றில் எக்காலமும் முகம்கொடாத விதத்தில் அழிவுக்கு முகங்கொடுத்துள்ளான். இலங்கை - சிங்களவர் - பௌத்தர் மூன்றும் ஒன்றோடொன்று இணைந்தது என்பது வரலாறு முழுக்கப் பரந்து காணப்படுகின்றது. இந்த எண்ணக்கருவைச் சிதற விடாது கற்றவர்களினுடைய உதவியுடன் செயல்படவேண்டும் என்றார்.

### பேராசிரியர் நளின் த சில்வா

பாளியும், சிங்களமும் சரியாகத் தெரியாதவர்களுடைய கருத்தை எடுத்துக்கொண்டு புத்தகத்தைத் தயாரித்துள்ளார். புத்தர் புத்திரர்களே நிலத்தின் மக்கள் ஆகியிருப்பதாகவும் இப் புத்தகத்தில் உள்ளது. இதுவும் தம்பையாவின் கருத்தல்ல. மகாநாமர் காலத்திலிருந்து பிக்குகள் தம்புத்தகங்கள் மூலம் தமிழர் விரோதக் கருத்துக்களை மக்களுடைய மனதில் பதித்து வந்தனர் எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு புத்தகம் மாத்திரமே. இதுபோன்ற நூற்றுக்கணக்கான புத்தகங்கள் உள்ளன. பல்வேறு பத்திரிகைகளும் உண்டு.

ஈழங்கொடுக்கவில்லை எனச்சொல்லிக்கொண்டு எல்லாவற்றையும் பெறுகின்றவர்கள் ஈழம்வாதிகளே. அவர்கள் புலிகள் அமைப்பின் உறுப்பினர் இல்லாமலும் இருக்கலாம். ''வசிடர்'' நிறுவனத்திடமிருந்து சிலருக்குப் பெருமளவு பணம் கிடைத்துள்ளது.

மாகாண சபைகளுக்குக்கூடிய அதிகாரம் வேண்டும் எனப் பலர் கேட்கின்றனர் இதைப் பிரபாகரனுக்குக் கூடிய அதிகாரம் கேட்பதாகக் கொள்ளவேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று இவ்வளவு வெறுப்பை பெறநேர்ந்தது ஏன் எனக்கூறின் தொண்டாமான் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்துவரின் அவரை மார்பில் அணைத்துத் தூக்கஆயத்தமாக இருப்பதால் ஆகும் இன்றுள்ள பிரச்சனை தேசியத் தன்மைக்கு பாதகமானதா சாதகமானதா என்பதாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஒழிக்க விரும்பின் அப்படிச் செய்யலாம். அப்படிசெய்யின் நாம் இதை விடத் தேசியத்தன்மையை உறுதிப்படுத்தும் சக்தியுள்ள கட்சியைத் தோற்றுவிப்போம்.

### ஆசிரியர் பியசேன நிசாநாயக்கா அவர்கள்

தம்பையாவின் இப்புத்தகம் இலங்கை ஈழம் விடயத்துக்கு நன்மைதருகிறது எனப்பயமின்றிக் கூறலாம். இப்புத்தகத்துடன் தமிழர் மட்டுமல்ல சிங்களவர்களும் தொடர்புடையவர்களாவர். இதற்கு இவர்கள் ஆதரவளிக்கின்றனர். வடக்குக் கிழக்கு ஈழப் போருக்கு உதவிபெறுதலை நிறைவுசெய்யவே இப்புத்தகம் வெளியிடப்பட்டது. இதற்காக பெரும்பணம் போருக்குச் செலவுசெய்வது கஷ்டம் என அரசு கூறுகிறது. அரசுக்குக் கஷ்டமெனில் அரசாங்க அதிகாரமில்லா இந்தக்கூட்டத்தினர் இவ்வளவு பலத்துடன் இருந்து போர்ச் செயற்பாட்டைக் கொண்டு நடத்துவது எப்படி?

### பின்வாங்காது!

தாம் மிக வறிய கூட்டத்தினர் எனக் காட்டவும், அதன் மூலம் தேவையான பணத்தைப் பெறவும் மென்மையான செயற்பாட்டைப் பின்பற்றும் படித்தவர்களது கல்விப் பண்பைப் பிரயோசனத்துக்கு எடுத்தலும் ஒரு தந்திரம். சிங்கள பௌத்தர்களுடைய தேசிய இனத்தன்மையை மறுபுறம் திரிக்காது காட்ட இச்செயற்பாடு செய்யப்பட்டது. குளங்களும் கால்வாய்களும் என்ற எண்ணக்கரு இலங்கை போன்ற நாட்டுக்குப் பொருத்தமற்ற பொருளாதாரமுறை எனக்காட்டுவதும் இதன் மேலும் ஒரு நோக்கமாகும்.

''வசீடர்'' நிறுவனத்தின் மூலம் சிலபுத்தகங்களை வெளியிடுவது ஈழம் வாதிகளுக்குச் சாதகமாகும் என்பது எங்கள் கருத்து. இலங்கையின் புகழுக்கு ஊறுசெய்யும் வண்ணம் செயற்படும் இச்செயல்பற்றி நாமும் மிகக் கூர்மையான புத்தியுடன் செயற்பட வேண்டியுள்ளது.

### (தேசபிரேமி) நாட்டுப்பற்றுள்ள பிக்குகள் முன்னணிச் செயலாளர் பெங்கமுவ நாலகதேரர்

நாட்டின் உரிமை என்பது ஒரு முற்றுகை மூலம் பிடித்துக் கொண்டு, நிர்வாகம் செய்யும் ஒன்றாகும். நிகழ்கால உலகம் எவ்வளவு பிழையான வழியிற் செல்கின்றது. உலகில் அதிகாரமுள்ளவர்களும், மிஷனரிமாரும் பல்லின மக்களான பணாரகக்

ரும் சிங்கள பௌத்தர்களை வீழ்த்தி மட்டம்தட்ட முயலுகின்றனர். இதில் கற்றவர்களுக்குப் பணம் கொடுத்து புத்தகம் எழுதுவித்து தம்கருத்தை நிறைவுசெய்யும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். பேராசிரியர் தம்பையா அவர்களுடைய புத்தகம் இதில் சிறிய முயற்சி மாத்திரமே என்பது எங்கள் எண்ணம். நாம் இதற்கு இடம் கொடுப்பதா? என்பது கேள்வியாகும். இதுபோன்ற செயற்பாடுகளுக்கு மாறாக நாம் செயல்பட வேண்டும். இந் நாட்டின் புத்தசாசனத்திற்கும் இனத்திற்கும்வாழ்வுக்கும் சேவையைச் செய்யும் பணியை மதுலுவாவி யோகித தேரரிடம் ஒப்படைக்கிறோம்.

தலைமை இருக்கையில் போதனை நிகழ்த்திய பேராசிரியர் கும்பிறுப்பிட்டி ஆரியரத்தன தேரர் இப்புத்தகம் பற்றி 35 பேருடைய கையெழுத்திட்ட அறிவிப்பை வெளியிட்டிருப்பினும் சிலர் புத்தகத்தைக் காணாது கையெழுத்திட்டுள்ளனர். எனது எண்ணப்படி பேராசிரியர் தம்பையா அவர்கள் பௌத்த காட்சிகள் பற்றி நல்லவிளக்கமுள்ள ஒருவர். நான் அவரை அறிவேன். 1976 இல் இருந்ததைவிட அவர் 1993 இல் மாறுமட்ட ஒருவராகியுள்ளார் என எனக்கு விளங்குகின்றது.

## பெரிய கஷ்டம்

இப்புத்தகம் மூலம் அவர் பெரும் கஷ்டத்துள் விழுந்துள்ளார் என்பது எனது கருத்தாகும். நாட்டின் சமூகக்கல்வி பற்றி ஏதாவது எழுதும்போது நல்ல விதமாக எழுதவேண்டும். தமக்குப் பின் உள்ள ஏனைய ஆட்களிடம் தகவல்பெற்றே அவர் இப் புத்தகத்தை வெளியிட்டார். இவர் சமூகவியலாளர் தன் உடலைக் காப்பாற்ற சிங்கள இனத்தையும் பிக்குகளையும் நாட்டையும் இகழ்ந்துள்ளார், அகிம்சை வாதத்துக்கு இலக்கான பிக்குகள் பயங்கரவாதத்தை ஏன் ஊக்குவிக்கின்றனர் என கேள்வி எழுப்பியுள்ளார். எனினும் அதில் மறுமொழி கொடுக்கவில்லை.

இந்தநாட்டை 20 தடவை வெளிநாட்டார் ஆக்கிரமித்துள்ளனர். இதில் 16 தரம் தென்னிந்தியத் தமிழரே ஆக்கிரமித்தனர். சுயபாதுகாப்புக்குப் போராடாதிருப்பவர் எங்குள்ளனர்? இது பன்றி இறைச்சியைப் பன்றியினது உடலில் வைத்து வெட்டுவது போன்றது. கல்வியியலாளர் இதை விளங்காமை ஆச்சரியத்துக்குரியது. பல தலையங்கங்களில் கல்வியாளரிடையே விவாதங்கள் நிகழ்ந்துள்ளன. இதற்குப் பொருத்தமான காரணமொன்றும் எழுதப்படவில்லை. தம்பையா அவர்கள் போன்ற இலங்கையர் பற்றி நாம் பெருமைப்படுகின்றோம். ஆனாலும் இப்புத்தகம் மற்றவர்கள் நீந்துவதற்கு எழுதப்பட்டது என்பதே எனது கருத்தாகும்.

சட்டத்தரணி மகிந்த விக்கிரமசேன, எப். ஜெயசேன, கே. கருணதாஸ கேமசந்திரா, கேவாவிதாரண ஆகியோரும் இக்கருத்தரங்கில் உரையாற்றினர்.

# அதிகார ஆசைபிடித்த அரசியலின் முடிவு யுத்தமே...

—ஆசிரியர் பெல்லன்வில
விமலரத்தின தேரர்

*(ராவய — 16. 01. 1994)*

**வடக்கு கிழக்குப் போர், படிப்படியாக முற்றுகிற போது அதற்குப் பலியாகிற சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களுடைய தொகையும் படிப்படியாக உயர்ந்து கொண்டேயிருக்கின்றது. அதுபோலவே கடந்த பத்து வருடங்களுள் அழிந்துபோன செல்வத்தின் தொகையும், காலமும் நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு பயன்படுத்தி இருப்பின் எவ்வளவு பெரிய நற்பலனாயிருக்கும். எந்தச் சமயமும் போரை அனுமதிக்காது, அதுபோல இனவாதமும் நிராகரிக்கப்படுகின்றது. இன்று போரையும், சமாதானத்தையும் பற்றி ஆசிரியர் பெல்லன்வில விமலரத்தின தேரர் பேசுகின்றார்.**

*தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகம், வடக்குப் பிரதேசத்திற் பூரணமாகவும், கிழக்குப் பிரதேசத்திற் சில பகுதிகளிலும் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள சிவில் நிருவாகத்தை வடக்குக் கிழக்கு பகுதிகளில் உள்ள புலிகளின் பிரிவுகளிற் காணமுடியாது. அப்பகுதிகளில் இற்றைக்குப் 12-15 வருடங்களிற்கு முன்பு ஏற்பட்ட குழப்பம் நிரந்தரமான சிக்கலான நிலையாகி உள்ளது. அந்தக்காலத்தில் பயங்கரவாதக் குழுக்கள் இலகுவாக ஆரம்பித்து தனி இராச்சியக் கோரிக்கையின் வேலைத்திட்டங்களை விருத்திசெய்தன. வடக்குக் கிழக்கின் இன்றையநிலை, அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுமளவு பலம்பெற்றுள்ளது. இராணுவ பலமும், போர் ஆயுத பலமும், வேறு சர்வதேச அதிகார நிறுவனங்களின் பலமும் பெற்றதன் காரணமாக இவர்கள் இவ்வளவு பிரபலமாகியுள்ளனர்.*

*வடக்கில் இன்றுள்ள நிலை என்ன? போரின் இறுதி நோக்கமென்ன நான் அறிந்தவிதத்தில் பயங்கரவாதத்துக்கும் இராணுவத்துக்குமிடையிலான மோதலே இன்று வடக்கில் உள்ளது. நாட்*

டில் ஒற்றுமைத் தன்மையை ஒழிக்கவும், நாட்டிலிருந்து ஒரு பகுதியைப் பிரிக்கவும், தனி இராச்சியம் அமைக்கவும் நிகழ்த்தும் பயங்கரவாத வேலைத்திட்டங்களே இன்று வடக்கிலுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கமும், தெற்கில் சில அமைப்புக்களும் இதை விடுதலை இயக்கம் எனக்காட்ட முயற்சிப்பினும், அவர்களது நடவடிக்கைகள் இது ஒரு குருட்டுப் பயங்கரவாதம் எனக்காட்டுகின்றது.

இந்நிலை மிக முற்காலத்திலிருந்தே ஆரம்பித்தது. அரசியல் வாதிகள் அதிகாரம் பெறுவதற்காக அடக்கப்பட்டிருந்த சிங்கள, தமிழ் மக்கள் பிரிவினரை ஏமாற்றி அதிகாரத்தில் இருப்பதற்காகப் பயன்படுத்தினர். இதுபோன்ற பிரச்சினை காரணமாக வடக்கில் குழப்பம் ஆரம்பித்தது. ஏகாதிபத்திய வாத நிருவாக காலத்திலிருந்து தமிழ்மக்கள் விசேட 'நன்மைகள் பெற்றுவந்தனர். சுதந்திரத்தின் பின் (1948இன்பின்) இந்த நாட்டிலிருந்த எல்லாமக்களுக்கும் இணக்கமான சமமான வேலைத்திட்டங்கள் உண்டாக்கப்பட்டதனால் தமிழ் மக்கள் பெற்ற விசேட நன்மைகள் படிப்படியாகக் குறைந்துபோயின. அப்பொழுது தமிழ்ம்க்கள்; சிங்களவர் இனவாதக் கொள்கையுள்ளவர்கள் என்ற கருத்தைப் பரப்பினர். இது உண்மையைப் பூரணமாக மறைக்கும் ஒன்றாகும். தமிழ் அரசியற்தலைவர்களாலேயே இனவாதக் கருத்து ஆரம்பித்துப் பரவத் தொடங்கியது. சிங்கள தமிழ் மக்களிடையேயிருந்த அன்னியோன்னியத் தொடர்பும் நம்பிக்கையும் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 50:50 என்ற கோரிக்கை முன்வைப்பால் மேலும் கெட்டது.

### காரணிகள்

இதனால் இருபக்கத்தினரிடையேயும் நிரந்தரமான சந்தேகம் ஏற்பட்டதுடன், தமிழ் அரசியல்வாதிகள் தம்மக்களுக்காக என்று சொல்லிக்கொண்டு, முறைக்கு முறை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். இந்நிலைக்குத் தூரநோக்கற்ற சந்தர்ப்பவாதிகளான அரசியல்வாதிகளும் உதவியாயினர். அதிகாரத்தில் இருந்த அரசாங்கங்கள் அவர்களைச் சந்தோசப்படுத்துவதற்காக அந்தந்தச் சந்தர்ப்பங்களில் சந்தர்ப்பவாதியாகச் செயற்பட்டன. இதனாற் பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கமாகத் தீர்க்கக்கூடியதாக இருந்த பிரச்சினைகள் போராயுதங்களாற் தீர்க்குமளவான தூரத்துக்கு வந்துள்ளன.

தமிழ் மக்களுக்கு அநியாயமான நிலை இருப்பதாகச் சொல்லமுடியாது. அதேபோல தமிழ் மக்களுக்கு இல்லாத புதிய நன்மைகள் ஏனைய மக்கள் பிரிவினருக்கு கொடுக்கப்பட்டுள்ள

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

தாகவும் சொல்லமுடியாது. தொழில், கல்வி, காணி போன்ற முதல் வரிசைச் சிவில் உரிமைகள் விடயத்தில் பொதுவாக நாட்டின் எல்லா மக்களுக்கும் செல்லுபடியாகக் கூடிய விதிகளும் பிரமாணங்களும் அமுலாக்கப்பட்டன. வடக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளில் நியாயமின்மை ஏற்பட்டிருந்தது எனலாம்.

நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது எங்களின் சில அரசியல்வாதிகள் பின்பற்றிய சில கொள்கைகள் காரணமாக தமிழ் மக்களுக்குச் சில குறைபாடுகள் இருந்துள்ளன என நினைக்கமுடியும். தமிழ்மக்களுக்கு நேரடியான நியாயமின்மை (பாகுபாடு) இருந்ததென்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. சிறுபான்மையினரைச் சந்தோசப்படுத்துவதற்காக அவர்களின் வாக்குகளைப் பெறும் ஆசையில் கொடுக்கப்பட்டிருக்கும் சில நன்மைகளை நோக்கும் போது பெரியளவிலான அநீதி சிங்களவர்களுக்கே ஏற்பட்டிருக்கிறது என்பது விளக்கமாகத் தெரிகின்றது.

எனினும் எங்களுடைய மனப்பாங்குகளிற் சில அபிவிருத்திக்கான மாற்றம் ஏற்படவேண்டும் எனத்தெரிகிறது. நாம் மேலும் தமிழ் மக்களைச் சிறுபான்மை இனமாகக் கருதக்கூடாது. அவர்களை இந் நாட்டில் வசிக்கும் எங்களுடன் சமமான உரிமைகள் உள்ள மக்கள் பிரிவினராக நாம் ஏற்றுக்கொள்வது முக்கியமானதாகும். இப்படியான கருத்தளவான (வேறுபாடு) மாற்றம் சுதந்திரத்தின் பின் அவ்வளவு தூரம் சாதகமாகச் செயல்பட்டிருக்கவில்லை. சுதந்திரக்கல்வி அமைப்பு எங்களுக்கும் அவர்களுக்கும் நன்மையாக இருந்தது. சுதந்திரக்கல்விக் கொள்கையின் கீழ் இன்று இந்நாட்டுத் தமிழ் மக்களுடைய கல்வியும், சமூகத்துறைகளும் மூன்னேறியிருக்கும் விதமும், நன்கு தெரிகின்றது.

பொது நூலகம் யாழ்ப்பாணம்.

வடபகுதியில் நிகழும் போரை விடுதலைப்போர் போல மாற்றிக்காட்டப்பலர் முயற்சி செய்கின்றனர். ஆனால் அங்கு நடப்பது விடுதலைப்போர் இல்லை என்பது நன்கு விளங்கும். அண்மைக்கால வரலாற்றில் பலசந்தர்ப்பங்களில் சமாதானத்தைப் பேச்சுவார்த்தைகள் மூலம் உண்டாக்கக் கூடியதாக இருந்தும் விடுதலைப்புலிகள் இயக்கத்தால் அது தடைப்பட்டது அப்பாவிக் குடிமக்கள் வசிக்கும் கிராமங்களிற் புகுந்து, அவர்களை மிலேச்சத்தனமாகக் கொலை செய்துபோட்டு, குடிமக்களது உயிரைப் பணயம்வைத்து, எதிர்க்கருத்துக்களைப் பொறுக்காது, துவக்கு ஒன்றையே தீர்வாகக் கொண்டுள்ள அமைப்பினர் விடுதலை வீரராவது எப்படி? விடுதலை வீரர்கள் அப்பாவி மக்

களைக் கொல்லுவதில்லை. உலகில் அநேக விடுதலைப்போர்கள் நிகழ்ந்துள்ளன. ஏதாவது மரியாதைப் பண்பு கொரில்லாப் போரினுள் அடிப்படையாக இருக்கும். ஆனால் விடுதலைப்புலி கள் இயக்கத்தினுள் இப்படியான ஏதாவது மரியாதைப் பண் பின் அடிப்படையைக் காணமுடியாது. புத்ததர்மத்தின் அடிப் படையில் சமாதானத்துக்காக வடக்குக்குச் சென்ற பிக்குகள் கூடக் கொல்லப்பட்டனர்.

வடக்கில் நிலை கொடூரமாவதற்கு எங்கள் அரசியல் நிரு வாகிகளும் போதியளவு உதவியுள்ளனர். இதுவரை எல்லா நிரு வாகிகளும் சந்தர்ப்பவாதிகளாகவே செயற்பட்டனர். கடந்த காலப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா 1956 இல் தமிழ்மாகளுக்கு நியாயமான உரிமைகளைக் கொடுக்க நடவடிக்கை எடுத்தபோது ஜே. ஆர். ஜெயவர்த்தனா அதற்கு எதிராக இருந்தார். ஜே. ஆர். ஜெயவர்த்தனா அதிகாரத்துக்கு வந்தபின் முன்னர் எதிராக இருந்த விடயத்துக்குச் சார்பாக மாகாணசபை முறையை இந்நாட்டில் அமைத்தார். இது பண் டாரநாயக்கா அவர்கள் உண்டாக்க எண்ணிய உள்ளூராட்சிச் சபையை ஒத்தது. ஐ. தே. கட்சி அதிகாரத்திலிருந்த வேளையில் உண்டாக்க விரும்பிய ஏதாவது தீர்வு இருப்பின் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அதை எதிர்த்தது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி உண்டாக்க முயன்ற ஏதாவது தீர்வுக்கு ஐ. தே. கட்சி எதிர்த் தது. இறுதியில் மிகக் கொடூரமான பயங்கரவாதம் மூலம் தீர்வு கோரும் நிலை ஏற்பட்டது.

1977 இன் பின் ஜெயவர்த்தனா நிருவாகத்தின் கீழ் தமிழ் மக்களுக்குப்பெரும் நன்மைகள் கிடைத்ததுடன் இலட்சக்கணக் கான தமிழ்மக்கள் குடியுரிமையும் பெற்றனர். ஆனாலும் இவை ஒன்றாலும் தமிழ் தலைவர்கள் திருப்தியடைந்ததாகத் தெரிய வில்லை.

எங்களுக்குக் கிட்டிய வலயத்தில் இருந்த பலம் வாய்ந்த நாடான இந்தியா வடக்குக் கிழக்குப் பிரச்சினையுடன் தொடர் புடைய நாடாகும். எண்பதுகளின ஆரம்பத்தில் இந்நாட்டுப் பிரி வினைவாதிகளுக்கு உதவிய முக்கியமான நாடு இந்தியாவேயாகும். எம்நாட்டு நிருவாகிகள் இந்தியாவுடன் கடும் போக்கில் நடந்து கொண்டதே இந்நிலை தோன்றக்காரணம். எங்கள் தலைவர்கள் சிலரின் சந்தர்ப்பவாத கூற்றுக்களினாலேயே இந்தியாவுடன் சேர்ந்து சுமூகமாகத் தீர்க்கக் கூடிய பல சந்தர்ப்பங்கள் வழி மாறிப்போயின.

சனாதிபதி பிரேமதாச இந்தியாவுடன் கடுமையான எதிர்புக் கொள்கையைப் பின்பற்றினார். 1987 ஆம் ஆண்டுகளில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் இந்தியாவின் மத்தியஸ்த்தத்துக்கு (பிர பலமான கடும்) எதிர்ப்பாயின. 1987 இல் இந்திய — இலங்கை ஒப்பந்தப்படி இலங்கை வந்த இந்தியப்படையைத் திருப்பி அனுப் புவதற்காக பிரேமதாஸ அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத் திற்கு போர் ஆயுதங்கள், பணம், வாகனங்கள் முதலியவற்றை உதவியதாகச் சிலர் கூறுகின்றனர். இக்கூற்றினை ஏற்பின் நாட் டைப் பிரிக்க முயலுகின்றவர்களுக்குப் போராயுதம் முதலிய வற்றைக் கொடுத்து திரும்பவும் மோதும் நிலையை உண்டாக் கியுள்ளார் என ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்நாட்டு இராணுவ வீரர்களுக்கு மரணத்தை உண்டாக்கும் போராயுதங்களை விடு தலைப்புலிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக மாதக்கணக்காக அவர்களுடன் பேச்சுவார்த்தை செய்த பிரேமதாஸ அரசாங்கத் தின் மேல் குற்றம் சுமத்தச் சற்றும் பின்னிற்கமுடியாது.

இன்று வடக்கில் வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் கூட விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் விருப்பமின்றியுள்ளனர். விடு தலைப்புலிகளை எதிர்ப்பின் தமக்கு ஏற்படக்கூடிய நிலையின்மை பற்றி அவர்கள் யோசிக்கின்றனர். தமிழ் ஈழத்துக்கு விருப்ப மில்லையெனில் தெற்கிலுள்ள தமிழ்மக்கள் மத்தியில் அதுபற்றிய குரல் எழுப்பவேண்டும். எனினும் இன்றுகூட அப்படியான குரல் எழுப்பவில்லை. இதிலிருந்து அவர்கள் ஈழத்துக்கு ஆதரவானவர் கள் அல்லது சார்பானவர்கள் என்பது தெரிகிறது. விடுதலைப் புலிகளின் நிர்வாகம் காரணமாகத்துன்பப்படும் புத்திசாலிகளான சாதாரண பொது மக்களிடம் நாம் ஈழத்துக்கு மாறானவர்கள் என்னும் குரல் எழாத நிலையில் விருப்பமின்றியெனினும் போரில் சேருவதற்கு (தென்னக மக்களுக்கு) நேர்ந்திருக்கின்றது.

பயங்கரவாதத்துக்கு மறுமொழி கொடுப்பதற்காக அரசு இராணுவ ரீதியான நடவடிக்கையைத் தெரிந்தெடுத்துள்ளது. எனினும் இதில் சாதாரண மக்கள் யார் என்று அடையாளம் காணக்கூடிய வசதிகள் மிகவும் குறைவு. இதனால் துன்பப்படும் தமிழ்மக்களை விடுவிக்க அரசிற்குக்கிடைக்கும் வசதி எல்லைப் பட்டது. வடக்குக்கிழக்கு பிரதேச எல்லையில் வசிக்கும் சிங்கள மக்கள் கூட பெரும் துன்பத்துக்குள்ளாகியிருக்கின்றனர். அவர்கள் அந்த இடங்களின் எல்லைகளை விட்டுச் சென்றால் ஈழம் உடனே யே பிறந்துவிடும். இதனால் அவர்களைப் பர்துகாக்கத் தென்னி லங்கை மக்கள் பொருத்தமான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

## பேச்சுவார்த்தை

ஆயுதச் செயற்பாட்டு வழிகளின் பின் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரம் கிடைக்கும் விதத்திற் பன்முகப்

பட்ட நிர்வாகத்தை உண்டாக்குவதே இப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வாகம். சமஷ்டி முறையைப்பற்றிப் பல்வேறு பேச்சுவார்த்தைகள் செய்யப்பட்டிருந்ததும் அது எங்கள் நாட்டுக்கு அவ்வளவு பொருத்தமற்றது எனப்பலர் ஏற்றுக்கொள்கின்றனர். ஐக்கிய அமெரிக்க குடியரசில் செயற்படுகின்ற சமஷ்டிமுறை எங்களுக்குச் சற்றும் பொருந்தாது. நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்கும் போது, நாட்டின் ஒற்றுமைத்தன்மையையும், அரசாங்கத்துக்கு உரிமையாக இருக்கவேண்டிய அதிகாரங்கள்பற்றியும் விளக்கமான தீர்மானம் உண்டாக்குதல் அவசியம். நிருவாகத்தைப் பன்முகப் படுத்தும்போது அதிகசெலவு ஏற்படின் அது எங்கள் நாட்டிற்குப் பொருந்தாது. இன்றுள்ள மாகாணசபை, பிரதேசசபை, பாராளுமன்றம் ஆகியன எல்லாவற்றிலும் இருக்கின்ற பிரதிநிதிகளை நோக்கின் அவற்றை நடாத்த அதிக செலவு ஏற்படுவது தெரியும். இது எங்கள் நாடு தாங்க முடியாத பாரமாகும். எவ்வளவு அமைச்சர்கள் தொகை இந்நாட்டில் உள்ளனர். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சுகள், செயலாளர், வாகனங்கள், அலுவலகங்கள் முதலியவற்றின்படி அதிகாரத்தை மேலும் பன்முகப்படுத்தின் மேலும் பாரமாகும். இச்செலவுகள் நாட்டின் பொருளாதாரத்துடன் சேரின், வீணான வேலைத்திட்டங்கள் மூலமான செலவு எனத்தெரியும். எனவே நாட்டின் அந்தந்த மாகாணங்களில் உள்ள வளங்களைப் பயன்படுத்திப் பிரதேச அபிவிருத்தியைச் செய்யும் நிலை மக்களுக்குக் கிடைக்கும் வண்ணம் அதிகார அமைப்பை மாற்றுதல் அவசியம் என்பதை நிராகரிக்கமுடியாது.

பிக்குகள் போருக்கு மத்தியஸ்தம் செய்தல் புத்ததர்மத்துக்கு ஏற்ற ஒன்றல்ல. போர் அல்லது மோதல் ஏற்படின் அதை நிறுத்துவது எப்படி என்னும் விடயத்தில் கவனம் செலுத்துவதைப் புத்ததர்மம் ஏற்றுக்கொள்கின்றது. போரின் முடிவில் யார் வென்றாலும் அவர்கள் எல்லோரும் பெற்றது தோல்வியையேயன்றி வெற்றியையல்ல என்பது தெளிவாகத் தெரியும். பெற்ற வெற்றியைவிட இழந்த பொருட்கள் மிக அதிகமாகும். புத்ததர்மத்துக்குச் சாதகமாக உள்ள புத்த புத்திரர்களாகிய எங்களால் கொடுக்கக் கூடிய செய்தி ஆயுதத்தை நிலத்திற்போட்டுப் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்பதாகும். எங்கள் நாட்டில் யுத்தத்தால் மிகப்பெரும் எண்ணிக்கையினர் நிதமும் இறந்துபோகும் தறுவாயில், வேறு சிலர் கேளிக்கை விளையாட்டுக்களை நடாத்துதல் வெட்கத்துக்குரியதாகும். போரினால் ஒரு பிரிவினர் இறந்து போகும் போது வேறு பிரிவினர் மகிழ்ச்சியடைதல் மேலும் கவலையை உண்டாக்குவதாகும். இலங்கை மக்களாக வாழ்வதை விட்டுப் பிரிந்து வாழ்வதற்கு முற்படுதலை எங்களால் சற்றும் ஏற்றுக கொள்ளமுடியாது.

# கூடுதலான படைவீரர்களைக் கொண்டிருப்பது ஒரு சிறந்த இராணுவக் கட்டமைப்பாகாது

—வருண கருணதிலக

''கவுன்ரர் பொயின்ற்''

**வெலி ஓயாவில் ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர், போரைவென்றெடுப்பதற்கு தேவையானவை யாவை? என இராணுவக் கட்டமைப்பை வினவியதன் மூலம், பத்துக் காலாட்படைப் பிரிவுகளை உருவாக்குவதற்குத் தேவைப் படும் மேலதிக எண்ணிக்கையிலான எண்ணாயிரம் துருப் புக்களுக்கான செலவீனங்களை அரசாங்கம் ஏற்க வேண் டியதாகவுள்ளது.**



இராணுவத்தில் சேர வந்துள்ள இளைஞர்கள்

*மிகவும் முக்கியம் வாய்ந்த இத் தளம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டபின்னர், ஜனாதிபதி டி. பி விஜயதுங்க அவர்களின் தலைமையில் உடனடியாகக் கூடிய கூட்டு நடவடிக்கைக்குழு, இராணுவத் தளபதிகள்மீதே குற்றஞ் சுமத்தியுள்ளது. கூட்டு நடவடிக்கைக்குழுவே வடக்கு மற்றும் கிழக்குக்குப் பொறுப்பாயிருந்தது எனச் சுட்டிக்காட்டியதுடன், இந்த ஆண்டில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரழிவுக்கும் கூட்டு நடவடிக்கைத் தலைமைப்பீடமே பொறுப்பென இராணுவத் தளபதி திடீரெனக் கூறியதும் ஜெனரல் வைத்தியரத்தின அவர்களுக்கிடையிலும்கூட்டுநடவடிக்கைத் தலைமைப்பீடத்தின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க அவர்களுக்*

கிடையிலும் நிலவிய சுமூகமானஉறவுகள் முறிந்துபோயின. இந்த வாய்ச்சண்டை முடிவுற்றதும், ஒழுங்கை நிலை செய்து இராணு வத் தளபதிகளை தங்கள் இருப்பிடங்களில் அமரச்செய்வதற்கு கடும் வார்த்தைகளைப் பிரயோகித்த பிரதம மந்திரி ரணில் விக்கிரசிங்க அவர்கள், இராணுவத்தில் நிலவும் குழப்பநிலைக்கும் அவர்களே காரணமென அவர்கள் மீது குற்றம் சுமத்தியதுடன், இராணுவம் தனது கடமையை செவ்வனே செய்வதற்கு தேவைப் படுவது என்னவென்பதைக் கூறும்படி வலியுறுத்தினார். இராணுவ வலுவை அதிகரிப்பதற்காக படைவீரர்களின் எண்ணிக்கை 1,05,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டும். இராணுவத் தளபதி யும் கூட்டு நடவடிக்கைக்குழுவின் தளபதியும் கோரிய 8,000 பேரை படையில் உடனடியாகச் சேர்த்துக் கொள்வதற்கான நிதியை வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார் மூன்று மாதப் பயிற்சிக்குப் பின்னர் இந்தப் படையினர் கைப் பற்றப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவ தற்கு கிழக்குப் பிரதேசத்திற்கு அனுப்பப்படுவர் என்பதுடன், போரில் நல்ல அனுபவத்தைப் பெற்றிருக்கும் படை அணிகள் தாக்குதல் நடவடிக்கையிலீடுபடுவதற்காக விடுவிக்கப்படுவர். குறைந்தளவில் கூறுவதாயின் இதுவே அதன் கொள்கையாகும். உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துவதற்காக அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் கிழக்குப் பிரதேசம் விடு விக்கப்படல் வேண்டும் என்ற அரசியல்வாதிகளின் விருப்பத்திற்கு அமைய அந்தப் பிரதேசத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட் டும் ஆற்றலை இராணுவம் கொண்டுள்ளதா என்பதைப் பொறுத் திருந்துதான் பார்க்கவேண்டும். தங்கள் பதவிக்காலம் நீடிக்கப் படுவதை உறுதி செய்து கொள்வதற்கு அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நிலைக்கு மூத்த தளபதிகள் ஆளாக்கப்பட்டுள்ளனர். இராணுவ ரீதியில் இதை நிறைவேற்றி வைக்க முடியுமா? எனச் சிந்திப்பது இரண்டாவது நிலையாக மாறியுள்ளது.

1983-ஆம் ஆண்டுக்குப் பின்னர் 17,000 பேர் படையிலி ருந்து தப்பி ஓடியதனாலும், அதிகாரிகள் தரத்தில் 700 பேர் குறைவாக உள்ளமையினாலும், இராணுவத்தில் தோன்றியுள்ள அடிப்படைப் பிரச்சினையைப் புதியவர்களைச் சேர்த்துக் கொள் வதினால் நிவர்த்தி செய்ய இயலாது. சிறப்பு வைபவங்களுக் குப் பயன்படுத்துவதற்கென 1983-ஆம் ஆண்டில் 12,500 பேரை மாத்திரம் கொண்டிருந்த இராணுவம், யுத்த தாங்கிகள், கவச வாகனங்கள், பாரிய நவீன ஆயுதங்கள் ஆகியவற்றையும் போரில் நல்ல தேர்ச்சியடைந்த 80,000 வீரர்களைக் கொண்ட இரா

னுவ அமைப்பாக தறபோது விளங்குகிறது. அத்துடன் பீரங்கி பூட்டப்பட்ட உலங்குவானூர்திகள், குண்டு வீசுவதற்காகப் பயன் படுத்தப்படும் புக்காரா, மற்றும் சியாமா செற்றி குண்டு வீச்சு வானூர்திகள், இடைமறித்துத் தாக்குவதற்கு விரைவாகச் செல் லும் எவ் - 07 ரக ஜெற் வானூர்திகள் ஆகியவற்றின் உதவியை யும் இராணுவம் பெற்றுள்ளது. மேலதிகப் படையினரைச் சேர்த் துக் கொள்வதற்காகவும், நவீன ஆயுதங்களைப் பெற்றுக் கொள் ளவும் மில்லியன் கணக்கிலான டொலர்கள் செலவு செய்யப் பட்ட போதிலும், இராணுவத்தின் தலைமைத்துவம் அழிவை ஏற்படுத்தும் வலியற்ற நிலையில் இருக்கிறது. குறுகிய காலத்தில் தங்கள் போராளிகளை ஒன்று சேர்த்து தங்களைச் சக்திவாய்ந்த வர்களாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்கள் எனத் தற்போது வரலாறு காட்டி வரும் விடுதலைப் புலிகளைப் பல வீனமாக்க வேண்டும் என்ற இராணுவத்தின் நம்பிக்கையை, ஜெனரல் டென்சில் கொபேகடுவ, மற்றும் ஜெனரல் விஜய விமல ரத்தின ஆகியோரின் இழப்புச் சிதறடித்துள்ளது போலத் தோன்று கின்றது. மேலதிகமானவர்களைத் தங்களுடன் இணைத்துப் பயிற்சியளித்து போராளிகளாக ஆக்கும் வசதிகளை விடுதலைப் புலிகள் பெறாதிருக்கும் வகையில் இந்த இரு தளபதிகளும் அதி முக்கியம் வாய்ந்த வடக்குப் பிராந்தியத்தில் தங்களுக்கிருந்த வளங்களுடன் பல வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கைகளை நடத்தியுள்ளனர். போர்க் கருவிகளோ அல்லது போதுமான இராணுவமோ இல்லையெனக் காரணம் காட்டி எந்தவொரு நட வடிக்கையும் பின்போடப்பட்டது கிடையாது. விடுதலைப் புலி களின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தின் மையமாக விளங்கும் யாழ்ப்பாண நகருக்குள் 1992 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் உட்புகுவதற்கு ஆயத்தமாகவிருந்த இராணுவம், போரைக் கொண்டு நடாத்துவதற்கு வேண்டிய துருப்புக்களைத் தாங்கள் கொண்டிருக்கவில்லையென ஒரு ஆண்டுக்குப் பின்னர் கூறுவது நகைப்புக்கு இடமானதாகும். இந்த இரு தளபதிகளும் தங்கள் அதிகாரிகளுடனும், சாதாரண படை வீரர்களுடனும் போர் முனையில் முன்னின்று கட்டளையிட்டு அவர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்று உற்சாகமூட்டி அவர்களின் முழு ஈடுபாட்டை யும், நன்மதிப்பையும் பெற்றனர். அதேபோன்று இப்போதைய தலைமைப் பீடம் இருக்கவில்லை.

இரர்ணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் எல்லைகளின் முன்னணியில் நிலை கொண்டிருக்கும் படையினரதும், அதிகாரி களினதும் மனோதிடம் வெகுவாகக் குறைந்துள்ளதால், வடக் கிலும் கிழக்கிலுமுள்ள இராணுவத்தளபாடங்களுக்குக் கண்ணுக் கெட்டிய தூரத்திலுள்ள பிரதேசங்களைக் தங்கள் கட்டுப்பாட்

டின்கீழ் கொண்டு வருவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட இரா ணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடப் படையினர் தயங் குகின்றனர். ஒரு ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலொன்றை இராணுவம் மேற்கொள்ளவிருக்கும் வேளையில் விடுதலைப் புலிகள் கூடுதலான போராளிகளுக்குப் பயிற்சியளித்தும், இராணுவ பாதுகாப்பு நிலையங்கள்மீது வெற்றி கரமான தாக்குதல்களை மேற்கொண்டும், இராணுவத்துக்குப் பல இழப்புக்களை ஏற்படுத்தியும், பெரும் தொகையான ஆயு தங்களையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றித் தங்கள் ஆயுத தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றார்கள். கடுமையான சூழ் நிலையில் பாதுகாப்பரண்களில் சலிப்பூட்டும் கடமைகளில் படை யினர் ஈடுபட்டு வருவதுடன், இராணுவத்திலிருந்து தப்பியோடு வதும் ஒரு பெரிய பிரச்சினையாகி தொடர்ந்து வருகின்றது. தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது படை யினரின் மனோதிடம் வெகுவாக அதிகரிக்குமென்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஜெனரல் வனசிங்க அவர்களுக்கும் ஜெனரல் வைத்தியரத்தினவுக்குமிடையில் நிலவும் பகமையுணர்ச் சியால் ஒரு கட்சி இரண்டு அணிகளாகப் பிளவுபட்டு இருக்கும் இராணுவத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தேகமான செயற் பாடுகளும், சலுகைகளும் அதிகாரிகளின் உத்தியோக உயர்வு களை தாமதப்படுத்தி வருவதும் போர்முனையிலுள்ள பல மூத்த இராணுவ அதிகாரிகள் ஓய்வுகோரி விண்ணப்பம் செய்வதற்கு காரணமாக அமைந்துள்ளது. இப்படியான கோரிக்கைகளை இராணுவத் தலைமைப்பீடம் மறுத்துள்ளதாலும் விருப்பமற்ற அவர்களைச் சேவையிலிருக்கும்படி வற்புறுத்துவதாலும் மேலும் மனோதிடம் குறையவே செய்யும்.

முடிவில்லாத தோல்விகளும், ஆண்டு தோறும் அதிகரித்து வரும் இழப்புகளும், விடுதலைப் புலிகளுக்கெதிராக உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ளாதிருப்பதும் இராணுவத்தின் மதிப் பைப் பொது மக்களிடையே வெகுவாகக் குறைத்துள்ளது. படை யில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் தகமை குறைவாக உள்ளதென மேலும் அதன் தரத்தைக் குறைத்துள்ள தென இராணுவம் ஏற்கனவே முறையீடு செய்துள்ளது.

இராணுவத்தில் நேரடியாகச் சேர்த்துக் கொள்வதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின்போது சமூகமளித்தவர்களின் குறைவான எண்ணிக்கை இராணுவத்துக்கு மட்டுமன்றி போர்க் குணமுள்ள பொது மக்களின் ஆதரவு அதிர்ச்சியூட்டும் வகையில் வெகுவாகக் குறைந்துள்ளது என்பதையே நிருபிப்பதாகவுள்ளது. படையினரைச் சேர்த்துக் கொள்வதற்காக ஒருவார காலமாக

நடைபெற்ற முயற்சியின்போது 13, 000 இளைஞர்கள் மாத்திரமே தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளார்கள் என அரசாங்கசார்பான செய்தித் தாள்களில் இராணுவத் தளபதி கூறியிருப்பதைப் பார்க்கும்போது இரண்டாங் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் இராணுவதுக்கு ஆட்சேர்ப்பு நடத்தப்படும் நிலையங்களில் பத்தாயிரக்கணக்கான இளைஞர்கள் திரண்டு நின்றனர் என்பது ஒரு பழைய நிகழ்ச்சி போலத் தோன்றுகிறது. இளைஞர் மத்தியில் நிலவும் பெருமளவிலான வேலையில்லாத் தன்மை, படைவீரரின் துடுப்பான தோற்றம், படை வீரர்களுக்கு வழங்கப்படும் கவர்ச்சியான ஊதியம் ஆகியவை இராணுவத்திற்குத் தரமான இளைஞர்களை ஈர்ப்பதாக விளங்கவில்லையென்பதுடன், இராணுவத்தில் இணையும் இளைஞர்களும் தங்கள் சாவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழியெனக் இதைக் கருதுகின்றார்கள்.

இந்தப் போரை நடாத்துவதற்கு வேண்டிய தந்திரோபாயத்தை வகுக்க முடியாத இராணுவம் மகிழ்ச்சியான கதைகளைக் கூறி அரசாங்கத்தை ஏமாற்றி வருகின்றது. கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன எனவும், எஞ்சிய பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளை சில வாரங்களுக்குள் வெளியேற்ற முடியுமெனவும் இராணுவக் கட்டமைப்பு உறுதியளித்தமையே ஜனாதிபதி விஜயதுங்க அவர்கள் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கான அறிவித்தலை வெளியிட்டதற்கான காரணமாகும். கிழக்குப் பிராந்தியத்திலிருந்து புரட்சியாளர்கள் வெளியேறுவதையும் உட் புகுவதையும் மறைந்திருந்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படையினர் தாங்கள் நேரடியாகக் கண்டுள்ளார்கள் என அறிக்கை சமர்ப்பித்திருந்த போதிலும் இந்த உறுதிமொழியை இராணுவம் வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளால் படுமோசமாகத் தாக்கப்பட்டு, இராணுவம் தோல்விகளைச் சந்தித்து வரும் வேளையில் கூட்டு நடவடிக்கை தலைமையகத்தின் தளபதி வனசிங்க அவர்களுக்கும் வான் படைத் தளபதிக்கும்மேலும் ஒரு ஆண்டு கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டது ஒரு நகைப்புக் கிடமானதாகும். இரண்டு வாரங்களுக்குப் பின் கூட்டுநடவடிக்கைத் தலைமையகம் கலைக்கப்பட்டு ஜெனரல் வனசிங்க அவர்கள் பாதுகாப்புச்செயலாளராக நியமிக்கப்பட்டதுடன் போரை நடாத்துவதற்கான முழுப்பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. கடற்படைத் தளபதியைத் தவிர்ந்த ஏனைய படைத் தளபதிகள் யாவரும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டவர்களாகும். சேவை நீடிப்புப் பெறுவதற்காக அவர்

கள் என்ன சாதனை புரிந்துள்ளார்கள் என்பது ஒரு புதிராகும். ஜனாதிபதி விஜயதுங்க அவர்களுக்கே அது தெரியக் கூடும். இவர்கள் விடுதலைப்புலிகளுக் கெதிராக தாக்குதலை மேற் கொள்வதற்கான தந்திரோபாயங்களை உருவாக்கக் கூடிய ஆற்றலையோ அல்லது நோக்கங்களையோ கொண்டிருக்கவில்லை என்பதையும் தங்களுக்குக் கீழ் கடமையாற்றும் அதிகாரிகளினதும், படையினரதும் நன்நம்பிக்கையைப் பெறவும் அவர்கள் தவறிவிட்டார்கள் என்பதையும் இராணுவக் கட்டமைப்புத் திரும்பத் திரும்ப வெளிக்காட்டியுள்ளது.

கடந்த 12 மாதங்களில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பல பின்னடைவுகளுக்குப் பொறுப்பு இராணுவத் தலைமைப்பீடத்தையே சார்ந்தது எனக் கூறி அவர்களிடம் அதை ஒப்படைக்கவும் இராணுவத்திற்கு நல்ல ஒரு அரசியல் தலைமைத்துவத்தை கொடுக்கவும் அரசாங்கம் தவறியமை இந்த விடயத்தை மேலும் சிக்கலடையச் செய்துள்ளது. ஒரு மாத கால எல்லைக்குள் 120மில்லியன் ரூபாவுக்கு மேலான பெறுமதிவாய்ந்த இராணுவச் சாதனங்களை விடுதலைப் புலிகள் இராணுவத்திடமிருந்து கைப்பற்றியுள்ளனர் என வெளிவந்த செய்தி இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பைக் காட்டுவதாக உள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறுபவை, தீவிரவாதக் குழுவொன்றினால் கட்டவிழ்த்து விடப்பட்ட சிறு கலகங்கள் என ஜனாதிபதி விஜயதுங்க அவர்கள் எளிமையான முறையில் வெளியிட்ட அறிக்கைகளும் மந்திரிசபை மட்டத்திலான ஒரு முழு நேரப் பாதுகாப்பு மந்திரி தேவையாக இருக்கும் போது இராஜாங்க அமைச்சர் ஒருவரைக் கூட நியமிக்க அவர் மறுத்துள்ளதும் இந்த நெருக்கடியைக் கையாள்வதற்கான ஒரு சிறு தடயத்தைக் கூட அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்பதைத் தெளிவாக வெளிக்காட்டுவதாக உள்ளது. போர் நடாத்தப்படும் முறையை நோக்கும் போதும், அரசாங்கமோ, இராணுவமோ அல்லது இரண்டுமே திறமையற்றதாக இருப்பதாலும் அதிக எண்ணிக்கையிலான படையினரைத் திரட்டுவது போர் நிலையில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

தங்கள் திறமைகளை முன்னணி நிலைகளில் நிலைநாட்டியுள்ள இளம் அதிகாரிகள் இராணுவத்திலுள்ள போர்ப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கி வழி நடாத்த நியமிக்கப்படுவதுடன், அவர்களுக்கான பணிப்புரைகளும் தெளிவாக வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தி அரசாங்கம் இராணுவத் தலைமைப்பீடத்திற்கு அழுத்தும் அது வரை இப்போரை நிறுத்த முடியாது. அதை விடுத்து தொடர்ந்து போரில் ஈடுபடுவதால் விடுதலைப் புலிகள் வலிமை பெற்று எமது இராணுவத்தினரை கொன்

றொழிப்பதுடன், ஆயுதங்களையும் கைப்பற்றுகின்றனர். இதனால் கொன்றொழிந்த இராணுவத்தினரின் இடத்திற்கு புதிய இராணுவத்தைச் சேர்த்துக்கொள்ளவும் கண்ணைக் கவரும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கூடுதலான நிதியைப் பெறவுமே இது வழிவகுக்கும்.

நன்மையளிக்காதவிடயத்திற்கு பணத்தை விரயம் செய்வதால் இராணுவமோ அரசாங்கமோ நன்மையை அடையப் போவதில்லை. தங்கள் கொள்கைக்காக தங்களை முழுதாக அர்ப்பணித்து, ஈவிரக்கம் காட்டாது போர் புரியும் உலகப்புகழ் பெற்ற கெரில்லா அமைப்பான இவர்களுடன் போரிடக்கூடிய வகையில், குறிக்கோளற்றதும், திறமையற்றதும், நன்கு பயிற்றப்படாததுமான முழு இராணுவ அமைப்பும் மேல்மட்டத்திலிருந்து அடியோடு மாற்றியமைக்கப்பட்டு, நன்கு பயிற்சியளிக்கப்பட்டு, திறமையுடன் வழிநடத்தக்கூடிய தகுதிவாய்ந்த தலைமையையும், கட்டுப்பாட்டையும் கொண்ட இராணுவ அமைப்பாக ஆக்கப்பட வேண்டியதே தற்போது தேவையானதாகும்.

வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட பல மில்லியன் ரூபா பணத்தை எவ் 07 ரக சுப்பர் சோனிக் வானூர்திகள் போன்ற கண்ணைக்கவரும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும், கொழும்பிலேயே நிரந்தரமாக விருக்கும் மூத்த அதிகாரிகளின் ஆடம்பரங்களுக்கும் செலவு செய்வதிலும்பார்க்கப் போர்முனையில் கடமையாற்றும் படையினருக்கான பயிற்சியையும், வசதிகளையும் வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தப்படுவது இராணுவத்திற்குக் கூடுதலான பயனைக் கொடுக்கும், இந்தப் போர் காலாட் படையினரால் நடாத்தப்படுவதால், அனைத்தும் அவர்களின் மன உறுதியிலும் அவர்களை வழி நடத்தும் மேலதிகாரிகளின் திறமையிலுமே தங்கியுள்ளது. மோசமான வதந்திகள் பரவுவது மட்டுமல்லாது அவை இராணுவத்தின் ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் பரவிவிட்டது என்பதை அரசாங்கமும் இராணுவத் தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டிய கடைசிக் காலம் வந்துவிட்டது. மேல் மட்டத்தில் மட்டுமல்லாது, இராணுவத்தின் எல்லா மட்டத்திலும் குழுக்கள் குழுக்களாக ஒருவரையொருவர் விஞ்சும் முயற்சியில் முழுநேரமும் தங்களை ஈடுபடுத்தியுள்ள பல தனிப்பட்ட நபர்களால் ஏற்படுத்தப்பட்டு வரும் உட்பூசலை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலொழிய தங்கள் நிலையைப் பலப்படுத்த ஒரு போதும் இராணுவத்தால் இயலாது. ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதேனும் விரைவாக மேற்கொள்ளப்பட்டாலே தவிர, கொழும்பிலுள்ள மூத்த இராணுவ அதிகாரிகளின் மோட்டார் வாகனங்கள் கல் எறிக்கு இலக்காகும் என இராணுவத் தளபதிக்கு மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் அண்மையில் சுட்டிக்காட்டியுள்ளார். இந் நிலைமை மக்கள் எதிர் பார்ப்பதிலும் பார்க்க விரைவாகவும், உண்மையாகவும் வந்தே தீரும்.

# மேதினத்தின் பின்னணி

(வெரித்நாஸ் வானொலி — 26. 4. 94)

**அமெரிக்காவில் தான் மேதினம் முதன் முதலாகக் கொண்டாடப்பட்டது இந்தச்செய்தி நம்மில் பலருக்கு ஆச்சரியத்தை அளிக்கும். உலகின் முதல் தொழிற் சங்கமே அமெரிக்காவில்தான் தோன்றியது. அதன் பெயர் "பிலெடல்சியா மெக்கானிக்" தொழிற்சங்கம் என்பதாகும்.**

*அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இருந்த பல தொழிற் சங்கங்கள் ஒன்றாக 1884 ஆம் ஆண்டு தங்களுக்குள் ஒரு கட்டமைப்பை அமைத்துக்கொண்டன. அந்தக் கட்டமைப்பு 10 மணி நேர வேலையென்பதை மாற்றி நாளொன்றுக்கு 08 மணி நேர வேலையென்று செயல்படுத்த வேண்டுமென 1886 ஆம் ஆண்டு மே முதல் நாளிலிருந்து செயலாக்கப் பாடுபடுவோமென்ற குறிக்கோளுடன் செயற்பட்டது. இந்தக் கட்டமைப்பே பின்னர் அமெரிக்கத் தொழிலாளர் கட்டமைப்பென்று அழைக்கப்பட்டது. அதே சமயத்தில் சிக்காக்கோ நகரத்தில் செயற்பட்ட தொழிலாளர் காவலனென்ற இயக்கம் 1885- ஆம் ஆண்டில் ஒரு தொழிலாளர் பேரவையைக் கூட்டியது. அந்தப் பேரவையில் 1886 ஆம் ஆண்டு மே முதலாம் நாள் அன்று தொழிலாளர்களின் கோரிக்கையை வலியுறுத்தி, ஒரு வேலை நிறுத்தம் செய்வதாக முடிவெடுக்கப்பட்டது. அப்பேரவையின் முடிவுப்படி 1886 ஆம் ஆண்டு மே முதல் நாள் அமெரிக்கா முழுவதும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.*

*சான்பிரான்சிஸ்கோ, சிக்காக்கோ, வாஷிங்டன், டெற்ரா, சிப்பற் போன்ற நகரங்களில் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்தவேலை நிறுத்தத்திற்கு முக்கிய அரங்கமாக அமைந்தது சிக்காக்கோ நகரந்தான். அந் நகரிலுள்ள "கேமார் கட்" சதுக்கத்தில் 05 இலட்சம் தொழிலாளர்கள் கூடினார்கள். அங்கு அப்பொழுது வீசப்பட்ட வெடிகுண்டு விபத்தினால் 05 தொழிலாளர்களும், 07 காவல்துறையினரும் இறந்தனர். கேமார் கட்டில் இரத்த ஆறு ஓடியது. அப்போது அங்கே இருந்த தொழிலாளிகள் பிடித்திருந்த கொடிகள் செங்குருதியால் நனைக்கப்பட்டு அவை சிகப்பு நிறத்தில் காட்சியளித்தன. அந்த இரத்தச் சிகப்புக் கொடியே இன்றுவரை உலகத்தொழிலாளர்களின் கொடி*

யாக இருந்து வருகிறது. இப்பொழுது உலகெங்கிலுமுள்ள பல நாடுகள் மே தினத்தை விடுமுறை நாளாக அறிவித்துள்ளன. ஆனால் ஆரம்ப காலத்தில் இருந்து பிரிட்டனும் மேற்கு ஜேர் மனியும் மே தினத்தை விடுமுறை நாளாக அறிவிக்க மறுத்து விட் டன. 1977 ஆம் ஆண்டிலிருந்துதான் பிரிட்டன் மே தினத்தை விடுமுறை நாளாக அறிவித்திருந்தது. இப்போது தொழிலாளர் தினமாக கொண்டாடப்படும் மே தினம் ஐரோப்பாவிலும், இதர மேற்கத்திய நாடுகளிலும் ஏதாவது ஒரு வகையில் கொண்டாடப் பட்டது.

உரோமானியர்கள் வசந்த காலத்திற்கும், மலர்களுக்கும் தேவ தையான ''புளோரா'' என்னும் தேவதையை மே மாதத்தில் வழிபட்டனர். 400 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டனில் மே மாதத் தில் ஒரு அழகிய பெண்ணை தேர்ந்தெடுத்து அவளுக்கு மே திங் கள் ராணி என்று பட்டம் சூட்டி அவளைச் சுற்றி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். ஆனால் 17 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இங்கி லாந்தை ஆண்ட மன்னன் தன் ராணியை விட மற்றவளை அழ கியென்று கருதி விழாவெடுப்பதை விரும்பாமல் அவ்விழாவிற்குத் தடை விதித்து விட்டார். பிரான்சிலும் கன்னி மேரியை கொண் டாட மே திங்களின் முதல் நாளை தேர்ந்தெடுத்தனர். போலந்து நோர்வே, பிரிட்டன் போன்ற நாடுகளில் ஊருக்கு நடுவே ஒரு பெரிய கம்பத்தை அலங்கரித்து அதற்கு ''மே பூல்'' எனப் பெய ரிட்டு அதைச் சுற்றி ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

பிரான்ஸ், ஜேர்மனி, போத்துக்கல் மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளில் காதலர்கள் சந்தித்துப் பேசவும், காதலிக்கவும் மே திங்கள் முதல் நாளை தேர்ந்தெடுத்தனர். மே முதல் நாளை காதலர்கள் அதிஷ்ட நாளாக கருதினர். ஆனால் அதே சமயத் தில் போலந்து நாட்டிலுள்ள விவசாயிகள் மே முதல் நாளை துரதிஷ்ட நாளாக எண்ணிப் பயந்தனர். மே முதல் நாளன்று போலந்து நாட்டு விவசாயிகள் தானியங்கள் விதைக்க அஞ்சினார் கள். மே மாதத்தில் உருளைக்கிழங்கு பயிரிட அஞ்சினார்கள். மே மாதத்தில் முட்டையிடத் தொடங்கும் கோழிகள் முட்டை களிலிருந்து தோன்றும் குஞ்சுகள் நோயினால் மடியும் என்றும் அவை நன்றாக வளராது என்றும் அஞ்சினர். எவ்வாறாக இருந் தாலும் மேதினம் உலகெங்கும் ஏதாவது ஒரு வழியில் மக்களி டையே பிரபல்யம் அடைந்துள்ளது. ஆயினும் தொழிலாளர்கள் தினமாக மே தினம் மே திங்கள் முதல் நாளைக் கடைப்பிடிக்க அமெரிக்காதான் காரணமாக அமைந்தது என்பது மறந்துவிட முடியாது.

# அமெரிக்க சனாதிபதி மாற்றுக் கட்சியினருடன் உடன்பாட்டை எய்த விழைகின்றார்

(யூ எஸ் ஏ.ருடே - 19.11 1993.)

**வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வியாழக்கிழமை அன்று அங்கீகரிக்கப்பட்ட களிப்பில், சனாதிபதி பில் கிளின்ரன் அவர்கள் மெக்சிக்கோவுட னான வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கில் பெரிய கட் சியாகவிளங்கும் தொழில்கட்சியுடனும், குடியரசுக்கட்சி யைச் சேர்ந்த சிலருடனும் உள்ள தன் உறவுகளை சீராக்க முயன்றுவருகின்றார்,**

*''எங்களுக்குத் தெற்கேயுள்ள எங்கள் அயல் நாட்டுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கு கடும் முயற்சியை மேற்கொள்வது எங்கள் பொறுப்பாகும்'' என கிளின்ரன் அவர்கள் கூறியுள்ளார்.*

*வட அமெரிக்க வர்த்தக உடன்படிக்கையை அமெரிக்க சட் டமா மன்ற மேலவை வெள்ளியன்று அங்கீகரிக்கும் என எதிர் பார்க்கப்படுவதுடன், எதிர்வரும் வாரத்தில் மெக்சிக்கோவின் சட்ட மாமன்ற மேலவை இந்த விடயம் பற்றி வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தவும் இருக்கின்றது. இந்த இரு மேலவைகளும் வர்த்தக உடன்படிக்கையை அங்கீகரித்தால் எதிர்காலத்தில் மேற் கொள்ள வேண்டிய மாற்றங்களைப் பற்றி மெக்சிக்கோ சனாதி பதி கார்லோஸ் சல்மாஸ் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத் துவதற்கு அமெரிக்க உப சனாதிபதியான கோர் (Gore) அவர் கள் மெக்சிக்கோவுக்குப் பயணம் மேற்கொள்வார் எனவும் கிளின்ரன் அவர்கள் கூறியுள்ளார்.*

*காங்கிரசிலுள்ள 20 அங்கத்தவர்களுடன் கிளின்ரன் அவர்கள் வியாழக்கிழமையன்று பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார். சனா திபதி அவர்களால் முன்வைக்கப்பட்ட சுகாதாரத்தைப் பேணுவ தற்கான திட்டம் சனாதிபதி அவர்களையும் வர்த்தக விடயங்க ளில் அவருக்கு எதிராக இயங்குபவர்களையும் மீண்டும் ஒன்றி ணைக்கும் என சட்டமாமன்ற மேலவையில் பெரும்பான்மையோ ரைக் கொண்ட கட்சியின் தலைவரான ஜோர்ஜ் மிற்சேல் (George mitchile) அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதன் பின் கூறியுள்ளார்.*

*கடுமையாக எதிர்க்கப்பட்ட மெக்சிக்கோ மற்றும் கனடா வுடனான வர்த்தக தொடர்பை அங்கீகரிப்பதற்கு 218 வாக்கு கள் மாத்திரம் தேவைப்பட்ட போதிலும் அது 234 வாக்குகளை*

ஆதரவாகவும், 200 வாக்குகளை எதிராகவும் பெற்று புதன் கிழமை இரவு நிறைவேற்றப்பட்டது. வாக்குகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியினர்:- 102 பேர் ஆதரவாகவும், 156 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

ஜி. ஓ. பி. கட்சியினர்:- 132 பேர் ஆதரவாகவும், 43 பேர் எதிராகவும் வாக்களித்திருந்தனர்,

சுயேட்சை உறுப்பினராகவிருந்த ஒரேயொரு உறுப்பினரும் எதிராகவே வாக்களித்திருந்தார்.

"பின் வாங்காது போட்டியிடவே நாம் விரும்பினோம். இந்தப் பு ய உலகை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதே எங்கள் முக்கியமான பணியாகும்." என கிளின்ரன் அவர்கள் கூறியுள்ளார்.

வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு எதிராக தொழிற்கட்சியினர் நடாத்திய போராட்டம் வீண் போகவில்லை எனவும், "அது இன்னும் முடிவுறவில்லை" எனவும் அமெரிக்க தொழிற் சம்மேளனத்தின் தலைவரான திரு. லேன் கேர்க்லண்ட் (Lane Kerkland) அவர்கள் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்,

இந்த விடயம் சம்பந்தமாக வாக்களித்தவர்களின் பெயர்ப் பட்டியல் மிக அவதானமாக ஆராயப்படும் என அவர் வியாழக்கிழமையன்று கூறினார்.

இணைத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சியே இந்த அங்கீகாரம் எனக்கூறும் சட்டமாமன்ற மேலவையில் சிறுபான்மையினரின் தலைவரான ரொபேற் டோல் (Robert Dole) அவர்களே இப்பொழுது நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியவராக இருக்கின்றார்.

நன்றியுரைக்கு முன் சட்டமாமன்ற மேலவை இந்த விடயம் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என மிற்சேல் அவர்கள் வாக்குறுதி அளித்தார்.

கிளின்ரன் அவர்கள் பெற்ற பெரும்பான்மை வாக்குகளில் அரைவாசிக்கு மேலானவற்றை சிறுபான்மையினரின் தலைவரான இலினோஸ் மாநிலத்தைச் சேர்ந்த பொப் மிக்கேல் (Pope mihel) அவர்கள் பெற்றுக் கொடுத்ததற்காகப் பாராட்டப்பட்டார்.

மெக்சிக்கோ நகரிலுள்ளவர்த்தகர்கள் இந்த வாக்கெடுப்பை பெரிதும் வரவேற்றுள்ளார்கள். தங்கள், தங்கள் நலன்களைப் பாதுகாக்கும் சக்திகளை நிராகரித்துள்ளமையை கனடிய வர்த்தக மந்திரியான றோயி மக்லரன் (Roy Maclaran) வரவேற்றுள்வார்.

வட அமெரிக்க நாடுகளின் எல்லைக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கு முதலீடும், பொருட்களும் கிடைப்பதை ஊக்குவிப்பதற்காகவேஇந்தவர்த்தக உடன்படிக்கை கொண்டுவரப்பட்டுள்ளது.

# நிலநடுக்கம் ஏற்படுவதை மிருகங்கள் முன்கூட்டியே தெரியப்படுத்துகின்றன

## நாய்களும் பூனைகளும் நிலநடுக்கத்தை உணர்கின்றன

(சண்டே ஒப்சேவர் - 19.12.1993)

— கே.ஜீ.எச். முனிதாசா

தங்ஷான் நகருக்கு 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ளதும், வட சீனாவின் காஒகெச்சுவான் நகர்ப் பகுதியிலுள்ளதுமான பண்ணை ஒன்றிற்கு 1976 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் நாள் சூரியோதயத்திற்கு முன் தனது மிருகங்களுக்கு உணவளிப்பதற்காக பண்ணையாளர் ஒருவர் அவற்றின் தொழுவத்தைச் சென்றடைந்தபோது, தனது இரு குதிரைகளும், இரு கோவேறுகழுதைகளும் ஏதோ ஆபத்தில் இருப்பவை போல் வெருண்டு துள்ளுவதையும், தங்கள் கால்களால் நிலத்தைக் கிளறுவதையும் கண்டார். விரைவில் அம்மிருகங்கள் கட்டுக்களை அறுத்துக்கொண்டு வெளியே ஓடின. அப்பொழுது கண்களைக் கூசச் செய்யும் ஒளி ஆகாயத்தை பிரகாசமாக்கியதைத் தொடர்ந்து அச்சத்தை ஏற்படுத்தும் குமுறல் சத்தங்கள் கேட்டன. 7 8 ஒளிப்பிறக்கம் உடைய நிலநடுக்கமான இதுவே உலகப்பெயர்பெற்ற தங்ஷான் நிலநடுக்கமாகும்.

*நிலநடுக்கத்தால் தங்ஷானிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏற்பட்ட பாதிப்புகளை சீனாவிலுள்ள விஞ்ஞானிகள் மதிப்பீடு செய்தபோதே இந்த நிலநடுக்கம் வெளியுலகிற்குத் தெரியவந்தது. மிருகங்களின் நடத்தைகளிலிருந்து நிலநடுக்கம் பற்றி முதற்கூட்டியேஅறியமுடியுமா என்று கண்டறிவதற்காகவே இந்த மதிப்பீடு நாடத்தப்பட்டது.*

*நகரைச் சுற்றியுள்ள தங்ஷானிலும், 48 மாவட்டங்களிலுள்ள 400 நகர்ப்பகுதிகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டதன் பின்பே இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.*

நிலநடுக்கம் ஏற்படுவதற்கு சற்று முன் மிருகங்கள் அசாதாரணமாக நடந்து கொண்ட 2093 சம்பவங்கள் பற்றிய தகவல்களை விஞ்ஞானிகளால் பெறமுடிந்தது. இந்தப் பயங்கரமான நிலநடுக்கத்திலிருந்து உயிர்தப்பியவர்களைப் பேட்டிகண்ட போதும், கலந்துரையாடிய போதும் அவர்கள் இந்த விபரங்களை வழங்கியிருந்தார்கள்.

இவற்றை கூர்ந்து ஆராய்ந்தபோது 80 விகிதமான சம்பவங்களில் குதிரைகளும், கழுதைகளும், நாய்களும், பூனைகளும், பசுக்களும், ஆடுகளும், பன்றிகளும் வீட்டில் வளர்க்கப்படும் ஏனைய மிருகங்களும் சம்பந்தப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

நூற்றுக்கணக்கான மரநாய்கள் நாட்டுப்புறங்களிலுள்ள தங்கள் வளைகளிலிருந்து பட்டப்பகலில் வெளியேறி விவசாயிகள் நடமாடுவதையும் பொருட்படுத்தாது ஒன்றில் தங்கள் குட்டிகளை முதுகிற் சுமந்துகொண்டோ அல்லது வாயிற் கௌவிக் கொண்டோ தப்பியோடியதை அவதானிக்க முடிந்தது.

மீன்தொட்டிகளிலிருந்து மீன்கள் அமைதியின்றித் துடி துடித்துக் கொண்டிருந்த அதேவேளையில், குட்டை குளங்களிலிருந்த மீன்கள் நீரின் மேல்மட்டத்திற்கு வந்து செய்வதறியாது ஒன்றுடன் ஒன்று மோதுவதையும், நீருக்கு மேலே பாய்வதையும் காண முடிந்தது. தங்கள் பட்டிகளுக்குள் செல்ல மறுத்த ஆடுகள், ஒருவரின் இழப்புக்காக வருத்தம் அடைவது போல் கத்துவதையும், பட்டிகளுக்குள்ளேயிருந்த ஆடுகள் அவற்றை விட்டு வெளியே வர முயற்சிப்பதையும் காண முடிந்தது. வெறி கொண்டவை போல் மியாவ் மியாவ் என்று கத்திய பூனைகள் தங்கள் எஜமானர்களைப் பிராண்டியதையும் காணமுடிந்தது. வேறு சில பூனைகள் தங்கள் குட்டிகளை வாயிற் கௌவிக் கொண்டு வீட்டிற்கு வெளியே சென்றுவிட்டதையும் காணமுடிந்தது.

வீட்டுக்குள் செல்வதற்காகக் கதவுகளைப் பிராண்டிய நாய்களை உள்ளே அனுமதித்ததுடன் அவை குரைத்துக்கொண்டு தங்கள் எஜமானர்களைக் கடித்தன. சில தங்கள் குட்டிகளை கௌவிக் கொண்டு விரைந்து சென்றன.

புதுவிதமாகக் கத்திய பன்றிகள் தங்கள் பட்டிகளிலிருந்து கதவுக்குக் கீழாகப் புகுந்தோ அல்லது சுவர்களுக்கு மேலாகப் பாய்ந்தோ தப்பியோடின. கோழிக்குஞ்சுகள் தங்கள் கூடுகளிலிருந்து நடு நிசியில் வெளியேறிக் கூரைகளிலும் மரங்களிலும் தஞ்சமடைந்தன.

மனிதனைக் கண்டு அஞ்சும் நாட்டுப்புறங்களிலுள்ள எலிகள் கூட தங்கள் பொந்துகளிலிருந்து கூட்டமாக வெளியேறி பாதுகாப்புத்தேடியோடின.

நிலநடுக்கம் ஏற்படுவதற்கு 24 மணித்தியாலத்திற்கு முன்பே மிருகங்களின் அசாதாரண நடத்தை உச்சக்கட்டத்தை அடைந்திருந்ததென மதிப்பீடுகள் எடுத்துக் காட்டுகின்றன. இருப்பினும் இதற்கு முன் ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது எலி, பாம்பு, மீன் போன்றவற்றின் நடத்தையில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பே மாறுதல்களைக் காணக்கூடியதாகவிருந்தது.

1966 ஆம் ஆண்டில் வட சீனாவிலுள்ள சிங்க்ராய் நகர்ப் பகுதியில் இடம்பெற்ற புவி நடுக்கத்தின் பின்பே மிருகங்களின் நடத்தையைக் கொண்டு புவி நடுக்கத்தை முன்கூட்டியே அறியும் ஆய்வை மேற்கொள்ள சீன விஞ்ஞானிகள் ஆரம்பித்தனர்.

6.8 ஒளிப்பிறக்கம் உடைய இந்த நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன் இந்த நகரத்தின் கிராமம் ஒன்றிலுள்ள நாய்கள் தங்கள் பட்டிகளிலிருந்து வெளியேறிச் சென்றமையால் இந்தப் பேரழிலிலிருந்து அவை தங்களைக் காப்பாற்றிக் கொண்டதைக் காணக்கூடியதாகவிருந்தது.

சிங்க்ராய் நகர்ப்பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் பின், நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன் மிருகங்களின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி ஆராய்வதற்காக. முற்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மதிப்பீடு செய்ய விஞ்ஞானிகள் ஆரம்பித்தனர். 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இடம்பெற்ற பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கங்கள் ஏற்பட்ட இடங்களுக்குச் சென்ற இவர்கள், அந்தந்த இடங்களிலுள்ள வயோதிபர்களுடன் கலந்துரையாடிப் பலதக வல்களைப் பெற்றனர். நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன் 58 விகிதமான வீட்டு மற்றும் காட்டு மிருகங்கள் வழக்கத்திற்கு மாறாக நடந்து கொண்டதை இவர்கள் தங்கள் ஆரம்ப அறிக்கையில் தெரியப்படுத்தியுள்ளனர். வடமேற்குச் சீனாவிலுள்ள ஹயுவன் எனனும் இடத்தில் இடம்பெற்றதும், சீனாவில் ஏற்பட்ட நில நடுக்கங்களல் மிகவும் பெரியதுமான, அதாவது 8.5 ஒளிப்பறக்கத்தையுடைய நிலநடுக்கம்ஏற்படுமுன். காடுளிலிருந்து ஓநாய்கள் கூட்டம் கூட்டமாக நிலை கெட்டு ஓடியதாகவும், சிட்டுக்குருவிகள் கீச் கீச் என்றும் ஒலியுடன் கிளர்ச்சியுற்றவையாகச் சுற்றிச் சுற்றிப்பறந்ததாகவும் அறியமுடிகின்றது. வயோதிபர் ஒருவர் தனது நாய்கள் வழக்கத்திற்கு மாறான முறையில் குரைப்பதன் காரணத்தை அறிய தனது வீட்டைவிட்டு வெளியே வந்தபோது நிலநடுக்கம் ஏற்பட்ட போதிலும் அவர் உயிர் தப்பினார்.

உயிரினங்களைக் கூர்ந்து அவதானிப்பதன்மூலம் முன்கூட்டியே நில நடுக்கங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு நிலையம் ஒன்றை சிங்க்ராய் என்னுமிடத்தில் சீனா முதன் முதலாக 1962 ஆம் ஆண்டில் அமைத்தது. இதே காரணத்திற்காக அச்சு என்னும் இடத்தில் ஆய்வு மண்டலம் ஒன்றையும் 1971 ஆம் ஆண்டில் சீனா உருவாக்கியது. உயிரின் இயற்பொருள் தோற்ற ஆய்வாளர்கள் இம்மண்டலத்தில் புறாக்களை உபயோகித்து ஆராய்ச்சிகளைமேற்கொண்டிருந்தனர்

316266

# மனிதர்களின் ஆளுமையை அறிய உமிழ்நீர் வாங்கும் நிபுணர்

— அனித்தா ஷரீப்

(த எசியன் வோல் ஸ்ரீற் - 30.11.1993)

**மனிதனுடைய உமிழ்நீரில் வியக்கத்தக்க தன்மைகள் இருக்கின்றது என றோமானியர்கள் நம்பினர். ஒரு பாம்பினது தொண்டைக்குள் துப்புதல் மூலம் அதை எந்த மனிதனும் கொன்றுவிட முடியும் என்று மரபுவழிக் கதை ஒன்று உண்டு.**

இப்படியான ஒரு மனிதனைக் கண்டுபிடிப்பதற்கு கலாநிதி யேம்ஸ் எம். டாப்ஸ் (Dr. James M. Dabbs) அவர்கள் ஆவல் கொண்டுள்ளார். ஜோர்ஜியா மாநிலப் பல்கலைக்கழகத்தில் மனோதத்துவத்துறைப் பேராசிரியராகக்கடமையாற்றும் கலாநிதி டாப்ஸ் அவர்கள் உமிழ்நீர் ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். கொலைகாரர்கள், மந்திரிகள், சட்டத்தரணிகள், விவசாயிகள், செல்வந்தர்கள், ஏழைகள், ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரிடமிருந்து 2500 உமிழ்நீர் மாதிரிகளைச் சேகரித்துள்ள இவர், இவர்களின் வீரியத்தன்மையின் அளவை அறிவதற்கு அவற்றைப் பரிசோதனை செய்துள்ளார்.

மனிதனின் சுரப்புநீர் அளவின் இயல்பு நிலைக்கு மாறாகக் கூடுதலாகச் சுரக்கும்போது அது எப்படி அவனுடைய நடத்தையைப்பாதிக்கின்றது என்பதை அறிந்துகொள்வதில் இவர் ஆர்வம் கொண்டுள்ளார். உடல் ரீதியாக ஆண்களின் சுரப்புநீர், பெரிய தசைகளுடனும், பெரிய குரல்களுடனும், மொட்டைத்தன்மையுடனும் தொடர்புடையதாக விளங்குகின்றது. ஒரு மனிதனின் ஆற்றல் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடும் மனப்பாங்கு போன்றவற்றில் இது எப்படியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற விடயம் சர்ச்சைக்குரியதொன்றாகும்.

ஒரு மனிதனின்வீரியத்தன்மையின் அளவை அறிவதற்கு ஊசிகளைக்கொண்டு இந்தப் பரிசோதனையை மேற்கொள்வதைவிட இது மிகவும் எளிதானதும், இலகுவானதுமான முறையாக இருப்

103804

பதன் காரணமாக உமிழ்நீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப் படுகின்றது. ஒரு மனிதனின் ஆற்றலையும், ஆளுமையையும் பரிசோதிக்க அவனின் பணிமனைமுதல்வர் அந்தப் பணிமனை யிலேயே இந்தப்பரிசோதனையை மேற்கொள்ளக் கூடியதாகவிருக் கின்றது.உமிழ்நீர் பரிசோதனையில் முன்னேற்றத்தைக் கண்டுள்ள தாக கலாநி திடாப்ஸ் அவர்கள் கூறுகிறார்.

கலாநிதி டாப்ஸ் அவர்களின் ஆய்வு பலரைக் கவராத ஒன் றாக இருப்பதாகத் தோன்றியபோதிலும், இதனால் கவரப்பட்ட தேசிய விஞ்ஞான நிலையம் அவரின் பணிக்காக ஆண்டுதோறும் 50.000 டொலர்களை வழங்கிவருகின்றது. இதே பணியில் ஈடு பட்டிருக்கும் மற்றவர்கள் கலாநிதி டாப்ஸ் அவர்களில் பொறாமை கொண்டதைக் கண்ட அவரின் மாணக்கர்கள், வீதியால் செல் பவர்களிடமிருந்தும், வீடு வீடாகச் சென்றும் 2500 சிறிய பிளாஸ் ரிக் குப்பிகளில் உமிழ்நீரைச் சேகரித்துள்ளனர்.

''எங்கள் வேண்டுகோளை நிராகரிக்காது எங்களுக்கு ஒத் தாசை புரிந்த மக்களின் எண்ணிக்கையை நினைக்கும்போது வியப்பாகவிருக்கின்றது'' என ஜோர்ஜியா மாநிலப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவியான செல்வி. யஸ்மின் ரியாட் (Jasmin Riad) கூறுகின்றார். ஆகக்குறைந்த ஊதியத்தைவிட சிறிது கூடுதலான ஊதியமே அவருக்கு வழங்கப்படுகின்றது. மற்றைய மாணவர்கள் கல்விமுறையிலான சலுகைகளைப் பெறுகிறார்கள். ''சிலர் இதை ஒரு விளையாட்டாகச் செய்கின்றார்கள்'' என கலாநிதி டாப்ஸ் அவர்கள் கூறுகிறார்.

நண்பர்களிடமும், உறவினர்களிடமும் உமிழ்நீர் சேகரிப்பதை இலகுவான விடயம் எனக்கூற இயலாது. 1980ஆம் ஆண்டின் முற்பகுதியில் உமிழ்நீரைப் பற்றிய ஆய்வை கலாநிதி டாப்ஸ் அவர்கள் ஆரம்பித்தபோது உமிழ்நீரை உள்ளடக்கிய சிறிய குப் பிகளைத் தனது வீட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டியில் வைத் திருந்தார். ஆனால் வீட்டுக்குரிய பொருட்களுடன் இதை வைத் திருப்பது இழிவான செயல் என அவரது மனைவியாரை இது எண்ணவைத்தது. பின்னர், பல்கலைக்கழகத்திலுள்ள அவருடைய பணிமனைக்கு வெளியேயுள்ள குளிர்சாதனப்பெட்டி ஒன்றுக்குள் அவை வைக்கப்பட்டன.

உமிழ்நீரை வழங்க முன்வருபவர்களைத் தேடிப்பிடிக்கவேண் டிய அவசியம் ஏற்படவில்லை. ஜோர்ஜியா மாநிலத்தின் அல்ரோ விலுள்ள லீ அனன்டேட் சீர்திருத்த நிலையத்தில்(Lee Anenedd

தேசிய ... நூலக சேவை

Correctional Facility in Alto Georgia) தங்கியிருப்பவர்களுள் 700 பேர் தங்கள் உமிழ்நீரை வழங்க மகிழ்வுடன் முன்வந்தனர். ஆய்வுகூட உதவியாளர்களாகப் பணிபுரிய இன்னும் பலர் முன் வந்தனர்.

ஜோர்ஜியா மாநிலத்திலுள்ள கல்லூரி மாணவன் ஒருவனின் வேண்டுகோளுக்கிணங்க அற்லாந்தா நகரில் வசிக்கும் தொழில் வாய்ப்பற்ற மக்கள் தலா 5 டாலர்களைப் பெற்றுக்கொண்டு தங் கள் உமிழ்நீரை வழங்கினார்கள். உமிழ்நீரை வழங்க விரும்பிய மக்கள் திடீரென அவரைச் சூழ்ந்துகொண்டனர் ''என கலாநிதி டாப்ஸ் அவர்கள் கூறுகிறார்.'' ஆனால் குறிப்பிட்ட அளவிலான 5 டொலர் நோட்டுக்களையே அவர் தம் வசம் வைத்திருந்தார். தங்களுக்குச் செவிசாய்க்கும்படி அவர்கள் மன்றாடினார்கள். ஆகவே உமிழ்நீரை வழங்கப்போட்டி போட்டுக்கொண்டு மக்கள் வந்தார்க்ள் என அவர் மேலும் கூறுகிறார்

மிருகங்களில் மேற்கொண்ட ஆய்வுகளைப் பொறுத்தமட்டில் வாலில்லா சிம்பன்சி குரங்குகள் ஒத்துழைக்கக் கூடியவையாகவிருந் தன. ''குரங்குதான் கண்டதைச் செய்யும்'' நாம் ஒரு கோப்பைக் குள் துப்பினால், அதுவும் ஒரு கோப்பைக்குள் துப்பும்'' என கலாநிதி டாப்ஸ் கூறுகிறார்.

உமிழ்நீரின் மாதிரிகளைச் சேகரிப்பதும் அவற்றைப்பேணி முறைப்படுத்துவதும் சிக்கலற்ற ஒரு விடயமாகும். சுரப்பிகளால் வெளியேற்றப்படுவதும் ஒட்டக்கூடிய பிசுபிசுப்புத்தன்மை உடை யதும், விழுங்குவதற்கும் செமிபாட்டிற்கும் உதவுவதுமான உமிழ் நீரை ஊறச்செய்வதற்காக, உமிழ்நீரை வழங்க முன்வருபவர்க ளுக்கு சுவிங்கம் வழங்கப்பட்டு அதை வாயில் மென்று அசை போடும்படி கேட்கப்படுகின்றது.

''நாங்கள் தேடி எடுக்கவேண்டிவரும் என்பதால் குப்பிக்குள் சுவிங்கத்தை துப்பாதீர்கள் என அவர்களை நாம் கேட்டுக்கொள் கிறோம்''என செல்வி ரியாட் கூறுகிறார்.

வீரியத்தின் அளவை அறிந்துகொள்ள ஆய்வுகூடத்தில் உமிழ் நீரைப் பரிசோதித்தபோது ஆண்களினதும். பெண்களினதும் வீரியத்திற்கு இடையிலும். மந்திரிமார்களினதும் சிறைத்தண்ட னையை அனுபவித்து வருபவர்களினதும் வீரியத்திற்கு இடையிலும் மிகுந்தவேறு பாடுகள் இருப்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

## சராசரி நிலையிலுள்ள ஒரு பெண்

பெண்களின் கருப்பைப்பையும். குண்டிக்காய் சுரப்பியும் சிறிய அளவிலான வீரியத்தையே உற்பத்திசெய்கின்றன. ஆண்களைப் பொறுத்தமட்டில் விதைகளே இயக்குநீரை உற்பத்தி செய்கின்றது. சாதாரண பெண் ஒருவருடைய 1/10 பங்கு லீற்றர் உமிழ்நீரில் ஒன்றிரண்டு நானோ கிறாம் (நானோகிறாம் என்பது 1கிறாமின் 10கோடியில் ஒருபங்கு) அளவிலான வீரியம் மாத்திரமே இருக்கும் அதேவேளை, அநேகமான ஆண்களுடைய வீரியம் எட்டிலிருந்து பத்து நானோ கிறாம்களை கொண்டுள்ளது. சாதாரணமான பெண்ணைவிட மூர்க்கத்தனமான பெண்கைதி ஒருவர் சிறிது கூடுதலான அதாவது மூன்று அல்லது நான்கு நானோகிறாம் வீரிய அளவை கொண்டிருப்பதுடன் மூர்க்கத்தனமான ஆண் சாதாரணமான ஒரு ஆணைவிட 17 அல்லது அதற்குக் கூடுதலான நானோகிறாம் வீரிய அளவைக்கொண்டிருப்பதாக கலாநிதி டாப்ஸ் அவர்கள் கூறுகின்றார். மந்திரிமார்கள் ஐந்திலிருந்து ஆறு நானோகிறாம் வரை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்'

அப்படியாயின் நிறைவான வீரியத்தன்மையை கொண்டிருப்பவர் யார் யார் ? கைதிகள். மற்றவர்களின் உணர்ச்சிக்கு மதிப்பளிக்காது அளவுக்கதிகமான விலையில் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள், தொழிலற்றவர்கள் போன்றோர் மற்றவர்களைவிட கூடுதாலன வீரியத்தை கொண்டிருப்பதாக கலாநிதி டாப்ஸ் அவர்களின் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் மந்திரிகள். விவசாயிகள் உடல் உழைப்பில் ஈடுபடாது பணிமனைகளில் கடமையாற்றும் முகாமையாளர்கள் குறைந்தளவு வீரியத்தைக் கொண்டுள்ளனர்.

1962ம் ஆண்டில் யேல் பல்கலைக்கழகத்திடமிருந்து கலாநிதி பட்டத்தைப்பெற்ற காலநிதி டாப்ஸ் அவர்கள் வீரியத்தைப்பற்றி சுமார் 20 கட்டுரைகளை எழுதி இந்தத் துறையில் நல்ல மதிப்புப்பெற்று விளங்குகின்றபோதிலும் சில ஆண்கள் , குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கு வீரியமே காரணம் எனக்கூறவில்லை. ஆண்களின் வீரியத்துடன் அவர்களுடைய நடத்தையை தொடர்புபடுத்துவது கடினமானதாகும். கலாநிதி டாப்ஸ் அவர்கள் இவற்றிலுள்ள இடைத்தொடர்புகளில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றார். இவற்றின் கருத்துக்கள் எப்போதும் தெளிவற்றவையாகவே உள்ளன. கடுமையாக வேலை வாங்கும் நிர்வாகி ஒருவர் கூட சாதாரணமான அல்லது குறைந்த அளவிலான வீரியத்தையே கொண்டுள்ளதாக காலநிதி டாப்ளஸ் அவர்கள் கூறுகிறார்.

## வெளிப்படையாகத்தோன்றும் தொடர்புகள்.

ஆணின்வீறாப்பு மிக்க வீரியத்திற்கும் வன்செயல்களுக்குமிடையே வெளிப்படையாகத் தோன்றும் தொடர்பு இருப்பதைக் கலாநிதி டாப்ஸ் அவர்களும் அவருடைய உதவியாளர்களும் அவதானித்துள்ளனர்.

அப்படி இருந்த போதிலும் வீரியத்தில் கூடுதலான வீறாப்புத்தன்மையைக் கொண்ட சிலர் அதனையிட்டு பெருமை அடைவதாகத் தோன்றுகின்றது. காலநிதி டாப்ஸ் அவர்களின் ஆய்வைப்பற்றிக் கேள்விப்பட்ட அற்லான்ராவில் வாழும் சட்டத்தரணியான செல்வி மேரி தொம்சன் தனக்குக் கீழ் கடமையாற்றும் பணியாளர்களை அளவிடுவதற்காக காலநிதி டாப்ஸ் அவர்களை தனது பணிமனைக்கு அழைத்திருந்தார். ''காலை உணவின் போது தன்னால் கூச்சலிடவும், மோதவும், மேலும் கீழும் பாயவும் முடியும்'' எனக்கூறும் செல்வி. தொம்சன் தன்னிடம் வீரியத்தன்மை கூடுதலாக காணப்படக்கூடும் என சந்தேகித்ததைப்போல் அவரிடம் அதிகமாகவே அது காணப்பட்டது. ஆனால் இதை இறுதியான முடிவாக இவர் ஏற்கவில்லை. 'உண்மையாக இது என்னத்தை எடுத்துக்காட்டுகிறது என்பது எனக்குப்புரியவில்லை' என இவர் கூறுகின்றார்.

சில விஞ்ஞானிகளும் இப்படியான கருத்தைக் கொண்டுள்ளனர். அமெரிக்காவிலுள்ள மனோதத்துவ ஆராய்ச்சிக்கழகத்தில் மூத்த விஞ்ஞானியாகக் கடமையாற்றும் பிரயன் கிளாடோ அவர்கள் ''துப்பறியும் வேலையில் ஈடுபட்டவர்கள்போல் நாம் கடமை ஆற்றுகின்றோம்'' என கூறுகின்றார், சான்றுகள் அனைத்தும் முன்வைக்கப்பட்டாலன்றி இறுதியான முடிவுக்கு வர நாம் விரும்பவில்லை. இடைத்தொடர்புகள் தடயங்களேயன்றி இறுதியான முடிவை எடுப்பதற்கு உதவுபவை ஆகாது.... ஆண்களின் எந்தவொரு நடத்தைக்கும் காரணம் காட்டக் கூடியதாகவிருப்பதுடன் ஆண்களோ கூடுதலான வீரியத்தைக் கொண்டுள்ளதாகக் காட்டுவதற்கும் சாத்தியக்கூறுகள் உண்டு''என அவர் மேலும் கூறியுள்ளார்.

உமிழ்நீர் பரிசோதனையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கருத்து தொழில் வாய்ப்பை அளிப்பவர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவும்,தொழிலுக்கு விண்ணப்பிப்போருக்கு கசப்பான ஒன்றாகவும் இருக்கின்றது. வேலை வாய்ப்பை வழங்குவதற்கு கையெழுத்தைப் பரிசீலனை செய்யும் வழக்கம் தேவையற்றது எனப்பல இடங்களில் கருதப்பட்ட போதிலும்,சிலஐரோப்பிய நிறுவனங்கள் இன்று இதற்கு மதிப்புக்கொடுத்து வருகின்றன உமிழ்நீர் பரிசோதனையும் இதைப்போலவே சர்ச்சைக்குரிய ஒன்றாக இருக்கக்கூடும்.

தேசிய விஞ்ஞான நிலையத்தின் உதவியைப் பெறுவதற்குத் தேவையான பாலியல் உணர்வுகளைப்பற்றிய ஆராய்ச்சியான வீரியம் எப்படி மனிதனின் நடத்தையில் பாதிப்பை எற்படுத்துகின்றதென்பதைச் சரியாக அறிந்துகொண்டாலன்றி இந்த ஆராய்ச்சியைத் தான் கைவிடப்போவதில்லை என இந்த 55 வயதான விஞ்ஞானி கூறுகிறார். 'பணத்தை எங்கிருந்து பெறுகின்றேனோ அவர்களாலேயே நான் சிறிதளவேனும் வழிநடத்தப்படுகின்றேன்' என இவர் கூறிமுடித்தார்

# தமிழீழ விடுதலைப் புலிகளின் படைத்துறைத் திறமையும் குறிக்கோளும்

—மேர்வின் டி. சில்வா

(லங்கா கார்டியன் - 01.12.1993)

இலங்கைக்கு ஒரு கடற்படைப் பிரிவு தேவை என்ற விடயத்தை 1950ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் எடுத்துக்கொண்ட போது, சேர் உக்வத்த ஜெயசுந்தர. ''இப்பொழுது எங்களிடம் தரைப்படைப் பிரிவு இருப்பது போல ஒரு கடற்படைப் பிரிவும் இருப்பது நல்லது'' என்று முன் மொழிந்தார்.

என்ன அழகாக மெச்சத்தக்கதும், மாசில்லாத முறையிலும் நாட்டின் பாதுகாப்பு, மற்றும் படைத்துறை விடயங்கள் பற்றி இலங்கையின் முந்நாள் தலைவர்கள் அவ்விடயங்களைக் கையாண்டனர் அல்லது நெருங்கினர் என்பது விளங்குகிறது. விவாதமே இல்லாமல் சிலவார்த்தைகளோடு அந்த வேண்டுகோள் சட்டமாக்கப்பட்டது.

ஒரு கிழமைக்கு முன் 3 முன்னைய படைத்தளபதிகளான லெப்டினன் ஜெனரல் டெனிஷ் பெரேரா, றியர் அட்மிறல் பேசில் குணசேகரா, எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணத்திலக ஆகியவர்களைப் பேட்டிகண்ட பொழுது, வெகு இலகுவில் மறந்துபோன அல்லது கைவிடப்பட்ட ஒரு பொதுவான இடம் ஞாபகத்திற்குவந்தது. அதுவே இலங்கை என்ற தீவு.

முன்னைநாள் தரைப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜென்றல் டெனிஷ் பெரேரா

பத்திரிகையாளரிடம் கூறியவை:- ''இலங்கை ஒரு தீவு. இத்தீவினுள் ஆயுதங்கள், பொருட்கள் வந்து தேங்கியிருக்கின்றன, குவிக்கப்படுகின்றன. இப்பொருட்கள் கொண்டுவரப்படும் பாதைகளை நாம் மூடிவிடவேண்டும். மேலிருந்து எதிரிகளைக் கண்காணிக்கவும் கண்டுபிடித்து அழிக்கவும் விமானப்படை விமானங்களைப் பயன்படுத்துவதோடு, எதிரிக்கு உதவும் எதுவாயிருந்தாலும் எங்கள் கரைகளில் இருக்க முடியாதவாறு நிச்சயப்படுத்தவும் வேண்டும்'' என்று தளபதி கூறினார். ...

போர் முறைத்திறன் அனைத்தையும் உள்ளடக்கிய முழு நேர கடமைகளில் ஈடுபடும் கடற்படைத் தளபதி ஒருவர் தேவைப்படுவவாகக் கூறிய றியர் அட்மிறல் குணசேகர, மேலும் கடற்படையின் வளர்ச்சி பற்றி பேட்டி கண்டவரிடம் எடுத்துக் கூறுகிறார்:-

''பாக்கு நீரிணை வழியாக நடக்கும் கடத்தல் வியாபாரத்தை முறியடிப்பதற்காக 3 சீனரக பீரங்கிப் படகுகளை 1960களின் முற்பகுதியில் பண்டாரநாயக்கா அம்மையாரின் அரசு கடற்படைக்குப் பெற்றுக் கொடுத்தது. அந்த நாட்களை நான் இன்றும் மறக்கவில்லை'' என்கிறார் கடற்படைத்தளபதி. ''அக்காலத்தில் எங்களை எதிர்ப்பதற்கு கடத்தல்காரனோ, கள்ளமாகக் குடியேறுபவனோ மற்றும் எவனோ துணிவாக முன்வர மாட்டார்கள். எதிர்ப்பே இல்லாமல் எங்களைக் கண்டதும் அவர்கள் சரணடைந்துவிடுவார்கள். இந்த வழியில் 1979 வரை அதாவது நான் ஓய்வுபெறும்வரை நடந்தது. பின் எங்களிடம் இருந்த கப்பல்துறையகத்திலிருந்து எங்கள் சொந்தக் கப்பல்களைக்கட்டுவதோடு இராணுவத்திற்கும் ஏற்ற அளவில் உதவியாகவும் பணிபுரிந்தோம், 350 அதிகாரிகளும், 4,000 கடற்படையினரும் (விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலுக்கு முன்) எங்கள் தொகையிலிருந்தனர். சிறந்த முறையில் படையினரையும், உபகரணங்களையும் கொண்ட கடற்படைத் தளங்களைக் கொழும்பு, வெலிசற, கல்பிட்டி, காரைநகர், திருகோணமலை மற்றும் தங்காலை போன்ற இடங்களில் நிறுவினோம். இறுதியாக வேறொரு கப்பல் துறையகம், சிறிய பொறியியலாளர் தளம் ஆகியவற்றைக் காலியில் அமைத்தோம்.

**கேள்வி:-** *மரபொழுங்கு முறையிலான மற்றும் ஏனைய யுத்தங்களின் போதும் கடற்படையின் முக்கிய பணிகள யாவை?*

**பதில்:-** (கடற்படைத் தளபதி) நாட்டின் ஆட்சி உரிமையைப் பாதுகாத்தல் என்ற வெளிப்படையான செயல் கடமையை விட, கடல் போக்கு வரத்துப் பாதைகளை எதிரி பாவிப்பதற்கு இடமளிக்காமலும் நாட்டு மக்களின் பாவனைக்கு தங்கு தடையில்லாமலும் பாதுகாப்பது, எதிரியின் திறமையையும் அவனுக்குப் பயன்படக் கூடியவற்றையும் அழித்தொழித்தல், கடல்மார்க்கமாக அல்லது ஆகாய மார்க்கமாக துருப்புக்களைக்கொண்டு செல்வது தடைப்படும் நேரத்தில் படைகளுக்கு போக்குவரத்து வசதி அளித்தல், படைகளுக்கு தகுந்த நேரத்தில் பொருத்தமான உதவிகள் செய்தல் முதலியன முக்கிய கடமைகளாகும்.

கேள்வி:- இந்திய கடற்படையும் இலங்கைக் கடற்படையும் கூட்டாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பித்தபின் எங்களின் வேலை இலகுவாக்கப்பட்டதா?

பதில்:- ஆம், நிச்சயமாக.

கேள்வி:- அப்படி என்றால் கடற்படைக்குப் பிரச்சினைகள் என்கிறீரா?

பதில்:- அப்படி என்றால் என்னைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லைப் போலத் தெரிகிறது. ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. நான் முக்கியமாகக் கருதுவது ஒழுக்க முறைப் பண்பையே. யுத்தத்தில் பங்குபற்றுவதற்கு மனவலிமை வேண்டும். ஒரு முக்கியபிரச்சினை ஏற்பட்டால் அதை உடனேயே நிவர்த்தி செய்துவிட வேண்டும்.

தரைப்படைத் தளபதி - ஜெனரல் டெனிஷ் பெரேராவின் கருத்துக்களை நாமெல்லோரும் மனதிற் கொள்ளவேண்டும். நாம் எதற்காக இந்த யுத்தத்தை நடத்துகிறோம் என்று என்னைக் கேட்டால் நிச்சயமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்த் திறமைகளை அழிப்பதற்காகவே என்று செல்வேன். இதைச் சிலர் சட்ட ஒழுங்குப் பிரச்சினை என நம்புவதாகத் தெரிகிறது. அது அர்த்தமற்றதாகும். முதலாவதாக கடல்வழி பாதைகளை (இருந்தால்) எதிரிகள் பாவிக்காமல் அவற்றை மூடிபாதுகாப்பது கடற்படையின் கடமை; எங்கள் விமானங்களும்உலங்கு வானூர்திகளும் எதிரிகளைக் கண்டு பிடிப்பதில் கவனம்செலுத்தும் வேளையில் இந்த இருபகுதியினருடன் (கடற்படை, தரைப்படை) சேர்ந்து கரைசேரும் எதிரியின் ஆயுதங்களைஅழிப்பது எங்களின் கடமையாகும். கரைசேர்ந்த படகுகளை (எதிரியின்) உடனே அழிப்பது இராணுவத்தின் பொறுப்பாகும். இதை விமானப்படையினரும் செயல்முறைப் படுத்தலாம். இப்படியான எலலாவற்றையும் உள்ளிட்ட போர்முறைத்திறன்களை கையாள, இப்போதிருப்பது போல ஒரு குறிப்பிட்டபகுதி கடற்பொறுப்பாளரைவிட முழுகடற் பரப்பையும், கரையோரங்களையும் அடங்கிய கடற்படைக்குப் பொறுப்பான கடற்படைத் தளபதிஇருப்பது வேண்டத் தக்கதாகும் என்றார் முன்னைநாள் தரைப்படைத் தளபதி லெப். ஜெனரல்டெனிஷ் பேரேரா. இவருடன் நடத்திய ஷம்பாஷனையின்போது பத்திரிகையாளரின்;

கேள்வி:- ஜெனரல் அவர்களே ஓய்வுபெற்ற படைத்தளபதிகளுடன் கலந்துரையாடல் நடததியிருந்தீர்கள் அதிலிருந்து

*உங்களுடைய கருத்துக்களையும், நன்மைபயக்கக் கூடிய திருத்தங்களையும் தந்துதவமுடியுமா?*

**பதில்:-** ''எனது சில கருத்துக்களைக் கேள்வி மூலம் கேட்டு பின் ஆராய்வோம். எல்லாவற்றையும் உள்ளடக்கிய யுத்த தந்திரோபாய திட்டங்களைத் தீட்டுவதில் ஏதாவது குறைபாடுண்டானால் நன்றாக ஆராய்ந்து அதைத் திருத்தி அமைத்தல் வேண்டுமா? மேலதிக இராணுவத்தினரைத் துணைப்படையாக அனுப்புவதில் தாமதம் ஏற்படுகிறதா? இராணுவத்தினருக்கிடையேயுள்ள திட்டங்களில் நெருங்கிய தொடர்புகளுண்டா? நீளமாகப்பரவியிருக்கும் முன்னணிப் பாதுகாப்பு வலயங்களுக்கும், பின் அணியினருக்கும் இடையில் ஆழமான தொடர்பு உண்டா?

**கேள்வி:-** *ஜெனரல் அவர்களே நீங்கள் புலனாய்வு பற்றிக் கூறவில்லையே?*

**பதில்:-** அதற்கு வரத்தான் இருக்கிறேன். அதிலும் கேள்விதான் என்னிடமுண்டு. புலனாய்வு பிழைப்பட்டதா? அல்லது சரியானவழியில் கையாளப்படவில்லையா?

**கேள்வி:-** *இராணுவத்திற்கு தோல்வி, தவறுபோன்றவை நடக்கும் பொழுது வழமையாக விசாரணை நடத்துவதுண்டா?*

**பதில்:-** நல்ல கேள்விதான். கட்டாயம் நடத்தவேண்டும். அதைப் பொறுத்தவரையில் மேல்மட்டத்தில் அது நடக்க வேண்டும். ஒன்றையும் ஒட்டியோ, மறைத்தோ மினுக்குப் பூசிவிடப்படாது. ஒவ்வொரு நிறுவனமும் விட்ட பிழையில் இருந்து திருந்தவேண்டும். அதுவே அனுபவத்தின் ஒரு பகுதி.

**கேள்வி:-** *தமிழீழ விடுதலைப்புலிகள் நன்றாக ஊடுருவியிருக்கின்றனர் என்று அனேகமாகப் பேசப்படுகிறதே?*

**பதில்:-** ஆம். நாங்களும் பல கதைகள் கேள்விப்பட்டிருக்கிறோம். ''நீங்கள் எல்லோரும் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்? ஊடுருவல் காரரை அவர்களின் பேச்சே காட்டிக்கொடுக்கும் அல்லவா?

**கேள்வி:-** *ஜெனரல் அவர்களே தலைமைப்பீட அமைப்பு பற்றி என்ன சொல்கிறீர்கள். ஜெனரல் ஜெரி டி சில்வா அவர்கள் வடபகுதியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் அல்லவா?*

பதில்:- நிரந்தர பொறுப்பாளராக நியமிப்பது நல்ல எண்ணமே. ஆனால் போர்த்துறைத் தந்திரோபாயங்கள், மற்றும் கூட்டொழுங்கு நடவடிக்கைகளில் அதிகாரிகள் நிலைத்தலைவர் கவனம் செலுத்துவதையே நான் விரும்புகிறேன். ஏனென்றால் தரைப்படை, கடற்படை பொறுப்பாளரின் திட்டங்களை ஒன்றோடொன்றாக கூட்டொழுங்குபடுத்தி செயல்படவேண்டியிருக்கிறது.

கேள்வி:- கடுமையான காவலுடன் பாதுகாத்து வந்த இராணுவ முமாம்கள் கூட மிக இலகுவில் எதிரிகள் கைப்பற்றி.. யது பற்றி

பதில்.- ''இராணுவம் பல இடைவெளிகளை விட்டிருந்தது முக்கியமாக பூநகரி பரந்த பிரதேசம். அங்கு பல கண்ணி வெடிகள், மின்கம்பிகள் புதைக்கப்பட்டு வெளிச்சமுமேற்றப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது ஊடுருவுபவர்களை காவலில் நிற்பவர்கள் இலகுவில் கண்டிருப்பர். இவை எல்லாம் கைவசமிருந்தன. எதிரிகளை அழிக்கக் கூடிய கண்ணி வெடிகளைக் கூடுதலாகப் பாவித்திருக்கவேண்டும். ஓரிடத்தில் நிலைகொண்டிருக்கும் பொழுது முன் அணிப்பாதுகாப்பு வலையம் மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்கவேண்டும். என்று முன்னாள் தரைப்படைத்தளபதி கூறிமுடித்தார்.

## விமானப்படை

கிளாலி; இராணுவ நடவடிக்கையின் முக்கிய குறிக்கோளாயிருந்தது. கடற்கரையில் கட்டப்பட்டிருந்த புலிகளின் அலைதாங்கியை அழிப்பதற்கு இராணுவம் தேவை இல்லையே ? ஆம் இந்த வேலையை விமானப்படையே செய்து முடித்திருக்க வேண்டும் என்றார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலகா. இவ்விஷயத்தில் விமானப்படையின் கவனமின்மை பற்றி அவர் தன் அதிர்ச்சியைத் தெரிவித்தார். விமானப்படையினரின் பங்கும் சேர்ந்துஇருந்தால் கதை வேறாக முடிந்திருக்கும் என்றார்.

''இப்பொழுது புலிகள் இப்பாதையை உபயோகிக்க முடியாது என்று இராணுவம் கூறினாலும், புலிகள் இப்பாதை வழியாக வருவதற்கு எவ்வளவு நேரம் எடுத்திருப்பர் ? ... இதற்காகவா நாங்கள் 118 இராணுவத்தினரை இழந்துள்ளோம் ?

''முதல் நாளில் ஒரு எதிர்ப்பும் இல்லாதபடியால் இராணுவம் முன்னேறிக்கொண்டு சென்றது. விடுதலைப்புலிகள் கவனமாக

[library stamp]

இதைக் கவனித்தனர். இரண்டாம் நாள் புலிகள் சடுதியாகப்பாய்ந்தனர். 118 படையினர் அழிக்கப்பட்டனர்.''

யாழ் தீபகற்பத்தையும் முக்கிய நிலப்பிரதேசத்தையும் இணைக்கும் புலிகளின் முக்கிய அலைதாங்கி எங்களின் குறிக்கோளாக இருந்தது.

இங்கு இரு விடயங்களை நாங்கள் பரிசீலிக்கவேண்டும். ஒன்று எங்கள் குறிக்கோள் (இலக்கு) மற்றையது சரியான கணிப்பு நேரம். இது ஒரு தரைமார்க்க இலக்கு அல்ல. ஆகவே எதற்காக தரைப்படையை ஈடுபடுத்தினர் ? ஏன் எதற்கா இந்த வேலையை விமானப்படையிடம் விடவில்லை ?

(குறிப்பு: நான் பேட்டிகண்ட ஏனைய முந்திய தளபதிகளிடமும் இந்த நேரக் கணிப்பு பற்றி பேசியிருந்தேன்)

புலிகளிடம் பலம் வாய்ந்த படையினர் இருப்பதாக இப்பொழுது எங்களுக்குத் தெரியும். புலிகளின் எண்ணிக்கை குறைவாயிருந்தாலும் அவர்களின் செயல் நோக்கங்களும் திட்டங்களும் மிக ஆழமானவை. அவர்கள் எந்த சூழலுக்கும் ஏற்றவாறு நன்றாக பயிற்றப்பட்டவர்களாயிருக்கின்றனர். பெண்கள் கூட போர் முன்னணி நிலையத்தில் செயல் புரிகின்றனர். புலிகள் இப்பொழுது கடலிலும் திறமையாகச் செயல் படுகின்றனர். ஆனால் ஆகாயத்தில் நாங்களே முழுத்திறமையுமுள்ளவர்களாயிருக்கின்றோம். காலையிலிருந்து மாலை வரை திறமையாகவும் தயார் நிலையிலுமுள்ள விமானப் படையில் நாங்கள் நம்பிக்கையிழந்தது எதற்காக? அவர்களை நம்பி ஏன் நாங்கள் செயற்படவில்லை?

**கேள்வி:-** நாங்கள் ஆகாயத்தின் ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதால், சுருக்கமாக அதே காரணத்திற்காக விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையினர் பலாலி விமானத் தளத்தின் மேல் கண் வைத்து முதலில் கூடிய கவனஞ் செலுத்துவர் என்று நீங்கள் எண்ணவில்லையா?

**பதில்:-** ஆம் அவர்கள் கட்டாயமாக பலாலி விமானத் தளத்தைத் தாக்கி அழிப்பதற்கு முன்னுரிமை கொடுப்பர். ஆகாயத்தில் எங்களுக்கிருக்கும் ஆதிக்கத்தைச் செலுத்தவிடாமல் அழிப்பதற்கு அவர்கள் தங்களால் இயன்ற எல்லாவற்றையும் பயன்படுத்துவர். ஆனால் அதைவிட ஆழமான பிரச்சினை ஒன்று உண்டு. படையினரின் மனோநிலை, ஒழுக்கம் அதுதான் எனது முக்கிய கவலையாகும்.

''வேறு தொழில் கிடைக்கும் வரையில்
நானே என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வேன்.''

என்ற நஞ்சு எண்ணம் படையினரிடம் பரவக்கூடாது. இப்படியான ஒழுக்கச்சிதைவு ஏற்பட இடங்கொடுக்கக் கூடாது. உறுதியான நம்பிக்கையையும், துணிவான வீரத்தையும் நாங்கள் படையினருக்கு ஏற்படுத்த வேண்டும். இதற்கு நன்றாகப் பிணைக்கப்பட்ட கூட்டுமொத்தமான ஒரு கூட்டு ஆணைக்குழு இருக்க வேண்டியது அவசியம். இக்குழு மிகக் குறைந்த அளவினரைக் கொண்டதாக அமைய வேண்டும். முப்படைத்தளபதிகளும் காவல் துறை அத்தியட்சகரும் சேர்ந்தால் நிறைவான கூட்டு ஆணைக்குழுவாகும். படையினரல்லாதோரின் தலையீடு இல்லாமல், யுத்த தந்திரோபயங்களின் முடிவு எடுப்பதும் அந்தந்தத் தொழிற் பிரிவுகளுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் பொறுப்பும் இக்குழுவிடமே இருக்கவேண்டும். இறுதியாக படைப்பிரிவுகளில் புதிதாக ஆட்கள் சேருவதற்கு ஊக்கமளிக்கவும், படையினரின் ஒழுக்கமுறைகளை மேம்படுத்தவும் கட்டாயமாக ஒரு ''படைத்துறைப்போர் ஆய்வு ஆலோசகர்சபை'' அவசியம் என்றும் விமானப்படை முன்னை நாள் தளபதி வைஸ்மார்ஷல் குணதிலக சுருக்கமாகத் தனதபிப்பிராயத்தைக் கூறினார்.

## றீக்ஸ்ரக் தீ (REICHSTAG FIRE)

ஜேர்மனியின் அக்கால நாடாளுமன்றமாயிருந்த 'றீக்ஸ்ரக்' கட்டடம் 1933 ஆம் ஆண்டு பெப்ரவரி 27 ஆம் திகதி இரவு தீ மூட்டி எரிக்கப்பட்ட சம்பவமே இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. 1932 நவம்பரில் நடந்த தேர்தலில் ஹிட்லர் வெற்றிபெற்றிருந்த போதிலும் பெரும்பான்மைப் பலம் பெறவேண்டியிருந்ததால் 1933 மார்ச் 5 ஆம் திகதிக்கு மறுதேர்தல் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இத்தேர்தலுக்கு ஒரு வாரமே இருக்கையில் இத்தீவைப்புச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

பெப்ரவரி 28 ஆம் திகதியன்றே ஹிட்லர் 'மக்களையும் அரசையும் காப்பாற்றுவதற்காக' என்ற சுலோகத்தை உச்சரித்தபடி அரசியல் யாப்பினால் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த சகல அதிகாரங்களையும் தானே சுவீகரித்தபடி தன்னை ஏகாதிபத்தியமுள்ள ஜேர்மனியின் தலைவராக நியமித்துக்கொண்டார். றீக்ஸ்ரக் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் 444 பேர்களின் ஒப்புதலுடனும் 94 பேர்களின் எதிர்ப்புடனும் சட்ட வாக்க அதிகாரங்களைத் தனது அமைச்சரவைக்கு மாற்றுவித்தார். இத்துடன் சகல அதிகாரங்களும் கிடைக்கப்பெற்ற சர்வாதிகாரியாக அவர் தன்னை நியமித்துக்கொண்டார்.

# பாதுகாப்பை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் இராணுவக் கல்லூரியில் போராளிகள் பயிற்றப்படுகிறார்கள்

— தாரகி
(ஐலண்ட் 03. 04. 1994)

**விடுதலைப் புலிகளின் அங்கமாக விளங்கும் பெண் புலிகளால் அண்மையில் வெளியிடப்பட்ட ''சுதந்திரப் பறவை'' என்ற சஞ்சிகையில் பூநகரித் தாக்குதலின் போது படுகாயமுற்று சாவெய்திய பின்னர் லெப்டினன்ட் கேணலாகப் பதவி உயர்த்தப்பட்ட பாமா அவர்களைப் பற்றி ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது.**

*1989ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட இவர் பலாலியைச் சுற்றிவர உள்ள பகுதிகளின் பாதுகாப்பு நடவடிக்கையில் 1990ஆம் ஆண்டில் ஈடுபட்டிருந்தார். அதன் பின்னர் இவர் ஆனையிறவுப் போரில் பங்கு பற்றியதுடன், வெலி ஓயாக் காடுகளில் இராணுவத்தினருடன் நடைபெற்ற போர்களிலும் ஈடுபட்டார். கடற்புலிகள் அமைப்பில் பெண்களுக்கான பிரிவு ஒன்று 1992ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உருவாக்கப்பட்ட போது அப்பிரிவுடன் இணைக்கப்பட்ட இவர் நாளடைவில் அந்தப் பிரிவின் உதவித் தளபதியாக பதவி உயர்த்தப்பட்டார். பூநகரித் தாக்குதலுக்கான முயற்சியில் பங்குபற்ற அனுப்பப்படுவதற்கு முன்னர், கடற்படையினருடன் நடுக்கடலில் அடிக்கடி போர்புரிய வேண்டியதும், பொதுமக்கள் பயங்கரமான பிரயாணத்தை மேற்கொள்வதும், சிக்கலும் கடினமும் நிறைந்துள்ளதுமான கிளாலிக்கு பொறுப்பதிகாரியாக இவர் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்களால் நியமிக்கப்பட்டார். போரின்போது சாவைத் தழுவிக்கொண்ட ஆண் மற்றும் பெண் புலிகளின் இராணுவ வாழ்க்கை மற்றும் வீரதீரச் செயல்களைப்பற்றி விடுதலைப் புலிகளின் வெளியீடுகளில் தவறாமலும், ஒழுங்காகவும் வரும் கட்டுரைகளை வாசித்தறிந்தவர்களுக்கு இந்த விடயங்கள் யாவும் சாதாரணமானதாகத் தோன்றக்கூடும். ஆனால் லெப்ரினன்ட் கேணல் பாமா அவர்கள் தனது திறமையுடன்,மேலதிகாரிகளுக்*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

கான பாதுகாப்புப் பயிற்சி அளிக்கப்படும் விடுதலைப் புலிகளின் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்றவர் என்பது குறிப் பிடத்தக்க ஒன்றாகும். இந்த இராணுவக் கல்லூரியிலேயே முதன் முதலாக பாமா அவர்களைச் சந்தித்ததாக ஒரு செவ்வியின் போது சூசை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலாளர்களுக்குத் தேவையான பயிற்சியை அளிப்பதற்காக விடுதலைப் புலிகள் இராணுவப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தமை இரண்டாம் ஈழப்போரின் மிக முக்கிய நிகழ்ச்சி களில் ஒன்றாகும். மரபு வழிப்போர் முறையில் இராணுவம் எப்படிச் செயல்படுகிறது என்பதைக் குறைந்தளவு முறையிலா வது தெரிந்துகொள்ள முனையும் எவரும் இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உணர்வர். இராணுவத்திற்கு ஆளணி சேர்த்தல், இராணுவத்தை உருவாக்கிப் பராமரித்தல், இராணுவத்தை போர் முனைக்கு நடாத்திச் செல்லல் ஆகிய கடமைகளில் மேலா ளர்கள் எப்படியான ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றனர் என் பதை அறிந்திருக்காதவர்களுக்கு இந்திய இராணுவத்தைப்பற்றி ஸ்ரீபன் கொஹென் (Stephen Cohen) அவர்கள் எழுதிய நூலிலிருந்து பின்வருபவற்றைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

''கீழ் மட்டத்திலுள்ள படைவீரர்கள் தசைநார் போலவும், பொறுப்பு ஒன்றும் ஒப்படைக்கப்படாத இராணுவ மேலாளர் கள் இருதயம் போலவும் விளங்குவதைப்போல, இராணுவத்தின் மூளையாக இராணுவ மேலாளர்கள் விளங்குவது சாதாரணமாகத் தோன்றினாலும் இராணுவத் தத்துவத்தின் உண்மையான மனப் பாங்கு அதுவேயாகும். சாதாரண மட்டத்திலான ஆய்வுக்கு இது பொருந்தும் என்றாலும் மேலாளர்கள் இராணுவத்துடன் கொண் டுள்ள முக்கிய தொடர்புகள் அனைத்தையும் இது விளக்க வில்லை. மூளையைப் போலல்லாது, இராணுவத்தின் மற்றைய பகுதிகளை உருவாக்குவதுடன் மேலாளர்கள் ஆற்றலிழந்த அல் லது பாதிப்பு ஏற்பட்ட அடித்து நொறுக்கப்பட்ட வலுவிழந்த பகுதிகளையும் மீழ நிரப்பக்கூடியவர்கள். தரமான படையினர் இராணுவத்திற்கு தேவை என்ற போதிலும், மேலாளர்கள் தரமே இராணுவத்தின் தரத்தையும் வெற்றியையும் தீர்மானிக் கின்றது. இந்திய நாட்டுப் படையுடன் நேபாள அரசுப்படை யினரை ஒப்பிட்டுப் பார்க்கும போது தென் ஆசியாவிலுள்ள இந்த இரு படையினரின் மேலாளர்கள் எப்படியான ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்வர். இவ்விரு நாட்டு இராணுவமும் ஒரே இனமான குர்க்கா வீரர்களை பயன்படுத்துகின்ற போதிலும், இரண்டை

யும் ஒப்பிட்டால் அவற்றின் செயற்பாடுகளில் வேறுபாடுகள் நிலவுவதைக்கண்டு கொள்ளலாம்''

ஆனையிறவில் நடைபெற்ற போருக்குப்பின்னர் மேலாளர்களைக் கொண்ட படையணியை தாங்களும் உருவாக்க வேண்டும் என்ற தவிர்க்கமுடியாத தேவையை விடுதலைப் புலிகள் உணர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டனர். முன்னெப்போது மில்லாதவாறு, அந்த நடவடிக்கையின் போது ஏற்பட்ட நிகழ்வுகள் ஏனைய விடயங்களுடன் அங்கும் இங்குமாகப் போர்முனையில் சிதறுண்டுள்ள அல்லது பின்னணியிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான போராளிகளைத் திறமையுடனும் வெற்றிகரமாகவும் வழி நடாத்துவதற்கு தரமுள்ள போர்சூழ்ச்சிமுறைகள், தந்திரோபயங்கள், உடற்பயிற்சிகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த போதனைகள் ஆகியவற்றில் பயிற்சிபெற்ற இராணுவத் தலைவர்களைக் கொண்ட பிரிவு ஒன்று அவசியம் என்பதை அவர்களுக்கு புகட்டியது. போர் நடக்கும் போது அதற்கான சில பெரிய விடயங்களுக்கும் விநியோகத்திற்கும் பொது மக்களின் ஆதரவை நம்பி இருப்பது போர் முனையில் போர் புரிபவர்களுக்கு பாதிப்பையும், சிக்கல்களையும் ஏற்படுத்தும் என்பது உணரப்பட்டது.

போரில் பங்கு கொண்ட விடுதலைப் புலிகள் பலர் துணிகரமான புத்திசாதுர்யமான செய்கைகளைச் செய்து முடித்தார்கள் என்ற போதிலும், தாங்களே தங்களை கெரில்லாத் தலைவர்களாக ஆக்கிக்கொண்ட தனிப்பட்டவர்களின் ஆற்றலினாலும் அவர்களிடம் திடீரென தோன்றும் இராணுவத் தந்திரோபாயங்களாலும் எதிர்பார்த்த முடிவை எட்ட முடியாது என்பதை விடுதலைப் புலிகள் தெளிவாக உணர்ந்துள்ளனர்.

கெரில்லா குழுவொன்றின் தலைவராக விளங்கும் ஒருவர் தனது தனிச் சிறப்பு வாய்ந்த குணாதிசயங்களாலும் முயற்சியினாலுமே இராணுவ ரீதியிலான வெற்றியை அடைகின்றார். அப்படியாயின் பயங்கரமான பண்பாட்டை உடைய ஒருவரே வெற்றியை அடையக்கூடிய சிறந்த கெரில்லாத் தலைவராக இருக்க முடியும். முதலாவது ஈழப்போரின் போது பிரபாகரன் அவர்களின் கீழ் பிரதேசத் தளபதிகளாக கடமை புரிந்த குமரப்பா, சந்தோசம், விக்ரர், காக்கா, பூலா' புலேந்திரன் போன்றோர் அப்படியானவர்களே.

இரண்டாவது ஈழப்போரின் போது பெரியளவிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்தை

பிரபாகரன் அவர்கள் கொண்டுள்ளதால் பெரும் எண்ணிக்கை யிலானவர்களைப் போரில் ஈடுபடுத்தி அவர்களை வழி நடாத் தக்கூடிய போர்த் தந்திரோபாயங்களை இணைக்கக்கூடிய தலை வர்களே தேவையாக உள்ளனர். கெரில்லா பிரிவின் தலைவர் களின் தனிப்பட்ட திறமையும் தேர்ச்சியும் அதிக தேவையற்றது எனக் காணப்பட்டதுடன் பெரிய நடவடிக்கைகள் மேற்கொள் வதற்கு அவர்கள் சில வேளைகளில் இடையூறாகவும் இருந்துள் ளார்கள்.

ஆனையிறவுப்போரில் விடுதலைப்புலிகள் முன்னெப்போது மில்லாதவாறு இழப்புகளை சந்தித்தமைக்கான காரணம் வெட்ட வெளியாக உள்ள ஒரு இடத்தின் இராணுவப் பாதுகாப்பரண் களைத் தகர்த்தெறிய அவர்களிடம் பீரங்கிப்படையின் ஆதரவு இருக்கவில்லை என்பது மட்டுமல்லாது ஒன்றிணைந்து செயலாற் றக்கூடிய இராணுவத் தலைவர்களும் அவர்களிடம் அப்போது இருக்கவில்லை என்பதும் ஒரு காரணமாகும். ஆனையிறவுக் கான போர்த்திட்ட நடவடிக்கையை பலவாறாகப் பிரித்த விடு தலைப்புலிகளின் தலைமைப்பீடம் அதை நிறைவேற்றுவதற்கு அனேகமாக பல கெரில்லாக்களைக் கொண்ட அந்தந்தப் பிர தேசத் தலைவர்களுக்கு கீழ் இயங்கிவந்த குழுக்களிடம் ஒப்படைத் திருந்தது.

உதாரணமாக தெற்குப்புற எல்லையிலுள்ள பாதுகாப்புகளை அழிக்கும் பணி பால்ராஜ் அவர்களின் தலைமையின் கீழுள்ள வன்னிப் பிரதேசக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் வடபகுதி யிலுள்ள பாதுகாப்புகளை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் அழித் தொழிப்பதற்கான பணி பானு அவர்களின் தலைமையின் கீழ் முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த குழுவிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தது. அதேநேரத்தில் முதலாவது பலவேகய நடவடிக் கையைத் தடுத்து நிறுத்துவதற்காக திருகோணமலைத் தளபதி பதுமன் அவர்கள் அவசர அவசரமாக வெற்றிலைக்கேணி கடற் கரைக்கு அனுப்பப்பட்டார். இந்த முகாமை வெற்றிகொள்வதற் காக இறுதி முயற்சியாக அங்கு அனுப்பப்பட்ட பெரும் எண் ணிக்கையிலான இளைஞர்களை வான்படையினரும், பீரங்கிப் படையினரும் அந்த வெட்ட வெளியில் கொன்று குவித்தனர்

ஆனையிறவுப் போரைப்பற்றி ஆய்வு மேற்கொண்டபோது அங்கு நடைபெற்ற சம்பவங்கள் கசப்பூட்டுபவையாக இருந்த துடன், போர்முனையில் மதிநுட்பத்துடன் போராளிகளை நடாத் தும் திறமை பாரிய பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கு மேற் கொள்ளப்படும் பாரிய நடவடிக்கைகளைப்பற்றி தகவல் திரட்டு

தல், அதற்கேற்றவாறு திட்டமிடல், அதனை எதிர்கொள்வதற்குத் தேவையான இராணுவப் பொருட்கள் அவற்றை விநியோகிப்பதற்கான முறைகள் போன்றவற்றை அறிந்து கொள்ளக் கூடிய வல்லமையையும் மதிநுட்பத்தையும் பெறுவதற்காக பெரும் எண்ணிக்கையிலான ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படவேண்டியது அவசியம் என தீர்மானிக்கப்பட்டது. தங்கள் சொந்த மேலாளர்களைக்கொண்ட ஒரு பிரிவை உருவாக்குவதன்மூலமே இதை நடைமுறைப்படுத்தலாம் என்பதை விடுதலைப்புலிகள் உணர்ந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகளின் இராணுவக் கல்லூரியில் இதற்கான பயிற்சியைப்பெற்ற முதலாவது தொகுதி மேலாளர்கள் சொர்ணம், பொட்டு அம்மான் மற்றும் சூசை ஆகியோரின் தலைமையின்கீழ் பூநகரிக்கு அனுப்பப்பட்டனர் சுமார் 800 படைவீரர்களை மட்டும் கொண்டிருந்த ஆனையிறவு இராணுவமுகாமைப்போல் அல்லாது சுமார் 2000 துருப்புகளைப் பூநகரிமுகாம் கொண்டிருந்த போதிலும் விடுதலைப்புலிகள் பூநகரியில் திருப்திகரமான வெற்றியை ஈட்டியுள்ளனர். வேறு பல காரணங்களுடன் பயிற்சி பெற்ற மேலாளர்கள் பிரிவு ஒன்று பூநகரிக்கு அனுப்பப்பட்டதாலேயே தங்கள் நடவடிக்கையின் நோக்கையும் போர்த்திட்டத்தையும் வெகுவிரைவாக விடுதலைப்புலிகள் அடையக்கூடியதாக இருந்தது.

இராணுவக்கல்லூரியில் பயிற்சி பெறவேண்டிய மேலாளர்களுக்கு அடிப்படையாக தேவைப்படும் போர்பற்றிய அறிவுரைகள், போர்தந்திரோபாயங்கள் ஆகியவை பால்ராஜ் அவர்களின் சிந்தனையில் உருவாகியவையாகும் என நான் நினைக்கின்றேன். இதைத்தவிர விடுதலைப்புலிகளின் தலைவர் பதவியை ஏற்ற ஆரம்பகாலத்திலிருந்தே இராணுவ விடயங்களைப்பற்றிய வெளியீடுகளை பெரும் தொகையில் சேகரித்துவரும் பிரபாகரன் அவர்களும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை இதற்குச் செய்திருக்க வேண்டும். இலங்கை இராணுவம் உட்பட பலதரப்பட்ட இராணுவ விவகாரங்களைப்பற்றி புகழ்பூத்த பாதுகாப்பு ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளை தமிழாக்கம் செய்யும் பெரும் முயற்சியில் விடுதலைப்புலிகளின் வெளியீட்டு வாரியம் ஈடுபட்டுள்ளது. தங்கள் போராளிகள் கட்டாயமாக வாசிக்கவேண்டும் என்பதால் இதுவரை அவர்கள் பதினெட்டு புத்தகத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

இதனால், மேலாளர் மட்டத்தை அடையுமுன்னரே போராளி யாக தன்னை இணைத்துக் கொண்ட ஒருவர் இராணுவ கோட் பாட்டையும் அதனை நடைமுறைப்படுத்தும் வழிமுறையையும் பொதுவாக அறிந்து வைத்திருப்பார். பிரதேச தளபதிகள் மற்றும் விடுதலைப்புலிகளின் போராளிக்குழுக்கள் ஆகியவற்றிற்கு பெரும் இழப்புகள் நேர்ந்துவருவதால் விடுதலைப்புலிகள் இதைத் தவிர்க்க முடியாது (யாழ் தேவி நடவடிக்கையின் பின்னர் பால்ராஜ் அவர் களை எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை என நம்பப்படுகின்றது. அன்பு அவர்களும் மற்றும் ஏனைய பல நடுத் தர மட்டத்திலான தளபதிகள் பூநகரியில் இறந்துள்ளனர்). அனு பவம் மற்றும் தனிப்பட்ட புத்திசாதுர்யம் ஆகியவற்றால் மட்டும் தமது தளபதிகள் உகந்த தகுதியான நிலைக்கு வரும்வரை காத் திருக்கும் நிலையில் தற்பொது விடுதலைப்புலிகள் இல்லை. தங் களிடம் தற்போதுள்ள போராளிகளிலிருந்து திறமைவாய்ந்த, குறிப்பறிந்து நடக்கக்கூடியது மேலளர்களைக் கொண்ட படைப் பிரிவினரை விடுதலைப்புலிகள் உருவாக்க வேண்டியதுடன், அவர் களை எந்தநேரமும் தயார் நிலையிலும் வைத்திருக்க வேண்டி யுள்ளது இதைக்கூறும் போது போர்த்தந்திரோபாயங்கலிலுள்ள சிக்கல்களை மனதில் பதிய வைக்கக்கூடிய திறமையுள்ள மேலா ளர் ஒருவரை உருவாக்குவதற்கு தேவையான உயர்கல்வியின் ஆகக்குறைந்த மட்டத்திலான கல்வியைக்கற்ற பெரும் எண்ணிக் கையிலான இளைஞர்கள் விடுதலைப்புலிகளிடம் உண்டு எனக்கரு தலாமா? இல்லை என்பதே இதற்குரியபதிலாகும். அப்படியாயின் திறமையுள்ள மேலாளர் படைப்பிரிவொன்றை அவர்களால் எப் படி உருவாக்கஇயலும்? இதற்கு இரு வழிகள் உண்டு. போரளிக ளாகப் புதிதாகச் சேர்ந்தவர்களை இனங்கண்டு கொண்ட பின்னர் குறிப்பிட்ட எண்ணிக்கையினரை ஒரு கல்வித்திட்டத்தில் அல்லது ஒரு படாசாலையில் கல்விகற்பிப்பர் என்பதுடன் சிறப்புத்தகுதி பெற்றவர்கள் மேற்படிப்பை பெறுவதற்காக அனுப்பப்படுவது ஒரு முறையாகும். விடுதலைப்புலிகளின் இராணுவத்திலும்அவர் களின் முகம்காளிலும் இருந்துகொண்டு பாடசாலை சென்று வரும் பெண்களும் ஆண்களும் தற்போது பெருமளவிலுள்ளனர் தொடர்புசாதனங்கள், வரைபடம் வரைதல் மற்றும் படாசாலை போன்ற தொழில் நுட்பத்தில் முன்னேற்றமடைந்த பகுதி களுக்குப்பொறுப்பாக உள்ள மூத்த உறுப்பினர்கள் சிலர் அவர்கள் வகுத்துவந்த பதவியிலிருந்து விலக்களிக்கப்பட்டு மேற்கல்விகற் பதற்காகஅனுப்பப்படுவது வழக்கமாய்விட்டது மாங்குளத்திலும் சிலாவத்துறையிலும் நல்ல பயனை அளித்த சக்திவாய்ந்த பசிலன் எறிகணைபிரிவுக்கு பொறுப்பாக விளங்கிய காப்டன் மலரவன் அவர்கள் உயர்கல்வி கற்பதற்காக தன்னுடைய பிரிவில்ருந்து

வெளியேற்றப்பட்டதாக மனக்கசப்புடன் முறையிட்டதாக தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியுள்ளார் (கப்ரின் மலரவன் இறந்த பின்னர் அவரின் நாளேடு பிரசுரிக்கப்பட்டபோது அதற்கு தமிழ்ச்செல்வன் அவர்கள் எழுதிய முடிவுரையில் இவ்வாறு கூறியிருக்கிறார்)

முன்பு நாம் அறிந்து கொண்டது போல இராணுவரீதியிலான விடயங்களை அறிந்து கொள்வதற்கு தேவையாகவுள்ள நூல்களை விடுதலைப் புலிகள் குறிப்பிடத்தக்களவு எழுதியோ அல்லது மொழியாக்கம் செய்தோ உள்ளதால், கிழக்கில் வறுமையால் பீடிக்கப்பட்ட பின்தங்கிய கிராமங்களிலிருந்து போராளிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்ட பெருமளவான இளைஞர்கள் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருந்தபோதிலும் முகாம்களில் இருந்து கொண்டே பாடசாலைக்குச் சென்று எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொடுக்கப்படுவதால், பணிப்புரையின் பேரில் இந்த இளைஞர்கள் கூட இவற்றை வாசித்து விடயங்களை அறிய முயல்வது இரண்டாவது வழிமுறையாகும். வாசித்து அறிந்து கொள்ளவேண்டியவை யாவும் தமிழமொழியில் உள்ளதே இதற்கான முக்கிய காரணமாகும். பிரித்தானிய சாம்ராஜ்சியம் நிலை கொண்டிருந்தபோது பிரித்தானிய படையணியில் சேர்ந்து பிரித்தானியப்படைப்பிரிவின் மேலாளர்களால் வழிநடத்தப்பட்ட இந்திய உபகண்டத்தின் படைவீரர்கள், உபகண்டத்திலுள்ளவர்களுக்கு அரசாளும் பொறுப்பு மாற்றம் செய்யப்பட்டபின்னரும் கூட அவர்களின் இனத்தைதத்தவிர மற்றைய எல்லா விடங்களிலும் பிரித்தானியர்கள் போல நடந்து கொண்டதால் எழுந்த பிரச்சினைகளை எண்ணிப்பார்க்கவேண்டும்.

பிரித்தானியாவின் சொந்த இராணுவத்திலும் பார்க்க பிரித்தானிய இராணுவத்தின் ஒழுங்கு முறைகளை இந்தியர்களைக் கொண்ட மேலாளர்பிரிவு பின்பற்றிவந்துள்ளது என பிரித்தானிய படைத்தளபதிகள் சிலர் தம்மிடம் கூறியுள்ளதாக ஸரீபன் கொஹென் அவர்கள் கூறுகின்றார். சான்ட்ஹேஸ்ற் (Sand Hurst) பாணியில் உருவாக்கப்பட்டு அதை முன்மாதிரியாக கொண்டு உபகண்டத்தில் இயங்கும் தேசிய இராணுவக்கல்லூரிகளுக்கு ஆங்கில அறிவும் மேற்குலகத்தைப்பற்றிய அறிவும் கொண்டவர்கள் தேவைப்படும் போது, அப்படியானவர்கள் குறைந்த தொகையினர் என்பதால் இந்தியா, பாகிஸ்தான்

மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து பிரித்தானியர் செல்லும் போது அந்நாடுகளில் விட்டுச் சென்ற பயிற்றப்பட்ட இராணுவத்தின் ஆற்றல்வாய்ந்த மேலாளர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் கஷ்டமாக உள்ளது. கூடுதலான வருமானத்தையும் கீர்த்தியையும் கொடுக்கக்கூடிய வேறு வேலைவாப்புகள் இவர்களுக்கு நிறைய உண்டு என்பதால் இராணுவமேலாளர்களாகச் சேரும் எண்ணிக்கையினர் குறைந்துகொண்டே வருகின்றனர். எழுபதாம் ஆண்டுகளில் இந்திய இராணுவத்தின் மேலாளர்களாக சேர்ந்தவர்கள் சாதாரண அறிவுத்திறன் கொண்டவர்களாக விளங்கியதற்கு ஆங்கில மொழி அறிவின்மையே முக்கிய காரணமாகும்.

இலங்கையிலும் இது போலவே நடைபெறுகின்றது இராணுவத்தின் ஐம்பது விகிதமான படைப்பிரிவுகள் மேஜர் பதவியை தற்காலிகமாக ஏற்றிருக்கும் மேலாளர்களால் வழி நடாத்தப்படுகின்றது. இதற்கான காரணங்களுள் ஆங்கிலமொழியைக் கற்றுக் கொள்ளாததும் ஒன்றாகும். மேலாளர்களைக் கொண்ட படைப் பிரிவில் சேர்ந்து, முன்னேற்றமடைந்த மேற்கத்திய இராணுவக் கோட்பாடுகளை அறிந்து கொள்வதற்கு ஆங்கில மொழியிலும் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவேண்டும் என்பதால் இந்தப் பிரச்சனை தவிர்க்கமுடியாத ஒன்றாகும். சான்ட்ஹேஸ்ற் மற்றும் தேசிய, இராணுவக் கல்லூரி ஆகியவற்றினால் உருவாக்கப் பட்ட புகழ்பெற்ற மேலாளர்கள் இணைந்து தயாரித்த திட்டங் களை பூநகரித்தாக்குதலின் போது முறியடிக்கப்பட்டது சுய மொழியில் இங்கேயே உருவாக்கப்பட்ட இராணுவமுறையிலான கல்வியைக்கற்ற விடுதலைப்புலிப் போராளிகளின் போர்த்திட்டங்களையும் செயல்விளைவுகளையும் எந்தமுறையிலும் குறைக்கவில்லை என்பதை தெரியப்படுத்தியுள்ளது இராணுவ ரீதியிலான முன்னேற்றங்களை விடுதலைப்புலிகள் மேலும் பெறுவார்களாயின் சிறந்ததெனக்கருதப்படும் மேற்கத்திய இராணுவமுறைகளுள் சிலவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும். பாக்குத்தொடுவாயின் இருபக்கங்களிலுமுள்ள படைத்தளபதிகள் வெறும் சின்னங்களை அணிந்துகொண்டு பயனற்றபெருட்களாக இருக்கின்றார்களோ என ஒருவரை ஊகிக்க வைக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. கால் வொன் கிளோவுஸ்விற்ஸ் (Carlvon Clausewitz)அவர்களின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மேற்குலக இராணுவ சிந்தனைகளை சான்ட்

ஹேஸ்ற் கல்லூரியில் கல்வி போதித்தவரும் பிரித்தானிய இரா ணுவ வரலாற்று ஆசிரியர் எனப்புகழ் பெற்றவருமான திரு.யோன் கீகன் அவர்கள் கூட குறைகூறியுள்ளார். கெடுபிடிப் போர் உல கத்தில் தோன்றுவதற்கு காரணமான போர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவருடையகூற்றுகள் சந்தேகத்தை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும் என்றாலும் 19 ஆவது நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து நடாத்ததப்பட்ட மரபு வழி போர்முறையில் கிளோஸ்விற்ஸ் அவர்களின் சிந்தனை எப்படி மேலோங்கியி ருந்தது என்பதைபும் எப்படியான ஒரு விசேட சூழ்நிலையில் அது உருவாக்கப்பட்டது என்பதையும் எண்ணிப்பார்த்தால் மேற் குறிப்பிட்ட விடயத்தை தெளிவுபடுத்தக்கூடியதாக இருக்கும். பிரடெரிக் (Frederick the Great) அவர்களின் புகழ்பூத்த இரா ணுவக் கோட்பாட்டிற்கு இசைவாக ரசிய நாட்டிற்கு ஒரு சிறந்த பெரும்படையை ஐரோப்பாவில் திரட்டி வரும்போது அவரும் அந்தப் பெரும்படையின் போர் வீரனாக இணைந்து கொண்டார். ஆனால் ஐரோப்பாவில் அப்போது ஆட்சிபுரிந்த வர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட இந்த இராணுவக்கோட்பாடு களை உதாசீனம் செய்யும் வகையில் பிரான்சில் புரட்சி செய்த பொதுமக்களைக் கொண்டு நெப்போலியனால் உருவாக்கப்பட்ட படையினர் ஜெனாவிலும் (Jena) அதற்குப்பின்னர் 1806 ஆம் ஆண்டில் அயூர்ஸ்ரெட்டிலும் (Auerstedt) ரசியப்படைகளுக்கும் அழிவை ஏற்படுத்தியது. நாங்கள் அயராது பின்பற்றிய இராணு வக் கோட்பாட்டில் ஏதோ ஒரு பெரியதவறு இருக்கின்றது என் பதை திரு. கிளாவுஸ்விற்ஸ் அவர்கள் உட்பட கைதியாகப் பிடிக் கப்பட்ட பலருக்கு அது தெளிவாக்கியது.

அந்தச்சம்பவங்களுக்குப் பின்னர் மாவீரன் பிரடெரிக் அவர் களின் முறைகள், உவமைகளையும் அடுக்கு மொழிகளை யும் கொண்ட வெறும் பகட்டுகளே அல்லாது பாதுகாப்புக்கு உகந்தவையல்ல என்பதுடன் இப்படியான முக்கியமான விடயங் களுக்கு தெளிவான குறுகிய முறையிலேயே கருத்துரைகள் வழங் கப்படவேண்டியது அவசியம் என திரு. கிளோஸ்விற்ஸ் அவர்கள் கூறியுள்ளார்.

அதற்குப் பின்னர், ரசியப்படையினரை சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோது கிளோஸ்விற்ஸ் அவர்களும் அவரின் சகாவான இஸ்காம்ஹோஸ்ற் (Schamhorst) அவர்களும் இணைந்து நீடித்த நன்மையை பயக்கக்கூடியதும் சோதனையைக் கொடுக்கக்கூடியதுமான வழிமுறைகள் இரண்டை அமுல்படுத்தினர். இராணுவ மேலாளரைக் கொண்ட படைப் பிரிவுக்கு ரசியநாட்டு சீமான் குடும்பங்களிலிருந்து மட்டும் ஆட்களைத் தெரிவுசெய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டமை முதலாவது நடவடிக்கையாகும். இரண்டாவது நடவடிக்கையாக பொதுமக்களுக்கு கல்வி கற்பிக்கப்படும் முறையில் பெரும் முன்னேற்றம் கொண்டுவரப்பட்டது. பொதுமக்களின் கல்வியைப்பற்றி ஆராய்வதில் இராணுவச்சீர்திருத்த வாதிகள் பெரும் அக்கறை காட்டினர். ஆரம்பப் பாடசாலைகள் இராணுவத்தை தயார் நிலையில் வைத்திருப்பதற்கு எப்படி உதவியாக இருக்கும் என்பதைப் பற்றி இராணுவ மேலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் பின்னர், ரசியன் இராணுவம் ஐரோப்பாவில் வல்லமை பொருந்திய இராணுவமாக நிலைகொண்டமை வரலாற்று ரீதியாகக் கண்டுகொண்ட உண்மையாகும்.

ஒரு குறிப்பிட்ட இராணுவ யுக்தி நவநாகரிகமானதாகவும், தாக்குவதற்கு இடம் கொடுக்க முடியாததாகவும் தோன்றிய போதிலும். சிலவேளைகளில் இராணுவத் தனிப்பண்புகளுக்கும் ஆற்றலுக்கும் முட்டுக்கட்டையாக இருந்து பயனற்றவையாக விழங்கும், வழக்கமாக பின்பற்றப்பட்டுவரும் பாரம்பரிய முறைகள் பின்பற்றப்பட்டு மேலதிகாரிகள் தெரிவு செய்யப்படுவது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட மேலாளர் படையை உருவாக்க உதவும் என்பதுடன் அப்படியான முறை இராணுவத்துக்கு கெடுதலை உண்டாக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அத்துடன் இராணுவத்தில் புதிதாக சேர்ந்தவர்களின் கல்விக்கு அதி முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகள் தென் ஆசியாவில் விட்டுச்சென்ற இராணுவ முறைகளைக் கையாளாது தங்கள் சொந்த இராணுவ முறைகளைத் திட்டமிட்டு அதைப் பின்பற்றி வருவதனாலேயே விடுதலைப் புலிகள் ஆற்றல் மிக்கவர்களாக விளங்குகிறார்கள் என்பது கண்கூடாகும்.

# இடி அமீன்

(ஜூனியர் விகடன் - 09.03.1993)

**சாதாரண மனிதன் 'சைக்கோ' மனிதனாக ஆகும் போது, அது வக்கிர புத்தியுடன் செயல்படும் போது விளைவுகள் பயங்கரமாக இருக்கும். அந்த மனிதனிடம் வரம்பு இல்லாமல் அதிகாரம் இருந்து விட்டால் என்னென்ன நடக்கும்? நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு உலக சரித்திரத்தில் இந்த 'சைக்கோ' சர்வாதிகாரிகளின் கிறுக்குத்தனங்கள் ஆங்காங்கே ரத்தக்கறைகளை விட்டுச் சென்றிருக்கின்றன. இவர்களைப் பற்றிய தகவல்களை 'உலகின் மோசமான கொடுங்காவலர்கள்' (The World's Most Evil Men) என்ற புத்தகம் விளக்குகிறது.**

ஆப்பிரிக்கக் கண்டத்தில் கோன் ஐஸ்க்ரீம் வடிவத்தில் உள்ள குட்டி நாடு உகாண்டா. அதன் தலைநகரான கம்பாலாவில் அன்றிரவும் மின்சாரம் தடைபட்டு இருளில் மூழ்கிறது. அவ்வளவுதான்! உடனே மரண பயம் கவ்விக்கொள்ள, இருட்டில் அமைதியாக எல்லோரும் தங்கள் வீடுகளுக்குள் சென்று பதுங்க ஆரம்பித்தனர்.

கம்பாலாவுக்கு நாற்பது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அணைக்கட்டு ஒன்றின் மூலமாக மின்சாரம் உற்பத்தியாகிறது. மின்சாரத் தடை என்றாலே அதற்கு ஒரே ஒரு காரணம் தான் என்பது கம்பாலாவில் வசிப்பவர்களுக்குத் தெரியும். தண்ணீரில் அடித்துக் கொண்டு வரும் ஏராளமான பிணங்கள், அணைக்கட்டில் மின்சார உற்பத்தி செய்யும் ராட்சத இயந்திரங்களில் சிக்கிக் கொண்டு மின்சாரம் தடைபடுவது வாடிக்கையான விஷயம். இடி அமீனின் ராணுவம் ஏராளமான மக்களைக் கொன்று ஆற்றிலே தூக்கி எறியப்பட்டதன் அடையாளம்தான் 'பவர்கட்'! நாளொன்றுக்கு நாற்பது அல்லது ஐம்பது பிணங்கள் இவ்வாறு தூக்கி எறியப்பட்டன.

இடி அமீன் ஆண்ட எட்டு வருட காலத்தில் சுமார் ஐந்து லட்சம் மக்களை ஈவு இரக்கமின்றிக் கொன்றான். கொல்லப் பட்டவர்கள் சிலரின் மாமிசத்தையும் 'டேஸ்ட்' செய்திருக்கி

றான் இடிஅமீன். கல்வியறிவு அதிகமில்லாத இடிஅமீன் 'காக்வா' என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவன். ஆறடி உயரம், ஆங்கில அறிவு கிடையாது. எதையும் புரிந்துகொள்ளும் சக்தி இல்லாதவன். உகாண்டாவில் பாக்ஸிங் சாம்பியனாக விளங்கியவன். உகாண்டா ஆங்கிலேயர் வசம் இருந்தபோது ராணுவத்தில் ஒரு அதிகாரியாக இருந்தவன்.

அப்போது உகாண்டாவை ஆண்டுவந்த பிரதம மந்திரி ஓபேட்டுக்கு எதிர்ப்பு வலுக்கவே, அந்த எதிர்ப்பை அடக்க, கண்டிப்பான ஓர் அதிகாரி தேவை என எண்ணிய ஓபேட், இடிஅமீனை டெபுடி கமாண்டராக நியமனம் செய்தார். ஓபேட்டுக்குப் பலத்த எதிர்த் தரப்பில் அப்போது இருந்தவர் கிங் ஃபிரட்டி. இவர்தான் உகாண்டாவின் ஜனாதிபதி. பதவி அளிக்கப்பட்ட உடனேயே இடிஅமீன் செயலில் இறங்கினான். தன்னுடைய ஜீப்பின் மேல் இயந்திரத் துப்பாக்கியை பொருத்திக் கொண்டு நேராக ஜனாதிபதி ஃபிரட்டி தங்கியிருந்த அரண்மனைக்குப் போய்ச் சகட்டுமேனிக்குச் சுட்டுத் தள்ளினான். அவ்வளவு தான்...! ஃபிரட்டி எப்படியோ தப்பித்து நாட்டைவிட்டே ஓடிவிட்டார். அடுத்த நான்காண்டுகளில் ஓபோட்டுக்கு வலது கரமாகத் திகழ்ந்தான் இடிஅமீன். 'இதோ ஒரு வீரனைக் கண்டுபிடித்தேன்' என்று அகமகிழ்ந்த ஓபேட், 1971ஆம் வருடம் சிங்கப்பூரில் நடைபெற்ற காமன் வெல்த் மாநாட்டுக்குச் சென்றார். ஆனால், அவர் உடனடியாக நாடு திரும்ப முடியவில்லை. உகாண்டாவுக்கு ஓபேட் திரும்பி வருவதற்குள் நாட்டின் அதிபராகத் தன்னைத் தானே நியமித்துக் கொண்டான் இடிஅமீன். ஓபேட் கண் காணாத இடத்துக்கு ஓடிஒளிந்தார்.

இடிஅமீனுக்கு அடுத்த தலைவலியாக இருந்தது உகாண்டாவின் ராணுவ அதிகாரிகள். 'உள்நாட்டுப் பாதுகாப்புப் பற்றிப் பயிற்சி பெற வேண்டும்' என்ற பெயரில் முப்பத்தாறு உயர் ராணுவ அதிகாரிகளை மகிண்டை என்ற சிறைச்சாலைக்கு வரச் செய்து, அத்தனை பேரையும் அங்கேயே கொலை செய்தான் இடிஅமீன். பழைய இராணுவ தலைமை அதிகாரியாக இருந்த பிரிகேடியர் சுலைமான் என்பவரைக் கொன்று அவரது தலையைத் தனியாக வெட்டியெடுத்து அந்தத் தலையை மாத்திரம் தனது ஃப்ரிஜ்ஜில் வைத்து அவ்வப்போது பார்த்து ரசித்தான் இடிஅமீன்.

இராணுவ அதிகாரிகளை ஒழித்துக்கட்டும் வெறி இத்துடன் அடங்கவில்லை. எம்பாரரா, ஜின்ஜா என்ற இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து கௌரவமான பல அதிகாரிகளை இரா

ணுவ மரியாதையை ஏற்க வேண்டும்' என அழைத்தான் இடி அமீன். வரிசையாக அந்த அதிகாரிகள் நின்று இராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்டிருக்கும் சமயம், டாங்கிகள் உள்ளே நுழைந்து அந்த வரிசையிலிருந்தவர்களை நசுக்கிக் கொன்றது. இன்னொரு இடத்தில் இடிஅமீனின் உரையைக் கேட்கப் பல இராணுவ அதிகாரிகள் அழைக்கப்பட்டு ஒரு பெரிய அறையில் அமர்த்தப் பட்டனர். இடிஅமீனின் கார் வந்து வாயிலில் நின்றது. உடனே அந்த அறையின் கதவுகள் படபடவெனச் சாத்தப்பட்டன. ஜன்னல் வழியாக வெடிகுண்டுகள் அறையினுள் வீசப்பட்டன. அத்தனை அதிகாரிகளும் மாமிசப் பிண்டங்களாக அறையினுள் சிதறிக் கிடந்தனர்.

பதவியேற்ற ஐந்து மாதங்களுக்குள் ஏராளமான இராணுவ அதிகாரிகளைக் கொன்று விட்டு, அந்த இடங்களில் தன் இனத்தைச் சார்ந்த மக்களை இடிஅமீன் வேலைக்கு வைத்தான். அவனுடைய சமையல்காரர்களும், டிரைவர்களும், சர்வர்களும், வாட்ச்மேன்களும் - மேஜர் பதவிகளுக்கும், கர்னல் பதவிகளுக்கும் அமர்த்தப்பட்டனர்.

இந்தக் கொடூரமான செயல்களை விசாரிக்க அமெரிக்காவைச் சார்ந்த நிகலஸ் என்ற பத்திரிகையாளரும், ராபர்ட் ஸீடில் என்ற சமூகவியல் நிபுணரும் இடிஅமீனின் இராணுவ மேஜர் ஜூம்மா (இவர் இதற்கு முன்பு டாக்ஸி டிரைவராக இருந்தவர்) என்பவரிடம் கேள்விகள் கேட்டுத் துளைக்க ஆரம்பித்தனர். பதில் சொல்ல முடியாமல் முழித்த ஜூம்மா, இடி அமீனுக்கு போன் செய்து 'என்ன சொல்லலாம்?' என்று கேட்க, இடிஅமீன் சர்வசாதாரணமாக 'அவர்களைக் கொன்றுவிடு' என்றான். அதே இடத்தில் இரண்டு அமெரிக்கர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இடிஅமீன் பதவியேற்ற ஒரு வருடத்துக்குள் உகாண்டா திவாலாகிப் போனது. ஏராளமான நோட்டுக்களை அச்சடிக்க ஆணையிட்டான் இடிஅமீன். விலையேறத் தொடங்கியது. தற்போதைய விலையில் ஒரு சோப்புக்கட்டியின் விலை முந்நூறு ரூபாய். வெளிநாடுகளில் இடிஅமீன் கேட்ட உதவிகள் மறுக்கப்பட்டன. இவனுக்கு உதவக் கடைசியாக முன்வந்த ஒரே ஒரு நாடு லிபியா. இந்த நாட்டின் சர்வாதிகாரி கடாஃபி ஒரு நிபந்தனை விதித்தார். 'இஸ்ரேலுக்கு எதிராக உகாண்டா போர்க்கொடி தூக்க வேண்டும்' என்பதே அது. சந்தோஷமாக ஏற்றுக் கொண்டான் இடிஅமீன். உடனடியாக உகாண்டாவில்

பல்வேறு கட்டுமானத் திட்டங்களில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலியர்கள் அடித்து விரட்டப்பட்டனர். இந்தத் திட்டங்கள் அப்போது இஸ்ரேல் பண உதவியுடன் உகாண்டாவில் நடைபெற்று வந்தன. அதில் ஒன்று - உகாண்டாவில் என்டபி என்ற இடத்தில் உருவான ஏர்போர்ட். இந்த விமான நிலையத்தின் வரைபடம் இஸ்ரேல் வசமிருந்ததால் பின்னால் நடந்த ஒரு சரித்திரப் புகழ்பெற்ற நிகழ்ச்சிக்கு அந்த வரைபடம் மூலகாரணமாக இருந்தது.

பல லட்சம் யூதர்களைப் படுகொலை செய்த ஹிட்லரே மானசீகக் குரு என்று இடிஅமீன் பிரகடனம் செய்ததோடு, ஹிட்லருக்குக் கம்பாலாவில் ஒரு சிலை வைக்கப் போவதாக அவன் அறிவித்தவுடன் உலக நாடுகள் விழித்துக்கொள்ள ஆரம்பித்தன.

லிபியாவிலிருந்து பெருமளவு பணம் உகாண்டாவுக்கு வர ஆரம்பித்தவுடன் இடிஅமீனின் கிறுக்குத் தனம் அதிகமாகியது. 'தேசிய ஆராய்ச்சி நிலையம்' (State Research Bureau) என்ற பெயரில் ஒரு புதிய போலீஸ் படையை உருவாக்கினான். நம்பகமானவர்கள் என்று கருதப்பட்ட நூற்றுக் கணக்கான பேரை இதில் வேலைக்கு அமர்த்தி, அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக லண்டனிலிருந்தும், பிரான்ஸிலிருந்தும் சொகுசு கார்கள், வீடியோ, டேப்ரிக்காடர்கள், துணிமணிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்து அன்பளிப்பாக அளித்தான்.

1972ஆம் வருடம் என்டபி என்ற இடத்தில் உள்ள அரண்மனையில் ஒரு விருந்தளித்தான் இடிஅமீன். எல்லா விருந்தினர்களும் உணவருந்திக் கொண்டிருந்த போது இடிஅமீன் உள்ளே சென்று தனது பழைய விரோதியான பிரிகேடியரின் வெட்டப்பட்ட தலையை தனது குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்து வந்து விருந்தினர்கள் முன்பாக டைனிங் டேபிள்மீது வைத்தான். அதைக் கெட்ட வார்த்தைகளை உபயோகித்துத் திட்ட ஆரம்பித்தான். அருகேயிருந்த கத்தி, ஃபோர்க் ஆகிவற்றை அதன்மேல் விட்டெறிந்தான். விருந்தினர்களை உடனே வெளியே போகும்படி கத்த, விருந்தினர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்தனர்.

இத்துடன் அவன் அட்டகாசங்கள் நிற்கவில்லை. திடீரென்று ஒரு நாள் இடிஅமீன் ''எனக்கு முன் கடவுள் தோன்றினார்' உகாண்டாவின் பொருளாதாரப் பிரச்சினைக்குக் காரணமே இங்கே வசிக்கும் வியாபாரிகள், மருத்துவர்கள், நர்ஸ்கள

போன்ற தொழிலில் இருக்கும் ஐம்பதாயிரம் ஆசியர்கள்தான் எனவே, இவர்கள் எல்லோரும் உகாண்டாவை விட்டு தொண்ணூறு நாட்களுக்குள் ஓடிப்போய் விட வேண்டும்'' என அறிவிப்பு செய்ததோடு, தினந்தோறும் உகாண்டா ரேடியோவில் இன்னும் அவர்கள் இடத்தைக் காலி செய்ய எவ்வளவு நாட்கள் அவகாசம் இருக்கிறது என இடிஅமீனே அறிவிப்பும் செய்ய ஆரம்பித்தான். பீதியில் சொத்துக்களையும் வியாபாரங்களையும் விட்டு விட்டு ஆசியர்கள் உகாண்டாவை விட்டு அவசர அவசரமாக வேளியேறினர். அவர்கள் விட்டு விட்டுச் சென்ற மருந்துக் கடைகளைத் தேசிய ஆராய்ச்சி நிலைய மோட்டார் மெக்கானிக்களுக்கு இடி அமீன் அன்பளிப்பாக்கினான். துணிக்கடைகளும், கோடௌன்களும் டெலிபோன் ஆபரேட்டர்களுக்கு இனாமாகக் கிடைத்தன. தேசிய ஆராய்ச்சி நிறுவன போலீசாரால் இந்தக் கடைகளைப் பராமரிக்க முடியாமல் எல்லாவற்றையும் விற்றுவிட்டுக் கேளிக்கைகளில் செலவிட்டனர்.

மேலும் பணம் தேவைப்பட்டபோது இடி அமீனின் ஆசீர்வாதத்துடன் ஒரு பயங்கரத் திட்டத்தை தேசிய ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்தவர்கள் செயல்படுத்தத் தொடங்கினர்.

உகண்டா மக்களிடம் தொன்றுதொட்டு இருந்துநிலவிவரும் பழக்கம் ஒன்றுண்டு. இறந்தவர்களுக்கு எப்பாடுபட்டாகிலும் ஈமக்கிரிகை செய்வதைப் பாக்கியமாகக் கருதுபவர்கள். இடி அமீனின் தேசிய ஆராய்ச்சி நிறுவன போலீஸ் சகட்டுமேனிக்கு பொதுமக்களைச் சுட்டுக்கொன்று பிணங்களைப் பதுக்கிவைத்தனர். பின்னர் இறந்தவர்களின் உறவினர்களிடம் 'பிணத்தைத் திருப்பித்தர இவ்வளவு கட்டணம்' என வசூல் செய்து பிணங்களை ஒப்படைத்து பணம் திரட்டினர். உகாண்டாவின் பல்வேறு இடங்களில், புதர்களில், காடுகளில், சாக்கடையில் பிணங்கள் கிடப்பது அன்றாடக் காட்சியாக இருந்தது. பிணத்தைக் காசு கொடுத்து வாங்க ஆளில்லாதபோது, அவை ஏரியில் வீசி எறியப்பட்டு முதலைகளுக்கு இரையாயின. இரவு முழுவதும் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டு பிரான்ஸ் நாட்டுத் தூதரகம் இடி அமீனிடம் புகார் செய்தது. இடி அமீன் இந்தப் பிரச்சினையை எப்படித் தவிர்ப்பது எனத் தேசிய ஆராய்ச்சி நிலையத் தலைவர் மலயமுங்கு என்பவனுடன் கலந்தாலோசித்தான். இந்த மலயமுங்கு முன்பு ஒரு சமயம் மசாக்கா என்ற ஊரில் மேயராக இருந்தவரைக் குற்றுயிரும், கொலையுயிருமாக அடித்துவிட்டு அவருடைய அந்தரங்க உறுப்பை வெட்டித் தன் கையில் எடுத்துக் கொண்டு அவரைத் தரதரவென தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச்சென்று கொன்றவன்,

இடி அமீனும், மலயமுங்குவும் சேர்ந்து சத்தம் வராதபடி ஆட்களைக் கொல்ல புது ஐடியா ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். அந்தத் திட்டத்தின்படி கொல்லப்படவேண்டியவன் சிறையில் தனி அறையில் அடைக்கப்படுவான். ஏற்கெனவே சிறையில் இருக்கும் கைதி ஒருவனிடம் ஒரு பெரிய சுத்தியலைக் கொடுத்து, தனிமையில் இருப்பவனை அடித்துக்கொன்றால் உனக்கு விடுதலை என்பார்கள். அதே மாதிரி கொன்றவுடன் அவனைக் கொல்லஇன்னொருவன் சுத்தியலுடன் உள்ளே வருவான். பல கொலைகள் இந்த மாதிரி குரூரமாக நிறைவேற்றப்பட்டன.

**1974**ஆம் வருடம் தனது நான்கு மனைவிகளில் மூவரை விவாகரத்துச் செய்து வெளியே துரத்தினான். அதில் ஒரு மனைவிக்குக் கருச்சிதைவு ஏற்பட்டு இறந்து போனாள். சவக்கிடங்கிற்கு இடி அமீன் சென்று அவளது உடலைக் கோபமாகப் பார்த்து அருகிலிருந்த டாக்டரிடம் சில உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு தான் இன்னும் இரண்டு மணி நேரத்தில் திரும்பி வருவதாகக் கூறினான். சொல்லியபடியே இடி அமீன் திரும்பி வந்தபோது அவனது கட்டளையை நிறைவேற்றியிருந்தார் டாக்டர், அதன்படி அவனது மனைவியின் உடலிலிருந்து தலையும், கை – கால்களும் வெட்டியெடுக்கப்பட்டிருந்தன. வெட்டி எடுக்கப்பட்ட தலை முதுகுப்புறம் திரும்பிய நிலையில் மறுபடியும் தைக்கப்பட்டிருந்தது. அவளது கால்கள் தோள்களுடன் சேர்ந்து தைக்கப்பட்டிருந்தன. கைகள் இரண்டும் கால்கள் இருக்கவேண்டிய இடத்தில் தைக்கப்பட்டிருந்தன. சின்னா பின்னமாக்கப்பட்ட அவளது உடலைப் பார்த்து மகிழ்ந்தான் இடி அமீன்.

அதே வருடம் ஜூன் மாதம் 28ஆம் திகதி பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தினர் பிரான்ஸ் நாட்டு விமானத்தைக் கடத்திக்கொண்டு உகாண்டாவின் என்டபி ஏர்போர்ட்டில் இறங்கினர். அதில் முந்நூறு பயணிகள் இருந்தனர். இடி அமீனைக் கலந்தாலோசித்து, இஸ்ரேலில் இருக்கும் தங்கள் இனத்தைச் சேர்ந்த ஐம்பத்திமூன்று கொரில்லாக்களை நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர். கோரிக்கை நிறைவேறாவிட்டால் அனைவரையும் சுட்டுக்கொன்றுவிடுவதாகவும் அறிவித்தனர். சர்வதேச அளவில் இதற்கு எதிர்ப்பு அதிகரிக்கவே, தங்களது கெடு நேரத்தை ஜூலை 4ஆம் திகதி வரை நீடித்ததோடு யூதர்கள் (**Jews**) அல்லாத பயணிகளை விடுவித்தனர். பயணிகளில் டோரா என்ற ஒரு பெண்மணிக்கு உடல்நலக் குறைவு ஏற்படவே, அவள் கம்பாலா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள்.

இடி அமீன் பணயக் கைதிகளான யூதர்களை வைத்துக் கொண்டு மிரட்டிக்கொண்டிருக்க, இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ் என்ற இடத்தில் அதிரடிப்படையினர் என்டபி விமான நிலையத்தின் வரைபடத்தைப் பார்த்து ஒவ்வொரு இடத்தையும் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். சிலவருடங்களுக்கு முன் லிபியா அதிபர் கடாஃபியின் கட்டளைப்படி இடிஅமீன் இஸ்ரேலியர் களை வெளியேற்றியபோது அவர்கள் தங்களுடன் எடுத்துவந்த என்டபி விமானநிலைய வரைபடம் இப்போது பெரும்அளவுக்கு உதவியது.

இடிஅமீனின் கெடு முடிவதற்கு முந்தைய நாள் நள்ளிரவில் பணயக்கைதிகள் அடைபட்டிருந்த என்டபி விமானநிலைய டெர் மினஸ் முன்னால் இஸ்ரேலிய விமானம் இறங்கி, அதிலிருந்த அதிரடிப்படையினர் அரை மணி நேரத்தில் அத்தனை பணயக் கைதிகளையும் காப்பாற்றி விமானத்தில் ஏற்றிச் சென்றுவிட்ட னர். அவர்கள் புயலெனப் புகுந்து பணயக்கைதிகளுடன் வெளி யேவருவதற்குள் விமானத்தைக் கடத்திய ஏழு பால்ஸ்தீனிய தீவிரவாதிகளையும், இடிஅமினின் இருபது ராணுவ வீரர்களை யும் சுட்டுக்கொன்றுவிட்டு ஜெட் ஸ்பீட்டில் பறந்தனர்.

இடி அமீனின் ஆத்திரம் தலைக்கேறியது. உடல்நிலை சரி யில்லாமல் கம்பாலா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட டோரா என்ற வயதான பெண்மணியை இடி அமீனின் ஆட்கள் தரதர வென்று மூன்று மாடிப் படிகளில் இழுத்துக்கொண்டே இறங்கி னர் சில நிமிடங்களில் குண்டுகளால் துளைக்கப்பட்ட அவள் உடல் கம்பாலாவின் எல்லையில் ஒரு வயல்வெளியில் கேட்பார் அற்றுக் கிடந்தது. இடி அமீனுக்கு உள்நாட்டிலேயே எதிர்ப்பு கள் வலுக்க ஆரம்பித்தன. பதவியை எப்படியாவது தக்க வைத்துக்கொள்ளத் துடித்தான். உகண்டாவிற்கு அண்டை நாடான டான்ஸானியாவினால் ஆபத்து. போர்வீரர்களே தயா ராகுங்கள் என அறைகூவல் விட்ட இடி அமீன், சில துருப்புக் களை ஏவியும்விட்டான். இதுதான் சமயம் என்று டான்ஸானி யாவின் அதிபர் நைரேரே தனது துருப்புக்களை உகாண்டா விற்குள் அனுப்பி இடி அமீனின் இராணுவத்தை முறியடித்தார். தாளமுடியாத வேதனையிலிருந்த உகாண்டா மக்கள் டான் ஸானியா ராணுவத்தை உற்சாகமாக வரவேற்றனர். இனி தாக்குப்பிடிக்க முடியாது என்ற கட்டம் வந்ததும், 1979ஆம் ஆண்டு இடி அமீன் தனது சொந்த விமானத்தில் ஏறி லிபியாவில் தஞ்சமடைந்தான். இப்போது அவன் சவுதி அரேபியாவில் ஒரு ஹோட்டலில் சொகுசு அறை ஒன்றில் பாதுகாப்புடன் வாழ்வ தாக கூறப்படுகிறது.

உகாண்டாவில் இப்போது மின்சாரம் தடைப்படுவதில்லை.

# உலக சாதனை படைத்தவர்

## உழைப்பின் பலனாகக் கபில்தேவ் வென்றெடுத்த இலக்குகள் (விக்கற்கள்)

— ஆர். மோகன்

(புறன்ட்லைன் - 25.2.1994)

**உறையிலிருந்து கடிதத்தை எடுத்ததும் 20ரூபாய்த் தாழ் கீழே விழுந்தது. "தயவு செய்து இப்பணத் தைத் திருப்பி அனுப்பிவிடாதீர்கள். நீங்கள் உலக சாதனை புரிந்த உடனே காளி அம்மனுக்கு இனிப்புகள் வாங்கிப்படைக்கும் படி வேண்டிக்கொள்கிறேன்" என்று கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. ஒருநாள்உணவின்றிச் சேர்த்த காசை ஒரு வறியவர் அனுப்பியிருந்தார் என்ற உணர்ச்சியூட்டும் கடிதத்தைப் படித்த கபில்தேவ் அம்மனி தனுக்கு நன்றி கூறிக்கடிதம் போடத்தீர்மானித்தார்.**

உலகத் துடுப்பாட்டப் போட்டியில் சிறந்த பந்தாட்ட வீர னுக்குச் சமமான இலக்குகளைப் பெற்றுச்சாதனை படைத்த சில நிமிடங்களில், கபில்தேவ் தன் தாயருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். சடுதியாகப்பாய்து வந்த மக்கள் தொகை யால் தொலைபேசி தொடர்பு தாமதப்பட்டாலும் அவர்களின் செயல், புராணக்கதைகளில் வருவதைப்போல மிக உருக்கமாக இருத்தது. வந்தவர்கள் பெரிய பணக்காரராயில்லாவிட்டாலும் பெருமதிப்புமிக்க பக்தர்கள் போல தாள்களை (ரூபா நோட்டுக் களை பைகளிலிருந்து இழுத்துஎடுத்துக் கபில்தேவிடம் கொடுத் தனர்.) மறுக்சமுடியாத நிலையில் தாள்களைத் தனது பைக்குள் போட்டுக் கொண்டார். கபில்.

சிறப்பற்ற வாழ்க்கை நடத்தும் சாதாரண மக்களிடமிருந்து வரும் இப்படியான பண்புமிக்க செயல்கள் மனதை உருகச்செய் பவையாகும். சிறந்த துடுப்பாட்ட வீரன் என்பதிலும் பார்க்க மேன்மையாக ஒரு தெய்வமாகவே கபில்தேவ் சாதாரணமக்களின் மனதில் பதிந்துவிட்டார் என்பதை அச்செயல்கள் வர்ணிக்கின்றன இந்திய மக்களின் வாழ்க்கையை உயர்வடையச்செய்யும் பேரார்வுச் சின்னமாக அவர் விளங்குகிறார். சாதாரண வாழ்க்கை நடத் தும் மக்களுக்கு அவரின் வெற்றி இயல்பாகவே அவர்களி

அகத்தில் சுடர்ப்பொறியைத் தோற்றுவித்து மகிழ்ச்சி ஆரவாரத்தைத் கொடுத்திருக்கிறது. பலர் அவரைச் சூழ்ந்துநின்று தொடர்ந்து விளையாடவேண்டும் என்று மன்றாடிக் கேட்பதைப் பார்க்கும்பொழுது அவருடைய தனிச்சிறப்பு மேலோங்கி நிற்கிறது கபில்தேவ் இந்தியாவின் கிரிக்கெட் என்ற எண்ணங்கொண்ட மக்களுக்கு, அவர் தனது உலக சாதனையை அடைந்த பின் விளையாட்டிலிருந்து விலகிவிடுவாரோ என்று நினைப்பு வரும்பொழுது மனதில் எப்பொழுதுமில்லாத அச்சம் தோன்றுகிறது. சந்தேகமில்லாமல் தேசிய விளையாட்டாகக் கருதப்படும் இந்தத் துடுப்பாட்டத்தின் இந்திய அணியில் கடந்த 15 வருடகாலமாக அவர் விளையாடுவதைப் பார்த்து மக்கள் பழக்கப்பட்டுவிட்டனர்

மக்களின் மூச்சே கிரிக்கெற் தான். இவர்கள் மைதானத்தில் பகற்கனவு காண்பர். இந்திய அணி ஊசலடும் பொழுது பலமுறை செத்துப்பிழைப்பர் உலகத்துடுப்பாட்டப் போட்டிகளில் எதிரணிகளைச் சந்திக்கவென்று, இலட்சக்கணக்கான மக்களின் அபிலாசைகளைத் தன்னுடன் கொண்டு, முன்செல்லும் வீரப்பெருந்தகையும் துடிப்பான துடுப்பாட்டக்காரருமான இன்முகங்கொண்ட கபில்தேவ் தேசியச்சின்னமாக விளங்குவதில் வியப்பொன்றுமில்லை

இப்படியாக அமையவேண்டுமென்று முன்கூட்டியே வகுக்கப்பட்டுவிட்டது போலும் . வாலிப வயதில் வாலிபப்பயிற்சி முகாமில் பயிற்சியின்போது. மருண்ட குணமுடைய இவர் தனக்கு கூடுதலான சப்பாத்தியும் சப்பியும் வேண்டுமென்று அசட்டுத்துணிச்சலில் கேட்டது அவரது திடமான மன உறுதியைக் காட்டுகிறது. தனக்குச் சரியென்று தெரிந்தால் அதைச்செய்தே முடிப்பார், தான் ஒரு அதிவேக பந்து வீச்சாளர் என்று தன்னைத்தானே விவரிக்கும் பொழுது எல்லாரும் நகைத்தனர். இந்தியன் ஒருவரும் அதிவேக பந்து வீச்சாளர் அல்ல என்று இத்துறை சார்ந்தவர்கள் கருதினதோடு தேசிய பயிற்சியாளரும் அதுபோலவே சொல்லிவிட்டார். சண்டிகர் என்ற ஒரு ஒதுக்குப்புற நகரிலிருந்துவரும் இந்த. சிறுவனால் அப்படியும் எண்ணமுடியுமா என்றனர்.

மிக நீளமானதும் களைப்புமிக்கதுமான பயணத்தின்முடிவில் இந்தப் பந்துவீச்சாளர் ரெஸ்ட் பந்துவீச்சின் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டார். இந்த விளையாட்டின் 117 வருட சரித்திரத்தில் ¬00 உலகப்போட்டி இலக்குகளை எடுத்த சேர் றிச்சாட் ஹட்லிக்குச் சமமான நிலையை கப்பில் எட்டிவிட்டார்.

இப்படியான வெற்றிச் சாதனைக்கு இந்தச் சாதாரண பஞ்சாபிப் பையனின் விடா முயற்சியே காரணமாகும். இவருடைய

தகப்பனார் றாம்லால் நிக்காஞ் இந்தியப் பிரிவினைக்குப் பின் மொன்ற்கொமரி (அப்பொழுது லியால்பூர்) யிலிருந்து சண்டிகாருக்குக் குடும்பத்துடன் குடிபெயர்ந்த ஒரு மரவியாபாரி. இவருடைய உடல்கட்டும் சிறந்த குணாதிசயங்களும் கடைசி மகனான கபில்தேவிடம் கூடுதலாக காணப்பட்டன. இந்தியாவின் கிரிக்கெட் (துடுப்பாட்ட) உணர்ச்சி கபிலின் பகற்கனவாக மாறியது. இவ்வாலிபன் விளையாட்டு வீரனாகும் மனக்கோட்டையில் அதிக நேரத்தைச் செலவிட்டான். இந்தியாவுக்காக விளையாட வேண்டும் என்றும், கிரிக்கெட் நட்சத்திரமாக வேண்டும் என்றும் கனவு கண்டான்.

இப்படியான கனவுகள் எளிதில் ரசித்து உள்ளத்தில் ஏற்கக் கூடிய மன இயல்புள்ளவர்களுக்கு வருவது சகஜமே. ஆனால் கபில்தேவைப் பொறுத்தவரை அப்படியல்ல. அதிவேக பந்து வீச்சாளர்கள் இந்திய அணியிலில்லாததால், அகிலஇந்திய வானொலியில் அவர்களைப்பற்றி சிறப்பாக விளக்கம் தரப்படுவதில்லை இச் சிறுபொறி தீயாக எரியத்தொடங்கியது. 22 யார் நீளமுள்ள பிச்சில் (களத்தில்) துடுப்பெடுத்தாடுபவர்களைக் கலக்கக் கூடிய அளவிற்கு இவரால் நேர்த்தியாகப் பந்து வீசமுடியுமா?

## முதல் டெஸ்ட்

அவரால் முடியும். கபில் தனது முதல் டெஸ்ட் விளையாட்டில் இறங்குகிறார். நாட்டுப்புறப்பையனாகையால் ஆங்கிலத்தில் நன்றாகப்பேச முடியாவிடினும் சிலிப்பிலிருந்த ஒருவர் பந்தைத் தடுக்காமல் அல்லது பிடிக்காமல் விட்டதும் அவர் தன்னிலும் வயதானவராயிருந்தாலும் கபில் ஒரு பார்வைபார்ப்பதே போதுமானது. பய்சலாபாட்டில் ஒரு பாகிஸ்தானியரின் துடுப்பில் பட்டு எழுந்த பந்தைப் பிடிப்பதற்குத் தான் பிழையான பக்கம் விலகியதற்காக, கபில்தேவ் தன்னைக் குற்றங்கண்டதை இன்னும் மறக்கமுடியவில்லை என்று முன்னாள் டெஸ்ற் நட்சத்திரமானவரும் இன்று தேசிய தெரிவுக்குழுவில் முன்னணியில் இருப்பவருமான குண்டப்பா விஸ்வநாத் கூறுகிறார். அதன்பின் பந்துகள் சிலிப்பிலிருந்து தப்பியது குறைவு. கபில் தந்திரநுட்பமாக வீசும் பந்துகள் நேராகவே சிலிப்களின் கைக்குள் சென்றடைந்தன.

பழைய விறுவிறுப்பான பொறிகள் இப்பொழுது குறைவென்றாலும் அவை மறையவில்லை. பழையவிளையாட்டுப் பண்புகள் தேவைப்படும் தற்போதைய உலகப் போட்டிகளில் இன்றும் அவை அவரிடம் நிலைத்து நிற்கின்றன. தொழிற்திறமையின் அனுபவம் ஆதிக்கஞ் செலுத்துவதால் உண்மையில் அவருடைய

கெட்டித்தனத்தின் மதிப்பு மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. பந்து வீசும் திறமையான செயல்பாடு, இயல்பான முறையில் அமைந்திருப்பதால், கிரிக்கெட்டில் எல்லா வகையிலும் சிறந்தவ ராக இருந்தும் (All Rounder) சிறந்த பந்துவீச்சாளராக விளங் குவதற்கு அது உதவியாயிருக்கின்றது. உலகப்புகழ்பெற்ற ஸ்பின் (சுழல்) பந்துவீச்சாளர்களோ அல்லது வேறு கபில் போன்ற வீரர் களோ, அவரைப்போல உலகப்போட்டிகளில் கூடிய பந்து வீச் சுகளைப் புரியவுமில்லை, தங்கள் நாடுகளுக்காகக் கூடிய புதுப் பந்துகளை வீசவுமில்லை.

எதுவாயினும் அவரின் அடிப்படை மனித இயல்பில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. தனது சொந்த மற்றும் அணியினு டைய எதிர்கால நிலை சம்பந்தமாகப் புண்படுத்தக் கூடியகுற்றச்சாட்டுகளில் தங்களைமுழ்கடிக்கும்பொழுது, ஆரம்பத் தில் அவர் வெகுண்டெழுந்தாரேயாயினும் நாளடைவில் முதிர்ந்த அனுபவம் பெற்றவராகச் சிறந்து விளங்கலாயினர். அணித் தலைமைப்பதவி சம்பந்தமான குறைகள் பற்றி இந்திய கிரிக்கட் அரசியலில் இருந்த மயக்கம் நீக்கப்பட்டதாகவும், பந்துவீச்சில் இலக்குகள் வீழ்த்திய சாதனையை அடைவதில் தனக்கு ஏற் பட்ட எதிர்ப்பு மயக்கத்திலிருந்து தெளிந்தவராகவும் கபில்தேவ் இன்று திகழ்கிறார். ஆனால் அவருடைய அடிப்படைக்குணங்களில் ஒரு சிறு தழும்பும் ஏற்படவில்லை.

இளந்துடிப்பான வயதிலேயே தன்தொழிலின் உச்சகட்ட மான ஒல்றவுண்டர் (முழுமையானவிளையாட்டுக்காரன்) என்ற பெயரை எடுத்துவிட்டார். டபிள் எடுப்பதில் மின்னல் போன்ற கபில்தேவ் எல்லோரிலும பார்க்க மிகக்குறைந்த வயதிலேயே கிரிக்கட் விளையாட்டிலுள்ள முழு நில எல்லைக்குறி (சாதனை) பெற்று விளங்குபவராகினார். விளையாட்டின் பல கோணங் களுக்கும் தேவையான வழியில் அவர் கையாண்ட முதிர்ச்சி நிறைவினால் அணித்தலைமைப்பதவி தானாகவே அவரிடம் வந்தடைந்தது. மிகக்குறைந்த வயதில் தலைமைப் பதவியைப் பெற்றிருந்தாலும் அவர் திறமையுடன் செயற்படுகிறார்.

அவருடைய வாழ்க்கை மாறினாலும் அவர்மட்டும் மாற வில்லை. இந்திய விளையாட்டு வீரர்களுள் இலட்சாதிபதியான புதிய அலையில் முதலிடத்திலிருந்த கபில்தேவ், தேசிய மயமாக் கப்பட்ட வங்கியில் அல்லது ஒரு நிறுவனத்தில் பொறுப்பேற்று இருப்பதற்கு வாய்ப்பிருந்தும் கிரிக்கட் தொழிலில் தொடர்ந் திருந்து விளையாடுகிறார். (இந்தியாவில் கிரிக்கட் ஆட்டக்கார ருக்கு இலட்சம் என்பது சிறியகாசாயிருக்கலாம் அன்று, அது

வும் குறைந்த ஊதியங்கிடைத்த காலத்தில், இலட்சம் ஒரு பெரிய தொகையாயிருந்தது)

தாராளமாக நன்கொடைகள் வழங்கியவர்களின் உதவிகளால் ஏனைய இந்தியவீரர்களான முகமட் அசாறுடீன், சச்சின் தெண்டுகா, மனோஜ் பிரபாகர் போன்றவர்களைப்போல இவருடைய வாழ்க்கையும் மிகச்செழிப்பாக அமைந்தது. அப்படியிருந்தும் கபில் தனது எளிமையைக் கைவிடாமலும், பொதுமக்களுடனிருந்த தொடர்புகளைப் புதிய தென்புடன் நேர்மையான வழியில் அணுகியமுறை நாடறிந்ததாகவும் இருந்தமையால், பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு அவர்கள் மத்தியில் கவர்ச்சி வாய்ந்தவராகவும் விளங்குகிறார். இந்திய கிரிக்கெட் அணியில் அடிக்கடி புதிதாகச் சேர்க்கப்படும் இளம் விளையாட்டு வீரருடன் இணைந்து, வயது வேற்றுமை காணாத வகையில் தன்னை அமைத்துக்கொள்வதற்கும் அவரது சாதாரண எளிமையான வாழ்க்கைமுறை மிகவும் உதவியாக இருக்கிறது. அணியின் மிக இளமையான தலைவரின் கீழ் விளையாடுவதில் வேற்றுமையே இல்லாதவழியில் தனது ஒத்துழைப்பை நல்கிறார்.

## குற்றங்காண்பவர்கள்

இரு வருடங்களுக்கு முன்னதாக அவுஸ்திரேலியாவில் மிகவும் எதிர்பாராத முறையில் நன்றாக விளையாடிய கபில், பின்பு ஓட்டமெடுக்கும் வேகத்தில் தொய்வுற்ற நிலையைக் கண்டதும், இதைச்சாட்டாகவைத்து அவர் உலகசாதனை புரிவதற்கு அணியில் ஒட்டிக்கொண்டிருக்கிறார் என்று குற்றங்காண்பவர்கள் சிலரும் இந்திய துடுப்பாட்டத்தின் குழப்பக்காரர்களும் பழித்தும் இடித்தும் உரைக்கத் தொடங்கினர். ஒரு மூத்த விளையாட்டு வீரர் தனது செயல் நோக்கத்திட்டத்தை திருப்பிப் பெறுவதற்கு சிறிதுகாலம் கொடுத்திருப்பதை குற்றங் காண்பவரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் ஒரு ஆட்டத்தில் கைப்பற்றிய இலக்குகளின் வீதம் 3·5 ஆக இருந்தாலும் கடைசி 13 ஆட்டங்களில் 30 இலக்குகளையே பெற்றுள்ளாராதலால் அவருடைய உலகசாதனையின் வீதம் 3·5 திலும் குறைவாகவே காணப்படுகிறது. இவர் எடுத்த காலத்தையும் ஆட்டத்தொகையையும் நியூசிலாந்தின் ஆட்டக்காரரான ஆர். ஜே. ஹாட்லீயின் உலக சாதனைக்கு எடுத்த காலகட்டத்துடனும் ஆட்டங்களின் தொகையோடும் ஒப்பிடமுடியாது. பந்தை சுவிங்செய்து வீசும் நிபுணரான ஹாட்லி தனது 14 வருடகாலத்தில் கபிலிலும் பார்க்க விரைவாக தனது உலக சாதனையைத் தேடிக்கொண்டார் ஹாட்லியின் ஒரு ஆட்டத்தின் வீச்சு 5.01 ஆகும்.

புள்ளி விபரங்களில் வருவதில்லை.

இது உச்சப்புள்ளி பதிவான உடனே அதைமட்டும் மனதில் கொண்டு ஒருவர் உச்சகட்டத்தை அடைந்துவிட்டார் என்று ஒரளவில் வெற்றி ஆர்வத்தைக் கொடுக்கும் ஓர் விளையாட்டு. ஓட்டங்கள் எடுத்த வேகம் அல்லது இலக்குகளை வீழ்த்திய விதம் போன்றவற்றை ஒருவரும் கவனத்தில் எடுப்பதில்லை, இல்லாவிடில் டொன்பிறாட்மன் எடுத்த புள்ளிகளோடு இவருடைய புள்ளிகளை ஒப்பிடமுடியுமா?

டொன்பிறாட்மன் சராசரி 99.96.
29 நூறுகள் 80 இன்னிங்ஸ்களில் 6,996 ஓட்டங்கள் 52 டெஸ்ட்களில்

கபில் 34 நூறுகள் 214 இன்னிங்ஸ்களில் 11,000 ஓட்டங்கள் 153 டெஸ்ட்களில்

மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச பந்துவீச்சுச் சாதனை (248 விக்கற்) அவருடையதே 'இவர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட்டில் 3000 ஓட்டங்களையும் 200க்கு மேற்பட்ட இலக்குகளையும் எடுத்த ஒரே ஒருவர்.

நுட்பமாகவும் சிறந்தவகையிலும் துடுப்பாடுபவரான அஸறுடீன் போன்றவர்களுள்ள அணிக்கு. கூடுதலாக ஓட்டங்களைத் திரட்டிக்கொடுக்கும் கபில்தேவ், 5000க்குமேலான டெஸ்ட் ஓட்டங்களையும் 400விக்கட்களையும் பெற்ற ஒரே ஒரு வீரராகிறார்.

129 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய (பெங்களூர் ஆட்டம்வரை) கபில்தேவ். அலென் போடருக்கு இரண்டாவதாக நிற்கின்றார். கிரிக்கட்விளையாட்டில் தகுதிகுறைந்தவர் என்றல்லாமல், ஒழுங்கு நடவடிக்கைக்காக ஒரே ஒரு ஆட்டத்தைத்தவிர மற்ற எல்லா ஆட்டங்களிலும் துரிதமான நடையில் 1978லிருந்து விளையாடி வந்துள்ளார். (ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது விளையாட்டின் முக்கிய அம்சமாகும்) அவருக்கு இயல்பாகவுள்ள சாமர்த்தியமுறையில் துடுப்பைக் கொண்டு தாக்கி விளையாடிப் பாராட்டுகள் பெறும் செழிப்புப்பற்றி புள்ளிவிபரங்கள் முழுமையாகக் காட்டுவதில்லை. மைதானத்தில் அவருடைய துரிதமான அசைவினால் மிகச்சிக்கலாகத் தெரியும் விளையாட்டையும் இலகுவாகமாற்றிவிடுவார். புள்ளி விபரங்கள் இவறை எல்லாம் காட்டுவதில்லை, கபில்தேவின் மறக்கமுடியாத வீரங்கொண்ட ஆச்சரியமான செயல்களை இன்னும் மறக்கமுடியவில்லை.

1983 இல் உலகக்கிண்ண இறுதி ஆட்டமுடிவு. ஒரு ஓட்டத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. ஆட்டத்தின் முடிவு ஒரு இலக்கை வீழ்த்த வேண்டும். அல்லது ஒரு பந்தைப் பிடிக்க வேண்டும். அப்பொழுது விவியன்றிச்சாட் அடித்தபந்தைப்பிடித்து ஆட்டத்தின் முடிவையே மாற்றி அமைத்தார் கபில்தேவ். இவையெல்லாம் புள்ளிவிபரங்களில் வருவதில்லை.

எந்தச் சூழலிலும் தன் உள்நாட்டின் சாதாரண 'பிச்' களத்திலும் அதிக இலக்குகளை வீழ்த்தும் சிறந்த ஒரே ஒரு பந்து வீச்சாளரான கபில், அணியின் முன்னுரிமையோடு, தனது துணிகர ஆட்டங்களை ஈடுபடுத்த முடியாது கஸ்டப்பட்டார். எத்தனையோ சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் இப்படியான 'பிச்' களில் இடைவிடாது தங்கள் தீரச்செயல்களை திறம்படச் செய்துபார்த்தும் இவர் வந்த இரண்டொரு வருடங்களில் அவர்கள் முடியாமல் விலகிவிட்டனர்.

## இந்திய அணியை உயர்த்திய சாதனை

பிறக்கும்பொழுதே தலைசிறந்தவர்களாகப் பிறந்தவர்களில் கபிலும் ஒருவராவர். இவர் சாதாரண இறுக்கப் பயிற்சிப் பள்ளியிலிருந்து வந்த துடுப்படிவீரனல்ல விளையாட்டு வெளியில் ஆடி வெயிலில் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் விளையாடக்கூடியவர். 'ரண்பிறிச் வெல்ஸ்' இல் நடந்த ஒரு நாள் இன்டர்நாஷனல் போட்டியில் 5 இலக்குகளை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த இவருடைய அணியை ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களுக்கு உயர்த்திக் காப்பாற்றினார். 23 வருட ஒரு – நாள் - இன்டர்நாஷனல் சரித்திரத்தில், விளையாடிய சிறந்த இன்னிங்ஸ்களில் இது ஒன்றாகும். 'அடிப்பதற்கே பந்து' என்ற கருத்துப்பட அற்புதமான தனது இயற்கைப்பாணியில், கலைத்திறச் சுவைகொண்ட விசிறிகளின் விருப்பத்திற்கேற்ப பந்தை அதன் இலக்கில் போய்ச்சேரும்படி ஆடிவிடுவார். கபிலின் நீண்ட கையே அவருக்கு மிகுந்த பயனுடையதாயுள்ளது. சக்தி வீண்போகாததுடன் சிக்கனமாக, அதேநேரத்தில் இலக்கைத் தாக்குவதற்கு ஏதுவாக அவர் கை உள்ளது. அத்தோடு இளம்வயதில் கவர்ச்சியான சண்டிகாரின் நாட்டுப்புற வீதிகளில் பெற்ற ஓட்டப்பயிற்சியும் அவருக்கு இன்றும் நன்மை செய்கிறது.

பந்துவீசும் நுணுக்க முறைகளில் பல மாற்றங்களைக் கையாண்டாரேயாயினும். அவருடைய செயல்முறையில் முன்

போலவே மாற்றமில்லாமல் இருந்தன. சிறந்த உள்நாட்டு பேஸ் பந்துவீச்சு வீரர்களில் விளையாடும்பொழுது காணமுடியாதவகையில் கபில் தன் அனுபவமில்லாத வாலிப வயதிலேயே தேசிய கிரிக்கட் உணர்வை ஊட்டிப்பேணி வந்திருக்கிறார். 1980-81 இல் நடந்த சுற்றுப்போட்டியில் முதலாவதாகக் கலந்து கொண்ட கபில், தன்னிலும் மிக வயது முதிர்ந்த டென்னிஸ் லிலீயின் பந்துவீச்சைக் கவனமாக மிக நுணுக்கத்துடன் பார்த்திருந்ததால், அன்றிலிருந்து அதிவேக பந்து வீச்சாளராகும் எண்ணத்தை மாற்றி நடுத்தர அதிவேக பந்துவீச்சாளராக வேண்டும் என்ற அடிப்படை எண்ணமாற்றம் கபிலுக்கு ஏற்பட்டது. ஒரு அணியில் இலக்குகளை வீழ்த்தும் தனி பந்து வீச்சாளராக இருக்கும் பொழுது அவருக்கு இருபக்கவெட்டும் கிடைக்கும் என்ற எண்ணம் லிலீ அவர்களுடையதே. வேலை கடுமையாக இருந்தால் பயனும் பெரிதாகவிருக்கும். ஏனென்றால் வெற்றிப் பொருளை பங்குபோட சிறந்த வீச்சாளர் குறைவேயாம். இந்த அடிப்படையில்தான் லிலீயின் 355 விக்கற்கள் விழ்த்திய இலக்கை இயன் போத்தம், ஹாட்லி மற்றும் கபில் அகியோர் தாண்டிவிட்டனர். இதை அடுத்து, இம்ரான் கான், மல்கம் மார்ஷல் அவ்விலக்கை அடையக் கூடியகாலம் எடுத்தனர்.

கபிலுடைய பிற்கால கிரிக்கட் வாழ்க்கையில் கூடிய பயனுள்ள மாற்றத்தைக் கொண்டுவந்தவர் ஹாட்லி அவர்களே. இந்த நியூஸிலாந்து வீரர் பந்துவீச்சுக்கலைக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தமை கபிலுக்கு ஒரு உதாரணமாகத் தோன்றியது. கபிலை வீழ்த்த செயல்பட்டவர்கள் அவர் கிரிக்கட் பந்துவீச்சில் வைத்திருந்த ஆர்வத்தை அறியாதவரே அவரின் வியாபார ஈடுபாடுகள் பற்றியே அவர்கள் நோக்கினர் வேண்டாத விஷயமாக அவருடைய செயல் அவர்களுக்குப்பட்டது. ஆனால் அவர்களுக்குத் தெரியாததொன்று என்னவென்றால் '431 ஐத்தாண்ட வேண்டும்' என்ற சுடர் நெருப்பாகி பரவிக்கொண்டிருந்த கபிலின் எண்ணமாகும். 1986-87 வரையில் 300 விக்கற்களைக் கைப்பற்றிய பொழுதுதான் கபில் தனது ஆற்றல் வளத்தை 450 ஆகக் கணக்குப்போட்டிருக்கிறார்.

அவருடைய கிரிக்கட் வாழ்வின் வளர்சிக் காலத்தில் அவரின் வெற்றிக்கு உதவிய வேறொரு சம்பவம். 1989இல் பாகிஸ்தான் சுற்றுப்போட்டி நடந்தபொழுது மனோஜ்பிரபாகர் காட்டிய 'பழைய பந்தை வீசும் கைத்திறன்' ஆகும். விளையாட்டின் புதிய மாற்றங்களோடு வியக்கத்தக்க முறையில் கபில் தன்னை அவற்றிற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப் பழகியிருந்தார். ஒருவரிடம் ஊறிய பழக்கத்தை மாற்றுவது கடினம் என்கின்றனர். அப்படியல்லாமல் கிரிக்கட் விளையாட்டின் புதிய நுட்ப அறிவை ஒன்று சேர்த்து ஏற்கக்கூடிய வகையில் இசைந்து கொடுக்கும் மனப்போக்கைக் கொண்ட பந்துவீச்சாளராக கபில் திகழ்கிறார்.

அவருடைய உறுதிவாய்ந்த தனது பந்து வீச்சு வல்லமையால் போட்டியின் கணிப்பு இலக்குகளைப்பெற்று உலக சாதனையை ஏற்படுத்தியதோடு. மேலும் போட்டிக்குரிய தனது வலிமையை வலிந்து விளையாடி. தனது கிரிக்கெட் அணியின் தேவைகளையும் பூர்த்தி செய்து ஓர் அபூர்வமான இணைப்பை ஏற்படுத்தியுள்ளார். இவற்றிற்கு ஒரு உதாரணமாக, ''வீரர் கிண்ணப் போட்டி'' யில் (Hero Cup Final) கபில் நிலைநாட்டிய தீரச் செயல்களால் கிடைத்த வெற்றியைக்காட்டலாம். பந்துவீச்சாளரின் உலக சாதனையை முறியடித்து புதிய சாதனை ஏற்படுந்தியுள்ள கபில் அவர்களின் வாழ்க்கைப் பாதையில் மாற்றம் ஏற்படுமென்றாலும், நாடு இதற்குமேல் அவரிடம் எதிர்பார்ப்பது அல்லது கேட்பது சரியில்லாதகாரியமாகும்,

அவருக்கு கிடைக்கப் போகும் (குறைத்துக்கூறும்) ஒரு நல்ல தொகையான 2 கோடி ரூபாவும் அவருடைய வியாபார நஷ்டங்களைப் பூர்திசெய்ய உதவியாயிருக்கும், அதிவேக, நடுத்தரவேக, நடுத்தர அதிவேக பந்துவீச்சாளராக, இந்தியரான கபில்தேவ் தீட்டிய மாபெரும் உலகச் சாதனையையொட்டி அரசாங்கம் கிரிக்கட் சபை மற்றும், ஆதரவாளர் அறிவித்த பாராட்டு வெகுமானங்கள் போல, பெரிய தொழிலதிபர்களும் பாராட்டுப் பணப்பைகளை வழங்க முன்வருவர். அவருக்கு கிடைக்க வேண்டிய சகல வெகுமதிகளுக்கும் அவர் தகுதி வாய்ந்தவரே. ஏனென்றால் அவருடைய வாழ்கையிலும் சரி விளையாட்டிலும் சரி எல்லாவற்றிலும் முன்னின்று விளங்குவது அவருடைய பரந்த மனமே எனலாம்.

## அவரது உணர்ச்சி வசமான நேரங்களில் கபில்தேவின் கருத்து

உலகச் சாதனைக்குச் சமனான இலக்கைக் (விக்கட்) கைப்பற்றியபொழுது "அந்த இலக்கான 431வது இலக்கை வீழ்த்திய பொழுது வணக்கத்துடன் மனமார்ந்த நன்றியைச் செலுத்துவதே எனது முதற் கடமையென என்மனதில் தோன்றியது. கடவுளுக்கும், எனது பெற்றோர், மனைவி, அணியினர் மற்றும் இந்நாட்டின் இலட்சக் கணக்கான கிரிக்கற் ரசிகர்களுக்கும் எனது வணக்கத்துடன் நன்றியும் உரியதாகும்.

*431 ஐ அடைந்த உடனே*

"1987 இல் நான் 300 இலக்குகளை வீழ்த்தியபொழுது உலக சாதனையை அடையவேண்டும் என்ற எண்ணம் உருவானது. அன்றிலிருந்து எனது அணியினரும், சிநேகிதர்களும் மற்றும் ரசிகர்களும் என் உடம்பை நல்ல நிலையில் வைத்திருந்து உலகசாதனையை அடையவேண்டுமென்று ஊக்கமளித்தனர். நான் 400 இலக்கை அடைந்ததும், உலக சாதனை எனது பிடிக்குள் வந்துவிட்டது. ஆனாலும் என்னிலும்பார்க்க என்னைச் சுற்றியிருந்தவர்களுக்கே இது ஒரு பாரமாயிருந்தது. உடல் நிலையை நல்ல நிலையில் வைத்துக்கொண்டு மேலும் விளையாட்டைத் தொடர்ந்தால் சாதனையை நிச்சயமாக அடையலாம் என்று எனக்கு நன்றாகத் தெரிந்தது.

*மிகவும் ஊக்கமும் பாராட்டும் தந்த விக்கெட் (இலக்கு) பற்றி*

எனது குறிக்கோளை அடைவதற்கு உதவிய ஒவ்வொரு இலக்கும் எனக்கு முக்கியமானதே. எனது முதல் விக்கெட்டைப் போல நான் எடுத்த கடைசி விக்கெட்டும் எனக்கு ஓரேமாதிரியே. டெஸ்ற் கிரிக்கெட்டின்போது எந்தவிக்கெட்டும் விக்கெட்தானே. வித்தியாசமில்லையே?

*வேகப் பந்து வீச்சுப்பற்றி*

சர்வதேசத் திறன்மிக்க பந்து வீச்சாளர்களை இந்தியாவால் உருவாக்கமுடியும். எங்களால் முடியாதென்று உலகில் ஒருவராலும் சொல்லமுடியாது. உலகத்திலேயே மிகத் தாமதமான விக்கெட்டுகள் இந்தியாவினுடையதால் இந்தியாவில் ஒரு அதிவேக பந்து வீச்சாளரால் சாதனை புரிவது மிகக்கடினம் என்று அவர்கள் சொல்கின்றனர். அவர்கள் சொல்வது சரியல்ல என்று நான் நிரூபித்துக் காட்டுகிறேன். விளையாட்டுப் 'பிச்' சிலும் பார்க்க ஒருவனுடைய கெட்டித்தனமும் அவருடைய உறுதியான மனமுமே வெற்றிக்கு முக்கியம் என நான் நம்புகிறேன்.

*விளையாட்டில் அவரின் தலை சிறந்த சந்தர்ப்பங்களின் போது*

இது எனக்கு உணர்ச்சி மிக்கதொரு நேரம் 1983 இல் நாங்கள் உலகக்கிண்ணத்தை வென்றமை எனது முதலாவது உணர்ச்சி மிக்க நேரம். இரண்டவதாக நான் 400 இலக்குகளை பெற்ற பொழுது. உலகக்கோப்பையோடு அணியின் வெற்றி 400 இலக்கை எடுத்து எனது உணர்ச்சி மிக்க நேரம்.

103804

5 101



அவருடைய வருங்காலத் திட்டம் பற்றி:

நாளையைப்பற்றி நான் நினைக்க விரும்பவில்லை. இன்று நான் பெற்ற வெற்றியையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனது உடம்பை நல்லநிலையில் வைத்திருந்து இந்திய அணிக்கு என் கடமையைச் செய்ய நான் எப்பொழுதும் தயாராயிருப்பேன். தேர்வுக்குழுவிற்கு என்சேவை தேவையெனின் நான் உதவி புரிய எப்பொழுதும் தயாராயுள்ளேன்.

## கபில் தேவ் பற்றிய ஆவணத்தொகுப்பு

| | | |
|---|---|---|
| வயது | — | 35 |
| பிறப்பு | — | ஜனவரி 6, 1959. |
| இடம் | — | சண்டிகார். |
| இருப்பிடம் | — | டில்லி |
| தொழில் | — | விளையாட்டுக்களை மேம்படுத்தல், பத்திரிகைத்தொழில் சார்ந்த கூட்டு நிறுவனம், விளையாட்டுக்கள - நுட்ப ஆலோசனை கூறல். |
| திருமணம் | — | 1982 |
| மனைவி | — | றொமிதேவ் |
| மோட்டார் வண்டி | — | B.M.W, மேர்ஸிடஸ் பென்ஸ் 190 |
| முதல்டெஸ்ற் | — | ஒக்டோபர்16, 1978. |
| | — | பாகிஸ்தான் (எதிர்) |
| முதல் விக்கெற் | — | சாதிக் மொஹமட் பந்துபிடித்தவர் சுனில்கவஸ்கர் |
| முதல்100 ஓட்டங்கள் | — | அந்நாளில் 100 ஓட்டங்களை எடுத்த மிக இளம் இந்திய வீரன் - வயது 20 வருடம் 21 நாள் |
| மட்டுப்படுத்தப்பட்டஓவர் | — | இன்ரநஷனல் 1978 பாகிஸ்தான் எதிர் முதல் விக்கெட் இம்ரான்கானுடையது |
| டெஸ்ட் விளையாட்டுக் களில் | — | பங்களூர் டெஸ்ட் வரை 129போட்டிகள். 1994 ல் சிறிலங்காவிற்கு எதிராக இந்தியாவிற்காக அதிகமான போட்டிகளில் பங்கு பற்றிய சாதனையுடன், 66 போட்டிகளில் பங்குபற்றிய உலகசாதனையாகவும், தொடர்ந்து 63டெஸட் போட்டிகளில்தொடர்ச்சியாகப் பங்குபற்றியமையும். |
| விளையாட்டுக்களில் | — | இந்திய அணி உயர்ந்த எண்ணிக்கையாக 214 ஓட்டங்களை எடுத்தமை |

ஓர் இனிங்சில் 23 முறை 5 விக்கட்டுக்கள் வீதம் எடுத்தார்
ஒரு போட்டியில் 2 முறை 10 விக்கட்டுக்கள் வீதம் எடுத்தார்

நூலகம் யாழ்ப்பாணம்

3162cc

# பூபதியே மாதரசி



கருசுமந்து பெற்றவரின்
கனவுசுமந் தாயா?
உருகிநின்ற கணவனது
உருவைநினைந் தாயா?
பொருதுகின்ற புலிகளினாற்
பெருமையடைந் தாயா?
கருவிழிகள் செருகிடுமக்
கணமதிலே அம்மா!

அரசியலின் சுழிவுகளை
அறிந்தாயு மில்லை!
இரகசியச் சதிகளென
இயற்றியதும் இல்லை!
அரசியென உலகாங்கில்
எதுவிதமாய் வந்தாய்!
சிரமதனைத் தாழ்த்துநிலை.
சிந்தனையைத் தந்தாய்!

ஆற்றலனப் பார்த்திபனின்
அறவழியிற் சென்றாய்!
வேற்றுமொழி வல்லரசின்
வீம்புதனை வென்றாய்!
காற்றொருநாள் பொய்த்திடலாம்
கண்ணெதிரே தாயே!
நேற்றிறந்த நாள்மறைந்து
நின்றுபொய்க்க லாமோ?-

ஆணைகட்டிப் போரடிக்கும்
அன்னைவயல் உண்டு!
தேனையொத்த நாடு; கடல்
மீனினங்க ளுண்டே!
வானைமுட்டி விஞ்சுகின்ற
வளமுயர்ந்து நிற்க
மானமது காத்திடவா
மாபசியைத் தின்றாய்!

☐ இளந்திரையன்